247

# கன்மோகி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்ம

2-MAY 1944



JL
X14:21:5
183091

த்திரை
இதழ்

21. இதழ் 5. மே '44. 88 பக்கங்கள்

…துரை ஸ்ரீ. மலர் 21. இதழ் 5. மே 1944.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

# இந்த இதழில்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஹரே ஸ்ரீ கிருஷ்ணா! குழலூது-படம் | திரு. அ. சுப்ரமண்ய பாரதி | 1 |
| 2. | நாட்டையே குடும்பமாகப் பெற்றவர் | பி. ஸ்ரீ. | 2 |
| 3. | நவீனமுறை தர்மம்-(படம்) | "விருச்சிகம்" | 4 |
| 4. | உன்னத வாழ்க்கை-(கவிதை) | ஸ்ரீ. சுத்தானந்த பாரதி | 5 |
| 5. | தேன் துளிகள் | ,, | 5 |
| 6. | இடத்திற்குத் தகுந்தாற்போல்!-(படம்) | "விருச்சிகம்" | 7 |
| 7. | விவாகம்-விதிவிலக்குகள் | எஸ்.அம்புஜம்மாள் | 8 |
| 8. | விடுகதை 2. | எஸ். அலமேலு அம்மாள் | 9 |
| 9. | சிறுமிகள் சிறப்பிக்கும் நாட்டியக்கலை. | | 10 |
| 10. | மதிப்புரை- | வை. மு. ஸ்ரீ. | 11 |
| 11. | இந்த மாதம்-(2 படங்கள்) | | ,, |
| 12. | எதிர்பாராத சம்பவம் | எஸ். எம். அப்துல் கரீம் | 12 |
| 13. | உதயசூரியன். அத்தியாயம் 5. | வை. மு. ஸ்ரீ. (17-20) | |
| 14. | ஆதிரை வரலாற்றின் அருங்கருத்துக்கள். | தி. நீலாம்பிகை அம்மையார் | 17 |
| 15. | குண்டுக்குமேல் குண்டு | வை. மு. கோ. | 19 |
| 16. | பிறநாட்டுப் பெண்மணிகள் | வினோதினி தேசாய் | 24 |
| 17. | மைத்ரேயி | "குகப்ரியை" | 25 |
| 18. | பாடலாத்ரி அஷ்டகஸ்லோகி- | பாஷ்யகார்ஸ்வாமி | 28 |
| 19. | கோயில். (கவிதை) | பி. ஆர். ராஜசூடாமணி | 29 |
| 20. | ஆயர்பாடியில் ஒரு நாள்- | வித்வான் வி. லக்ஷ்மணன் | 30 |
| 21. | பக்தி:-3 கட்டுரைகளும் 1 சம்பாஷணையும் ஏ. சுந்தரம், ஏ. குஞ்சிதம், என். ஞானம்பிகை, ரங்கப்ரியை. | | 33 |
| 22. | நானா? என் வாயினாலேயா?-(படம்) | விருச்சிகம். | 40 |
| 23. | ராதை அளித்த பரிசு. | வி. லக்ஷ்மி திருவேதி | 41 |
| 24. | அமராவதி நதிக்கரையில் | "அரவிந்தம்" | 49 |
| 25. | மௌனம். | லலிதாதேவி | 52 |
| 26. | அலைமோதல். | ஸாரநாயகி ஜகன்னாதன் | 55 |
| 27. | கதம்பக்கொண்டாட்டம் கவலைத்திண்டாட்டம் | டி. வி. ஜெயலக்ஷ்மி திருவேங்கடாச்சாரி | 59 |
| 28. | பாரதியாரின் சிறந்த பாட்டு. | கோமளவல்லிவேதாந்தம் | 62 |
| 29. | பொறுமை- | ஜெயலக்ஷ்மிஆர்.ஸ்ரீனிவாஸன் | 64 |
| 30. | ஸ்திரீகளும் யுத்தசேவையும் | | 66 |
| 31. | யுத்த அரங்கத்தில் | | 67 |

**இதய ஒலி 65—80 வை. மு. கோ.**


## மேல் அட்டை படம்.

ஆகா! பக்தன் மனம் உவந்து அளித்த அவல்தான் என்ன ருசிக்கின்றது! அதன் சுவையை ஸ்ரீ கிருஷ்ணனின் முகமே காட்டுகிறது. பக்தனும் பரமனும் கொஞ்சும் காக்ஷி என்ன ஆனந்தம்!

## இவ்விதழின் விலை

இவ்விதழில் வழக்கமாக வெளிவருவதைப்போல் சுமார் இரண்டு மடங்கு பக்கங்களும் அதிகரித்த படங்களும் வெளியாயிருப்பினும் நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து விலை 2 அணாதான் அதிகரித்திருக்கிறோம்.

மானேஜர்.




183091
சென்னை

# மகிழ்ச்சி உதயம்.

இரண்டு வருடகாலமாக குறைந்த பக்கங்களுடன் நிறைந்த சுவையுடன் கூடிய மோகினியைப் படித்து இன்புற்ற உங்களுக்கு இச் சித்திரை இதழில் இரட்டிப்பான விருந்து அளிக்க உதவியதற்கு சர்க்காருக்கு உங்கள் சார்பாகவும் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது கடமை அல்லவா? இவ்விதழைக் கையிலெடுக்கும்போது "தாரண வருடத்தில் சாதாரண நிலைமை ஏற்படவேண்டும்" எனப் பிரார்த்தித்தற்கு மனமிரங்கி பகவான் இந்த அம்சத்திலாவது கிருபை செய்தாரேயென்று சந்தோஷப்படவேண்டும். சாதாரணமாக வெளிவரும் அளவைப்போல் இரண்டு மடங்கு கொண்டுள்ள இவ்விதழில் உருப்படிகளும்; படங்களும், பலதரப்பட்ட தமிழ் விருந்தும் உங்களைப் பெரிதும் மகிழ்விக்குமென்று நம்புகிறோம்.

## ஸ்த்ரீ எழுத்தாளர்களும்

## மோகினிச் செல்வியும்

நமது மோகினியில் "ஸ்த்ரீ எழுத்தாளர்" என்ற தலைப்பில் வாழ்க்கைக் குறிப்புகள் வெளியிட்டதாலும், சென்ற இரண்டு ஆண்டுமலர்களிலும் பல சகோதரிகளுக்கு இடமளித்து உத்ஸாகப்படுத்தியதாலும் ஏற்பட்ட பலன் எழுத்துலகில் புதிதாகப் பிரவேசிக்கும் —பிரவேசிக்க விரும்பும்—சகோதரிகள் மோகினியையே பெரிதும் நம்பியிருப்பதுதான். ஸ்த்ரீகளின் சொந்தப் பத்திரிகை என்று சொல்லக்கூடியது 'மோகினி' ஒன்றுதானே! அதனால் அவர்கள் அதையே நம்பியிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. இது சம்பந்தமாக வந்துள்ள பல கடிதங்களுள் சிலவற்றைமட்டும் (சில பகுதிகள்) இங்கு குறிப்பிடலாம்:—

1

"......தாங்கள் ஸ்த்ரீகளுக்குச் செய்யும் தொண்டை வர்ணிக்க இயலாது. உங்களது அரிய கதைகள் மூலமாகவும், மேலும் நம் தேசத்தின் ஸ்த்ரீரத்னங்களின் வாழ்க்கைக் குறிப்புகளின் மூலமாகவும், பல வீர ஸ்த்ரீகளின் சரித்திரக்கதைகளின் மூலமாகவும், நமது சகோதரிகளுக்குத் தெய்வபக்தியும், தேசபக்தியும், பதிபக்தியும், மனதில் நற்சிந்தனையும், கல்வியில் ஆர்வமும் உண்டாகுமாறு செய்த பெருமை உங்களையே சேர்ந்தது......நீங்கள் உங்கள் பத்திரிகை மூலம் நமது சகோதரிகளுக்குச் செய்யும் தொண்டை எனது மனம் கற்பனை செய்யும்போது மேற்படி அம்சங்களெல்லாம் என் மனக்கண்முன் தோன்றி பரவசமுறச்செய்யும்... எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் உங்கள் பத்திரிகை படிப்பதில் ஆவல் அதிகம். மாதம் ஒருமுறை வருகிறதே, வாரத்திற்கொருதரம் வந்தால் நல்லது என்று நினைப்போம். நீங்கள் ஸ்த்ரீ எழுத்தாளர்களைப்பற்றி எழுதிய விஷயங்களைப் படித்ததும் என் மனதில் ஊக்கமும் தைரியமும் உண்டாயிற்று. நான் முதன்முதல் எழுதிய சிறு கதையை உங்களுக்கு அனுப்புவதென்று தீர்மானித்து அனுப்பியுள்ளேன்......"

தஞ்சை. 18-12-43. லக்ஷ்மி திருவேதி

## 2

"......வெகு நாட்களாகவே சிறு கதைகள் எழுதி பொது மக்களின் பேராசியைப் பெறுவதுடன் இதன் மூலம் தமிழ்நாட்டிற்குத் தொண்டாற்றவேணும் என்பது எனது பேரவா. எந்த பத்திரிகைக்கு எழுதி அனுப்புவது? யார் நம்மை சட்டைசெய்து ப்ரசுரம் செய்வார்கள் என்று ஏங்கிக்கொண்டிருந்தேன்......என் ஆவலைப் பூர்த்திசெய்யும் ஆத்மா நீங்கள் ஒருவரேதான் என்று தீர்மானித்தேன். முதன் முதலாக ஒரு கட்டுரை எழுதி இத்துடன் அனுப்பியிருக்கிறேன்......"

சேத்துப்பட்டு. 17-12-43. ஸாரநாயகி ஜெகன்னாதன்

## 3

"தங்களது செல்வி மோகினியை...தொடர்ந்து வாசிக்கிறேன். தற்போது அதில் ப்ரசுரிக்கும் ஸ்த்ரீ எழுத்தாளர்களை வாசிக்குந்தோறும் எமக்கும் கதை எழுத ஆர்வமேற்படுகிறது. மோகினித்தாயினருளால் இத்துடனோர் சிறுகதை எழுதி அனுப்பியிருக்கிறேன். தாங்கள் அனுபவம் வாய்ந்த ஆசிரியராயிருத்தலால் இக்கதையிலுள்ள வழுக்களைத் திருத்தி தங்கள் மோகினியிலேயே பிரசுரிக்கும்படி வேண்டுகிறேன். மேலும் நான் கதை எழுதும்படி என்னை ஆசிர்வதித்து......ஆர்வமூட்டும்படியும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்......"

மட்டக்களப்பு. 21-9-43 செல்லம் வேலுப்பிள்ளை

## 4

"......தயைகூர்ந்து என்போன்றவர்களின் மனதில் ஊறும் கற்பனை ஊற்றுகளைப் பெருக்கும் தேக்கமாய் உதவிபுரிந்து மேலும், மேலும் இத்துறையில் ஊக்கத்தைக் கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொள்கிறேன்... ஸ்த்ரீ சமூகம் முன்னேற்றமடையப் பாடுபடும் தங்களை மற்றொருமுறை வேண்டிக்கொள்கிறேன். எத்தனையோ கதைகள், கட்டுரைகளை எழுதி கிழித்தெறிந்துவிட்டேன். கடைசியில் திடமனதுடன் தாங்கள் ஆதரிப்பீர்கள் என்று எண்ணி இதை அனுப்பியிருக்கிறேன்......!'

மதுரை. 31-1-44 ஸௌந்தாலக்ஷ்மி

## 5

"உன்னையும் எங்களுடைய மாசிகையான மோகினிச் செல்வியையும் வாழ்த்துகிறேன். பல்லாண்டுகள் மோகினி சிறப்புற வாழ்ந்து எங்களுக்கு மகிழ்ச்சி உதயம் செய்ய வேண்டுகிறேன்......நவநாகரீகத்தினால் கெட்டு, பின் மனம் மாறினதாக ஏன் ஒரு கதை எழுதக்கூடாது என்று தோன்றியது. அதன்படியே இதோடு ஒன்று எழுதி நம்முடைய ஸ்த்ரீ சமூகத்தின் பத்திரிகையான ஜகன்மோகினிக்கு அனுப்பியிருக்கிறேன்......"

ஈரோடு. 4-4-44. பாகீரதி

சகோதரிகள் இவ்வாறு அன்புடன் எழுதுவது அவர்களுக்கு மோகினி இடம் உள்ள அபார அன்பையும், அது தங்கள் சொந்தப் பத்திரிகை என்ற அபிமானத்தையும் காட்டுகிறது. புதிய ஸ்த்ரீ எழுத்தாளர்களுக்கு உத்ஸாகமளிக்க மோகினி என்றுமே தயங்கியதில்லை. சிலருக்கு இவ்விதழிலும், சிலருக்கு நந்தவனத்திலும் இடம் கிடைத்திருக்கின்றன. காகிதப்பஞ்சம் காரணமாக பல இடையூறுகள் யுத்தகாலத்தில் இருந்தே தீரும் என்பது எல்லோரும் அறிந்ததே. இவ்விதழில் அதிகப் பக்கங்கள் வெளியிட முடிந்ததால்

பல புதிய எழுத்தாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் இடம் கொடுத்துள்ளோம். அவ்வப்போது காகிதநிலைமை இடங்கொடுக்கும்போதெல்லாம் இவ்வாறு பலருக்குத் திருப்தியளித்து, அவர்களது உத்ஸாகமும் ஊக்கமும் அதிகரிக்கும்படிச் செய்வதே எமது நோக்கம்.

## புதிய அம்சம்

ஒரே விஷயத்தைப்பற்றி நாலுபேர் நாலுவிதமாகச் சொல்வார்களல்லவா? நமது சகோதரிகளின் கற்பனையும், மனப்பான்மையும் எவ்விதமிருக்கிறதென்பதைக் காட்ட ஒரே விஷயத்தைப் பற்றி பலபேர் எழுதியதில் சிலதைத் தேர்ந்தெடுத்து வெளியிட உத்தேசித்திருக்கிறோம். இவ்விதமில் பக்தி என்ற தலைப்பில் 3 கட்டுரைகளும் 1 சம்பாஷணையும் வெளியாகியிருக்கின்றன. அதேபோல் திருப்தி என்ற தலைப்பில் சில கட்டுரைகளை வெளியிடத்தீர்மானித்திருக்கிறோம். சகோதரிகள் தங்களுக்குத் தோன்றியதை எளிய நடையில் மோகினியில் 2 பக்கங்களுக்குமேல் வராதபடி எழுதியனுப்பவும். சிறந்ததெனக் கருதப்படும் 4 கட்டுரைகள் பிரசுரிக்கப்படும். இளம் ஸ்த்ரீ எழுத்தாளர்களுக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பத்தையும், ஊக்கத்தையும் அளிக்குமென நம்புகிறோம். 15-5-44க்குள் சேரும்படி அனுப்பவும்.

---

சித்திரை பிரார்த்தனை — மோகினிக்கு அன்பளிப்பு

## புது வாழ்க்கை

புதிய வாழ்க்கை வேண்டும்-எங்கும்
பொதுநடஞ்செய் இறைவா-நல்ல
மதிப்பொலிவு வேண்டும்-மன
மடமை நீங்க வேண்டும்.

உள்ளன் போங்க வேண்டும்-உலகம்
ஒன்று சேர வேண்டும்-தூய
பிள்ளை நெஞ்சம் வேண்டும்-பொருமைப்
பீடை யொழிய வேண்டும்.

பொய்யொழிய வேண்டும்-ஆசைப்
போரொழிய வேண்டும்-உலகில்
வெய்ய குண்டுச்சத்தம்-இன்றி
வேதம் பாட வேண்டும்.

ஏசுகிருஸ்தின் அன்பு-முஹம்மதின்
இணையி லாத பக்தி-மணி
வாசகர்தம் ஒருமை-அப்பரின்
மனவுறுதி வேண்டும்.

புத்தர் சாந்த முடனே-கீதை
புகலுங்கர்ம யோகம்-செய்து
சத்தியஸன் மார்க்க-நேயந்
தழைக்க வேண்டு கின்றோம்.

சுத்தானந்த பாரதி

ஜகன்மோகினி

"JAGANMOHINI," ILLUSTRATED TAMIL MONTHLY

## ஹரே ஸ்ரீ கிருஷ்ணா! குழலூது

நாடுவிளங்கக் குழலூது நல்லார் விளங்கக்-குழலூது
வீடுவிளங்கக் குழலூது-வீரர் விளங்கக் குழலூது
மாடுகளிக்க மயில்களிக்க மங்கைகோபியர் மனங்களிக்கக்
காடுகளிக்கக் குழலூது கண்ணா ஊது குழலூது
மணிவண்ணா ஊது குழலூது.




| கவிதை | படம் |
|---|---|
| வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி. | "குஞ்சரன்" |

ஜ—1 1—5—44

# நாட்டையே குடும்பமாகப் பெற்றவர்

"அம்மா, நீ எங்கேயிருந்து வருகிறாய்?" என்று கேட்ட சோழ மன்னனை நோக்கி ஔவையார்,

**கால்நொந்தேன், நொந்தேன், கடுகி வழிநடந்தேன்;**
**யான்வந்த தூரம் எளிதன்று:-கூனல்**
**கருந்தேனுக்(கு) அண்ணாந்த காவிரிசூழ் நாடா!**
**இருந்தேனுக்(கு) எங்கே இடம்?**

என்று பதில் சொன்னாராம்.

ஊருமில்லை, காணியுமில்லை, உறவுமில்லை,—நாடோடி. ஆனால் இந்த நாடோடிக்கு நாடெல்லாம் உறவு. தமிழகத்தில் இவர் சஞ்சாரம் செய்யாத நாடுமில்லை, காடுமில்லையென்று சொல்லலாம். ராஜதானிகளில் சஞ்சரித்ததுபோல் இவர் குக்கிராமங்களிலும் சஞ்சரித்திருக்க வேண்டும். நாகரிக மக்களை அறிந்திருந்ததுபோல் அநாகரிக ஜனங்களையும் அறிந்திருந்தார் என்று சொல்லலாம். பண்டிதர்களோடு பழகியவர் பாமரர்களோடு பழகி அவர்களையும் உயர்த்த முயன்றாரென்றும், அரசர்களுக்கு வேண்டியவராயிருந்தவர் ஏழைகளோடு ஏழையாய்ப் பழகி உறவாடுவதில் விசேஷ விருப்பம் கொண்டிருந்தாரென்றும் ஊகிக்க இடமுண்டு.

பெரும்பாலும் ஏழைகளோடு பழகிக் கூழைக் குடித்து எளிய வாழ்க்கை வாழ்ந்தார் ஔவையார்.

ஔவையார் மணஞ்செய்து கொள்ளவில்லையென்றும், பரதேசியாகத் திரிந்து யோகினியாகக் காலம் கழித்தாரென்றும் சொல்லுகிறார்கள். எனினும் இவர் வாழ்க்கை அன்புமயமாகவும் காதல் மயமாகவும் கழிந்தது. குடும்பத்திற்கு உரிய காதல் தமிழ்க் காதலாகவும் தமிழ்நாட்டுக் காதலாகவும் பரிணமித்தது. இவர் அன்போ, தமிழ்நாட்டுத் தலைவர்களையும் ஏழை ஜனங்களையும் ஒருங்கே சகோதரர்களாகப் பாவித்து மகிழ்ந்தது; அவர்களுடைய சுகதுக்கங்களைப் பங்கிட்டுக்கொண்டது.

## நாட்டபிமானம்

வேழம் உடைத்(து) மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;-பூழியர்கோன்
**தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்-தொண்டை**
**நன்னாடு சான்றோர் உடைத்து**

[வேழம்-யானை. உடைத்து-உடையது. மேதக்க-மேன்மையான. பூழியர்-(இங்கே) பாண்டியர்.]

என்று தமிழ்நாட்டின் பிரதானமான பகுதிகளைப் பாடுகிறவருக்குப் பொதுவாகத் தமிழ்நாட்டபிமானமும், சிறப்பாகத் தொண்டை நாட்டபிமானமும் உண்டு என்று ஊகிக்கலாம். "சோழ வளநாடு சோறுடைத்து" என்று பாராட்டியவர், "தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே!" [தார்—மாலை] என்று சோழமன்னனைப் பாராட்டியிருக்கிறார்.

அரசனுயர்வு குடிகளின் உயர்வையே பொறுத்ததென்பதும், குடிகளுக்குப் பணி செய்வதே அரசாங்கத்தின் கடமை என்பதும் ஔவையார் கொள்கை. எனவே சோழ ராஜனுக்கு மகுடாபிஷேகம் ஆனபோது வித்வ ஜனங்களெல்லாம் அரசனை வாழ்த்த, ஔவையார் "வரப்பு உயர!" என்று ஏழை ஜனங்களையும் அவர்களுடைய முக்கியமான தொழிலாகிய உழவையும் வாயார வாழ்த்தினாராம்.

சோழ ராஜதானியாகிய உறையூரிலே, சோழமன்னனுடைய யாக மண்டபத்திலே, ஒருசமயம் சேரனும் பாண்டியனும் சோழனோடு மனம் ஒத்து வீற்றிருந்தார்கள். தமக்குள்ளே அடிக்கடி விரோதங்கொண்டு போர் செய்துகொண்டிருந்த தமிழ்வேந்தர் மூவரும் ஒருங்கே கூடியிருப்பதைக் கண்டதும் ஒளவையார் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்.

## ஒற்றுமையின் அவசியம்

இவர் அவர்களை நோக்கி, "அந்தணர்கள் இந்திரிய ஜயத்தோடு வளர்த்த முத்தீ என்று சொல்லப்படும் மூன்று தீயையும்போல் ஒற்றுமையோடு அழகாக விளங்கும் அரசர்களே! இப்படி நீங்கள் கூடி வாழ்வதால்




உண்டாகும் பெருமையையும், பொதுஜன நன்மையையும் என்னால் அளந்து சொல்ல முடியுமா? உங்கள் வாழ்நாள் நட்சத்திரத்தைக் காட்டிலும், மழைத் துளியைக் காட்டிலும் பெருகுவதாக!'' என்று வாழ்த்தினார்.

"ஒன்றாகக் காண்பதே காட்சி'' என்ற வேதாந்த உண்மையைத் தமிழ் நாட்டின் அரசியல்-துறையிலும் ஒளவையார் கண்டு களிக்க விரும்பினார் என்று தோன்றுகிறது. ஆனால் இந்த அரசியல்-ஞானம் தமிழரசர்களின் உள்ளத்திலே ஊன்றி வளர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்த ஞானம்தான், அரசர்களை வாழ்த்தியதுபோல் ஒளவையாரை ஏழைமக்களோடும் கலந்து உறவாடச் செய்து, அவர்களையும் வாழ்த்திப் பாடும்படி தூண்டியது; அவர்களுடைய க்ஷேமமும் நல்ல வீரமன்னர்களுடைய க்ஷேமத்தைப்போல நாட்டுக்கு இன்றியமையாதது என்றும் கருதச் செய்தது.

## பொதுஜனங்களே முக்கியமானவர்கள்

அரசர்களின் க்ஷேமத்தைக்காட்டிலும் குடிகளின் க்ஷேமமே மேலான

தென்றும், அரசாங்கத்தின் க்ஷேமத்திற்குக் குடிகளின்க்ஷேமமே அடிப்படையானதென்றும் ஒளவையார் கருதினர்.

இவர் உயர்வுதாழ்வு கருதவில்லை; ஆண் பெண் என்ற வடிவுவேற்றுமைபற்றியும் உயர்வு தாழ்வு கருதவில்லை. தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நல்வாழ்வு வாழவேண்டுமென்பதும், ஏழைகளுக்கு உதவிசெய்வதே அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் முக்கியமான கடமையாகுமென்பதும் ஒளவையாருடைய அரசியல்-ஞானத்தின் ஸாராம்சம் என்று சொல்லலாம்.

## என்றும் பாட்டி தான்

எத்தனையோ கதைகள் வழங்கியபோதிலும், எத்தனையோ ஊகங்கள் செய்யப்பட்ட போதிலும், தமிழ்நாட்டையே தம் குடும்பமாகக்கொண்ட ஒளவையாரின் பெயர்கூட நமக்குத்தெரியாது! 'ஒளவை' என்ற பதத்திற்கு, 'தாய்' 'பாட்டி' 'கிழவி' என்று பொருள். வயதிலும் அனுபவத்திலும் அறிவிலும் முதிர்ந்து குழந்தைகளைத் திருத்தும் தாய்போல் நல்ல போதனைகள்செய்து பொதுமக்களைத் திருத்த முயன்றதால், இவரை ஜனங்கள் 'ஒளவை' என்று அழைத்திருக்கக் கூடும். இந்தப் பெயர், ஒளவையாருக்குப்பெற்றோர் இட்டிருந்த பெயரையும் நாளடைவில் மறைந்துபோகும்படி செய்துவிட்டது.

## ஒருவரா ? பலரா ?

என்றும் பாட்டியாகத்தான் ஒளவையார் நம் கண்முன் வருகிறார். அமிர்த மயமான ஒரு நெல்லிக்கனியை உண்டு இவர் சாகாமல் நெடுங்காலம் வாழ்ந்தாராம். காரைக்காலம்மையார் பேயுருவைச் சிவபெருமானிடம் வேண்டிப் பெற்றதுபோல், ஒளவையாரும், அந்தப் பெருமான் மீதுள்ள பக்தியால் இளமையையும் உலக இன்பங்களையும் விரும்பாமல், சிவகிருபையால் கிழவி-வடிவம் அடைந்தாரென்று கூறுவோரும் உண்டு.

இப்படிப்பட்ட கதைகளெல்லாம், பலவேறு காலங்களில் பலவேறு ஒளவையார்கள்—அதாவது தமிழ்ப் பாட்டிமார்—கவிபாடக் கூடியவர்களாக இருந்திருக்கக் கூடும் என்பதை மறை பொருளாகக் காட்டுகின்றன என்று ஊகிக்கலாம்.

## கோவில்

ஒளவையார் கோவில் ஒன்று தஞ்சை ஜில்லாவில் திருத்தருப்பூண்டித் தாலுகாவில் இருக்கிறது. அங்கும் ஒளவையார் விக்கிரகம் கிழவி—வடிவமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது.




### நவீனமுறை தர்மம்

ஸ்ரீமதி தர்மவதி:—உனக்கு பிச்சைபோட அரிசி இல்லை. அதோ இருக்கும் A. R. P. ஆபீஸில் கேட்டால் உனக்கு ரேஷன் கார்ட்டுக்கு ஏற்பாடுசெய்வார்கள். ரேஷன்கார்ட் வாங்கிவந்தால் ஒரு நாளைய ரேஷனுக்கு வேண்டுமானல் பணம் தருகிறேன்.

# உன்னத வாழ்க்கை

சுத்தானந்த பாரதி

**உசேனிராகம்** **ரூபகதாளம்**

என்னென்ன வந்தாலும்—உலகில்
இன்பந் துறையாடில்
உன்னத வாழ்க்கையருள்—இறைவா
உள்ளப் பரம்பொருளே !

ஆறு கலந்தாலும்—உடனே
ஆவியாய்ப் போனாலும்,
மாறுபடாக் கடல்போல்—என்
மனமிருக்க வருள்.

பாரெங்கு மேநிறைந்தும்—எங்கும்
பற்றற்ற காற்றினைப்போல்,
போராடும் பூமியிலே—சுதந்தரம்
பொலிந்து வாழவருள்.

மாசுறு சேயினையும்—தாய்
மஞ்சன மாட்டிமிகத்
தேசுறச் செய்வதுபோல்—மனத்
தீமை துடைத்தருளாய் !

மீனிர உற்றாலும்—கார்
மேகங் கவர்ந்தாலும்,
பால்நில வுற்றாலும்—பகலொளி
பாய்ந்து பரந்தாலும்,
வான விரிவினைப்போல்—நிலைக்கும்
வாழ்வை யெனக்கருள்வாய்—
மோன வெளியினிலே—துலங்கும்
முத்தி மணிவிளக்கே !

2-MAY
MADRAS

ஸ்ரீ. சுவாமி சுத்தானந்த பாரதியார்

# தேன் துளிகள்

வண்டுகள் காலை மலர்களில் தேன்சேர்க்கின்றன; ரசிகர்கள் புதுப்புது நூல்களில் தேன்சேர்த்து, உள்ளாரப்பருகுகிறார்கள்; பூந்தேன் பசிக்கு விருந்து; கவித்தேன் அறிவுக்கு விருந்து. அதிகாலை மூன்றுமணிக்கே எழுந்து நான் யோகமுறைப்படி என் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தயாராயிருப்பேன். ஐயர் நாலரைமணிக்கெழுந்து ஐந்தரை மணிக்குள் அனுஷ்டானங்களை முடிப்பார். பிறகு உதயசூரியனைப்பார்த்ததும் புத்தகசாலைக்குச் செல்வோம், நேற்றுவந்த புதியபுத்தகங்கள், சஞ்சிகைகள், உயர்ந்த இலக்கியங்கள்-இவற்றைப் பரபரப்பாகப் பார்ப்பதும், அங்குமிங்கும் ரசமான பகுதிகளைக்கண்டு குறிப்பதும் எங்கள் வேலை. உயர்ந்தகருத்துள்ள கவிதை, கட்டுரைகளைக்கண்டால், புதையல்

கண்டதுபோல் குறித்துக்கொண்டு நான் ஐயரிடம் உரக்கப்படிப்பதுண்டு. அவர் அதைப்போன்ற பிறஆசிரியர்கள் கருத்தைச் சொல்வார், அதிலிருந்து பலநூல்கள் வெளிவரும் புத்தகசாலையை ஒரு குலுக்குக்குலுக்கி ஆராய்ந்து தீர்ப்போம்.

ஒருநாள் நான் சூரியநமஸ்காரம் செய்துவிட்டுப் புத்தகசாலைக்குள் நுழைந்தேன். 'மில்தனின் சுவர்க்கநஷ்ட காவியம்' அழகான பதிப் பொன்றை ஐயர் முதநாளே சென்னையிலிருந்து வாங்கிவந்தார். மில்தனே ஐரோப்பாவின் அருட்கவி என்பது எனது அபிப்பிராயம். நான் புத்தகத் தைப்பிரித்தேன். ஐந்தாம்பாகம் வந்தது—மில்தனில் கவிச்சுவை நிரம்பிய பகுதி அதுவே. காலை புலர்கிறது; ஏவாள் தான்கண்ட தீக்கனவை ஆதா மிடம் சொல்லுகிறாள். ஆதாம் ஆறுதல்கூறுகிறான்; இருவரும் காலை உணவு கொள்கின்றனர். அச்சமயம் ரப்பேல் (Raphael) என்னும் தேவன் வந்து "சாத்தான்வலையில் பட்டுவிடாதீர்கள்; கவனம்" என்று எச்சரிக்கை செய்து அவன் கடவுளுக்கு எதிராகப்புரட்சிசெய்த கதையைச்சொல்லு கிறான். காலைவர்ணனையைப் படித்தேன்.

> Now morn her rosy steps in the eastern clime
> Advancing sowed the earth with orient pearl.

இப்போது காலைக்கன்னி கீழ்த்திசை ஏறித் தன் அருண முத்தை உலகில் விதைத்தாள்!...

அந்த முதல்பத்தியில் எத்தனை இனிய தேன்துளிகள் பாருங்கள்.

Aurora's fan lightly dispersed his sleep [உஷையின் விசிறி அவன் உறக்கத்தை மெல்லக்கலைத்தது] Her beauty whether waking or asleep shot forth peculiar grace [விழிப்பிலும் உறக்கத்திலும் அவள் அழகு அதிக சோபையை வீசியது] with voice mild as when zephyrus on Flora breathes. [செடிகளில்உயிர்க்கும் தென்றல்போன்ற மெல்லிய குரல்]

இவற்றில் எவ்வளவு கவிச்சுவை பொதிந்திருக்கிறது! வரிக்குவரி இப்படியே தேனுண்ணலாம். ஆதாம் தம்பதிகளின் காலைவணக்கத்திலே தான் எவ்வளவு ஆவேசமும், பரவசமும் காண்கின்றன! அது ஒரு சிறந்த அருட்பாசுரமாக விளங்குகிறது. பாஷை எதுவானலென்ன! உள்ளெழுச்சி யும் உண்மைவிளக்கமும் பார்த்தால் கேனோபநிஷத்தைப்பாடிய ஆவேச வாணிதான் மில்தனுள்பாடியிருக்கிறாள். மில்தனின் காலைப்பாட்டு எங்களைப் பரவசப்படுத்தியது; உடனே மனத்தேனீ கம்பமலரில் வட்டமிட்டது:—

> மீனுடை எயிற்றுக் கங்குல் கனகனை வெகுண்டு, வெய்ய
> கானுடைக் கதிர்கள் என்னும் ஆயிரங் கரங்கள் ஒச்சித்
> தானுடை உதயம் என்னும் தமனியத் தறியினின்று
> மானுட மடங்கல் என்ன வந்தனன் வயங்கு வெய்யோன்!

கம்பன் கவிப்பிரம்மா! அவன் மில்தனை வெகுதூரம் மிஞ்சிவிட்டான்! ஜடத்தில் சித்தைப்படைக்கும் ஆற்றல் கம்பனிடம் மிகுதி. மில்தன் காலை யை அழகிய கன்னியாக வர்ணித்தான். கம்பன் கம்பீரமான நரசிம்மாவதார மாகவே வர்ணிக்கிறான். இரவு நட்சத்திரப்பற்களுடைய இரணியாசுரன்; அவனைக்கொல்லவருகிறார் சூரியநரசிம்மர், எப்படி; ஆயிரம் வெப்பக்கதிர் களான கைகளை ஓச்சி உதயகிரியான தூணைப்பிளந்துகொண்டு ஜாஜ் வல்யமாகவருகிறார்! எப்படி இந்தவர்ணனை? காலைவெயில் பரவுவதைக் கம்பன்,

> "திசையாளும் மதகரியைச்
> சிந்தூரம் அப்பியபோற் சிவந்தமாதோ"

என்று மற்றேரிடத்தில் வர்ணிக்கிருன்.

சூரியன் இரவைவிழுங்கி ஒளியரசு நடத்துகிறது; இரவு சூரியனை விழுங்கி இருளரசு நடத்துகிறது. இப்படியே இரவும் பகலும் மாறிமாறி வருகின்றன. மனிதவாழ்விலும் இப்படியே சுகமும் துக்கமும், இயற்கையில் குளிரும் வெப்பமும் வருகின்றன, என்று வேதாந்தத்தில் எங்கள் எண்ணம் பாய்ந்தது, ஐயர் ஓமரின் இலியாதை எடுத்தார், கிரீக்கில் படித்தார்; நான் போப்பின் மொழிபெயர்ப்பைப்பார்த்தேன், அப்பகுதி நன்ருயிருந்தது.

The race of man is as the race of the leaves
Of leaves, one generation by the wind
Is scattered on the earth; another anen
In spring's luxuriant verdure bursts in light:
So with our race; these flourish; those decay.

மனிதஜாதி இலையினம்போன்றது; இலைமரபில் ஒன்று ஆடிக்காற்றில் மண்ணில் உதிர்கிறது; மற்றென்று வசந்தப் பசுஞ்செழிப்பில் தளிர்த்து விளங்குகிறது. இப்படியே நமது ஜாதியும்—இங்கே செழிப்பு; அங்கே அழிப்பு! இந்தமாதிரி உள்ளத்தை அள்ளும் கலைச்சித்திரமும், அனுபவ உண்மைக்காட்சிகளுமே அருட்கவிகளின் ஜீவநாடியாகும்.

---

## இடத்திற்குத் தகுந்தாற்போல்!



கணவன்:—ஏண்டீ அலங்காரம்! என்னத்துக்காக நீ இந்தமாதிரி தலையும் வேஷமாக கிழிஞ்சபுடவையை கட்டிண்டிருக்கே? உனக்கென்ன பணமில்லையா? உடையில்லையா? ஏன் இப்படி விகாரமா......

மனைவி:—(இடைமறுத்து) போரும். இந்தவீடு இருக்கிற விகாரத்துக்கு இந்த அலங்காரம் போதும். குழந்தையா, குட்டியா? மக்களா மனுஷாளா யாரிருக்கா இந்த வீட்டிலே? போதுவிடிஞ்சா அஸ்தமிச்சா என்மூஞ்சியை நீங்கள்பார்க்கறதும், நான் உங்களைப்பார்க்கிறதும்தானே! அதுக்கு இந்த அழகு போராதா?

கணவன்:—ஓகோ! கோவிலுக்குப்போகச்சே ஒருவித அலங்காரம், சினிமாவுக்குப்போகச்சே இன்னொருவித அலங்காரம்! வீட்டிலிருக்கச்சே இந்த அழகோ!

"விருச்சிகம்"

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

## நம் சகோதரிகளுக்கு மட்டும்

சட்டப்படி நடந்தால் அச்சமின்றி வாழலாம் என்ற கவிமொழிப்படி நமது சகோதரிகள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் தெரிந்து கொள்வதவசியமென்பதற்காகவே இது விஷயமாக ஸ்ரீமதி அம்புஜம்மாள் தொடர்ச்சியாக எழுதிவருகிறார். சென்ற இதழில் விவாகச் சடங்கு என்பதைப்பற்றி எழுதினார். இப்போது விவாகசம்பந்தமான விதிவிலக்குகளை விளக்குகிறார்.
-ப-ர்

# கோத்திரம், பிரவரம், ஸபிண்டபந்துத்வம்

## விதிவிலக்குகள்

ஸகோத்திர விவாகம், நெருங்கிய பந்துக்களுள் விவாகம், இவை சம்பந்தமான விதிவிலக்குகள் தற்காலத்தில் உள்ளனபோல அவ்வளவு தெளிவாக பழயகாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை என்றால், அவை அந்தகாலத்திலே போதியஅளவுக்கு வேறின்றி கையாளப்பட்டு வராமையே காரணம் எனலாகும்.

சதபத பிராமண என்ற நூலின் ஆதாரப்படி, நெருங்கிய பந்துக்களுக்குள், மூன்று அல்லது நான்கு தலைமுறைவரையிலுமே பரஸ்பர விவாக விலக்கு இருந்ததாகத் தெரிகிறது.

ஆனால் கிருஹ்ய சூஸ்திரகாலம் முதல், ஒருவன் தன் தாய் வழிச் சேர்ந்த ஸபிண்ட பந்துவான ஒருத்தியையோ, ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த மணமகள் ஒருத்தியையோ, விவாகம்செய்துகொள்வதுகூடாது என்ற விதி கையாளப்பட்டு வரலாயிற்று.

"தாய்வழி ஸபிண்டபந்து ஆகாதவளும், தகப்பன்வழி அதே குடும்பத்தைச்சேராதவளுமான மணமகளையே பிராமணோத்தமன் விவாகம் செய்துகொள்வது நன்று" என்று மனுவானவர் சிபார்சுசெய்கிறார். மின்னும், 'ஸபிண்டபந்துத்துவம் ஏழுதலைமுறையுடன் அற்றுப்போகிறது' என்றும் கூறுகிறார் மனு மகரிஷி.

"ஸகோத்திர ஸபிண்டபந்துத்துவம்—அதாவது தகப்பன்வழி நேர் ஸபிண்டபந்து, தாய்வழி நேர் ஸபிண்டபந்து இவர்களிடையே, தலைமுறை கிரமவித்தியாசத்தை, எவ்வளவுதூரம் கணக்கிட வேண்டுமென்பதை விளக்கி, யாக்ஞவல்கியர் சொல்வதாவது, "ஒருவன், தனக்கு ஸபிண்ட பந்து ஆகாதவளும், சுயகோத்திரத்தைச் சாராத, பிறகோத்திரம், பிரவரம், அவைகளைச்சார்ந்த குடும்பத்தில் வந்தவளும், தாய்வழி ஐந்துதலைமுறைக்கும் தகப்பன்வழி ஏழுதலைமுறைக்கும், புறம்பே உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளுமான பெண் ஒருத்தியையே மணம்செய்துகொள்ளவேண்டும்" என்று விதிக்கிறார்.

ஞானேச்வரர், ஒரு பெயர்போன கட்டத்தில்,யாக்ஞவல்கரின் சூத்திரத்திற்கு வ்யாக்யானம் செய்யும்போது, 'ஸபிண்டபந்து' என்பதைப்பற்றி "ஒரேசரீரத்திலிருந்து உண்டான அணுக்களின் சம்பந்தம்பெற்ற சரீரிகள் இருவர் பரஸ்பரம் ஸபிண்ட பந்து ஆகிறார்" என்று விளக்குகிறார்.

இது ஒரு புதிய விளக்கமே. ஞானேச்வரருக்கும் முந்தியவர்கள் 'ஸபிண்ட பந்து' என்றால், 'பிண்ட பிரதானம்' அளிக்கும் உரிமை உடைய உறவினரையே குறிப்பதாகும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் செய்த உரைப்படி, ஸபிண்ட பந்துத்துவம், ஏழுதலைமுறை வரையுள்ள, ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த பந்துக்களையே குறிப்பதாக ஆகிறது. ஆனால் ஞானேச்வரர் செய்த உரைப்படி,ஸபிண்ட பந்துத்துவம்

தாய்வழிவந்த பின்ன கோத்திர பந்துவையும் குறிப்பிடுவதாகிறது. முடிவில் ஞானேச்வரர், 'தாய்வழி ஐந்தாம் தலைமுறைக்குப் பிறகும், தகப்பன் வழி ஏழாம் தலைமுறைக்குப் பிறகும், ஸபிண்ட பந்துத்துவம் கிடையாது—அற்றுப்போய்விடுகிறது என்றும் சொல்லுகிறார்.

ஸபிண்ட பந்துவாகவோ, ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவராகவோ, ஒரே பிரவரத்தைச் சார்ந்தவராகவோ இருக்கும் ஒருபெண் விவாகமூலம் 'மனைவி' என்ற பதவிக்கு உரியவளாகிவிடுவாள் என்பது இல்லை; என்று மிதாக்ஷரமுறை கண்டிப்பாகக் கூறுகிறது. அதாவது, 'ஸகோத்திரம் அல்லது சமான பிரவரம், அல்லது ஸபிண்ட பந்துத்வம்' என்ற விதிவிலக்குகளுக்குட்பட்ட இருவர்களிடை விவாகச் சடங்குகள் நடைபெறினும், அந்த விவாகம் சாஸ்திரப்படி செல்லாது; அவர்கள் விவாக உரிமைகளைப் பெற்று அனுபவிக்கமுடியாதவர்களாகவே இருப்பார்கள்'' என்பதுதான் இதன் தாத்பரியம்.

மேலும், 'க்ஷத்திரிய, வைசியகுலங்களைச் சேர்ந்தவர்களுக்கு கோத்திரம், பிரவரம், முதலியன கிடையாது. ஆயினும், ''அந்தந்த குடும்பங்களைச் சேர்ந்த குலபுரோஹிதர்களின் கோத்திரம், பிரவரம் இவைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்'' என்று மிதாக்ஷரம் வற்புறுத்துகிறது.

பிராமண, க்ஷத்திரிய, வைசிய முதலிய இம்மூன்று, ஜாதியினரைத் தவிர இதர ஜாதியனருக்கு இந்த கோத்திர, பிரவர, விதிவிலக்குகள் கிடையாது.

ஒரு கோத்திரத்திலிருந்து மற்றொருகோத்திரத்திற்கு கொடுக்கப்பட்ட ஸ்வீகாரபுத்திரன் விஷயத்திலும் இந்த கண்டிப்பின் விதிவிலக்கை மிதாக்ஷரம் கூறுகிறது. அவன் விஷயத்தில், இருகுடும்பத்து கோத்திரங்களும் விவாகவிலக்குக்கு உட்பட்டவைகளே யாகும்.

ஆனால் ஸபிண்டபந்து சம்பந்தப்பட்ட அளவில், விதிவிலக்குகள் அனுஷ்டானத்தில் அவ்வளவு கண்டிப்பாக கையாளப்படவில்லை. அந்தந்த பிரதேசம், குலாசாரம் அதனையொட்டி வெகுவாகதளர்த்தப்பட்டும், சாஸ்திரவிதிக்கும் மாறுபட்டும் கையாளப்படுகின்றன. முக்கியமாக தென்னாட்டிலே இதன் மாறுபாடுகளைக் காணலாம்.

அதாவது, தாய்வழி மாமனையே விவாகம்செய்துகொள்வது. அத்தை மகனையும்,மாமன்மகளையும், மணம்புரிவதுஸபிண்ட பந்துத்துவமுறைப்படி விலக்கப்பட்டிருப்பினும், நம்நாட்டு ஆசாரத்தின்படி பல உயர்ஜாதிக் குடும்பங்களிலும் சர்வசாதாரணமாக நடைபெறுவதை நாம் காண்கின்றோம்.

---

சென்ற இதழில் 32வது பக்கத்தில் வெளியிட்ட விடுகதைக்கு விடை

## ஜ க ன் மோ கி னி

ஜ - - - - னி = பிற
- க ன் - - னி = ஒரு ராசி
ஜ - ன் - - னி = சீதநோய்

**விடுகதை. 2.** ## இந்த பெண்மணியின் பெயரென்ன?

இவளுடைய பெயர் ஐந்து அக்ஷரம் கொண்டதாகும். முதல் அக்ஷரம் எல்லோருக்கும் அத்தியாவசியமான ஓர் பிராணி. இரண்டாம் அக்ஷரம் நாட்டியகலைக்குச் சேர்ந்த ஓர் அம்சம். மூன்று, நான்கு, ஐந்தாம் அக்ஷரங்களை முறைபாக சேர்த்தால் ஓர் ராகம் தோன்றி காதிற்கு இன்பமளிக்கும்.

ஸ்ரீமதி எஸ். அலமேலு அம்மாள்

# சிறுமிகள் சிறப்பிக்கும் நாட்டியக்கலை

பரத நாட்டியக்கலைக்கு என்றுமே ஓர் தனித்த பெருமை உண்டு. சிறுமிகளும் அக்கலையில் ஈடுபட்டு வெற்றி பெறுவதானது அக்கலையையே சிறப்பிப்பதாகிறது. திருவல்லிக்கேணி சரஸ்வதிகான நிலையத்துச் சிறுமிகள் இக்கலைக்குப் பெரிதும் பணியாற்றி வருகிறார்களென்பது பற்றி நமது மலரில் ஏழு சிறுமிகளின் படங்களுடன் தெரிவித்திருந்தோமல்லவா? அவர்களுள் ஒருத்தியான சௌ. மைதிலியின் சிறந்த அபிநயக்காட்சிகள் இரண்டு இவ்விதழை அலங்கரிக்கின்றன.



●

நீலாம்புரி ராகத்தில்
"நீலமயில் வாகனனே"
என்ற பாட்டில்
"கோழிகொடிபடைத்த
சேவகனோ?"
என்ற இடம்.

●



*

தோடி வர்ணம்
"தாணிகே"யில்
ஒரு அபிநயம்

*

சௌ R. மைதிலி

# கம்பன் மலர்

[சென்னைக் கம்பர் கழக வெளியீடு. உயரிய பதிப்பு 2.8.0. மலிவுப் பதிப்பு 2.0.0. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்.]

சென்றமாதம் கம்பர்விழா நடந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. கவிஞர் தலைமணியாகிய கம்பருக்குத் திருவிழா எடுத்துக் கொண்டாடுகையில் ''புலவர்களுக்கு எடுக்கும் திருவிழாவில் அறிவு விருந்தே சிறந்ததாகும்'' என்பதற்கொப்ப கம்பன் மலர் ஒன்று வெளியிட்டிருப்பது மிகவும் பொருத்தமே. கம்பராமாயணத்தின் சுவையையும் நுண்ணிய பொருளையும் எடுத்து விளக்கும் அரிய கட்டுரைகளை தக்க அறிஞர்களிடமிருந்து தொகுத்து இம்மலரை உருவாக்கியிருக்கிறார்கள் கம்பர் கழகத்தார். ஒவ்வொருவரும் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல இதில் பொதிந்து கிடப்பதால் கம்பன் கவிதாரஸத்தைப் பருக ஆவலுள்ளவர்களனைவரும் இம்மலரை ஒரு முன்னுரையாகப் படித்தல் பலனுள்ளதாயிருக்குமென்பதே எமது துணிபு. விலை சற்று அதிகமெனத் தோன்றலாம். ஆனால் விஷயமேன்மையைக் கவனித்தால் அதை அதிகமென்று சொல்லமாட்டீர்கள்.

—வை. மு. ஸ்ரீ.


---

# இந்த மாதம்

நாம் கொண்டாடுவது



உடையவர்
வெள்ளைசாத்துப்படி



சித்திரா
பௌர்ணமி

# எதிர்பாராத சம்பவம்

ஒரு சிறு கிராமம். மானிகுப்பம் என்பது. அதில் சுமார் 75 வருடங்களுக்கு முன் மதார் என்றொரு மகம்மதியனிருந்தான். ஐந்தாம் வகுப்பு வரையில் படித்திருந்தான். ரொம்பவும் கஷ்ட ஜீவனம் அப்படி இருக்கும் சமயத்தில் கலியாணமாகியிருந்தது. அந்த கஷ்டத்தில் என்ன செய்வதென்றே தோன்றாமல், கடைசியாய் ஒரு போலீஸ் சேவகன் வேலைக்கு அமர்ந்து, தன் பெண்ஜாதியையும் குழந்தை காசிம் என்பவனையும் அழைத்துக்கொண்டு காவித்தண்டலம் என்னும் கிராமத்தில் வேலையிலிருந்தான். அந்த காலத்தில் ஒரு ரூபாயைப்பார்ப்பது என்றால், குதிரைக்கொம்புபோலிருக்கும். மதார் என்பவர் தன் சாமர்த்தியத்தினால் கொஞ்சகாலத்தில் சார்ஜண்ட் உத்தியோகத்தை வகிக்கப்பெற்றார். சார்ஜண்ட் என்றால், இப்போதைய சப்-இன்ஸ்பெக்டருக்குச் சமானம். பிறகு வேறு ஒரு கிராமத்திற்கு மாற்றலாயிற்று.

காசிமுக்கு, கலியாணப் பருவம் வந்ததும் ஒரு பெரிய இடத்து சம்மந்தம் ஏற்பட்டது. கொஞ்சநாளைக்குள் காசிம்பெண்ஜாதி கர்ப்பவதியாகிப் பிரசவித்து, குழந்தையுடன் காலமானாள். உடனே காசிமுக்கு இரண்டாந்தாரமாக, எட்டு வயது குழந்தையான நசீபா என்பவளை கலியாணம் செய்துவைத்தார்கள் பெற்றோர்கள். காசிம் ஐந்தாவது வகுப்புதான் வாசித்திருந்தார். ஆனால் தகப்பனாரைவிட சாமர்த்தியசாலி. தன் தகப்பனாரின் உபத்திரவம் தாங்கமாட்டாமல் காசிம் சென்னையில் கப்பலேறி ஆப்ரிக்காவுக்குச் சென்று, ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராகயிருந்தார். அப்பொழுது ஆப்ரிக்காவில் நெருப்பு காற்றடித்து, அநேக வீடுகள், ஜனங்கள் சேதமாயின. காசிம் தன் சிநேகிதனுடன் ஒரு கிணற்றில் ஒளிந்துகொண்டார். இதற்குள் காசிமின் விரோதி அவர் இறந்துவிட்டதாக காசிமின் தாய் தகப்பனருக்குக் கடிதம் எழுதிவிட்டார். காசிம் சென்று ஐந்துவருடமாகிவிட்டதால், நசீபா என்பவள் பக்குவமடைந்திருந்தும், இறந்த செய்திகேட்டுஅப்பொழுதே தாலியாகிய கீரை மணியை வாங்கிவிட்டுக் காசிமுக்குவேண்டிய காரியங்களையும் செய்துவிட்டார்கள். இரண்டொருமாதம் பொறுத்து நசீபாவின் பெற்றோர்கள் மறுவிவாகம் செய்துகொடுப்பதற்கு முகூர்த்தநாளும் குறிப்பிட்டாய்விட்டது. அப்பொழுது மாதம் ஆறு ஆகியிருக்கும். நசீபாவின் முகூர்த்தநாள் வந்தது. ஆனால் நசிபா தான் ஒருவரையும் மறுவிவாகம் செய்துகொள்வதில்லை என்றும், மறுவிவாகம் செய்து கொடுத்தால் கிணற்றில் விழுந்துவிடுவதாய் கிணற்றங்கரையில் போய் உட்கார்ந்துகொண்டாள். அப்பொழுது தெருவில் ஏகக்கூச்சல் "வந்துவிட்டான்—வந்துவிட்டான்" என்று கேட்டது. என்ன என்று பார்க்கையில் ஒரு மனிதன் தாடி மீசையுடனும் கறுப்பு கம்பளியுடனும், காட்சி அளித்தான். அவன் யார் என்று சொல்லாமலேயே தெரியுமல்லவா—அவன்தான் காசிம்.




## 5. புயலும், அமைதியும்

" ஜீவியச்சுழலில் என்னே சோதனையின் கொடுமை! எதிர்பாராவிதமாக வாழ்க்கையில் எத்தனைப்புயல்கள்! பூகம்பங்கள்! நம் மங்களபுரியின் சரித்திரத்தில் இப்படியும் ஒரு கஷ்டகாலம் வரவேண்டுமென்பதா பகவத் ஆக்ஞை! யார் செய்த பாபமோ, எவர் இட்டசாபமோ!" என்றெல்லாம் மனமுருகிக்கொண்டிருந்தார் ஸ்ரீவத்ஸர்.

"ஸ்வாமி! இது முற்றும் அச்சதிகாரர்களின் வேலையாகத்தானிருக்கவேண்டும் சர்ப்பம் தானுக வந்ததாகவே தோன்றவில்லை. அந்தப்பெட்டி விழுந்திருந்தோரணையைப்பார்த்தால் அதனுள்தான் இந்தப்பாம்பு அடைக்கப்பட்டிருந்திருக்கவேண்டுமென்றும், நம் அரசர் அதைத் திறந்துபார்க்கையில் அது சீறிக்கொண்டு வெளிக்கிளம்ப,அவர் பெட்டியைக் கைநழுவவிட்டிருக்கவேண்டுமென்றும் தான் ஊகிக்கிறேன்" என்று குணசேகரன் தனக்குத் தோன்றியதைத் தெரிவித்தான்.

" இச்சதிகாரர்களைச் சும்மாவிடக்கூடாது. பழிக்குப்பழி வாங்கியே தீரவேண்டும். போர் தொடங்குவதற்கு அனுமதி கொடுங்கள்" என்று கர்ஜித்தான் ஸேனாதிபதி வீரநாதன்.

யாவற்றையும் கேட்டுக்கொண்டே சோகமே வடிவுகொண்டு உட்கார்ந்திருந்த மைத்ரேயிக்கு சேனாதிபதியின் கர்ஜனை இன்னும் புதிய கலக்கத்தை உண்டுபண்ணியது. தனக்கு உசிதம் என்று தோன்றியதைத் தெளிவாக உரைக்கலானாள்: "எதிர்பாராதது மிகக்கொடிய முறையில் நடந்துவிட்டது. ஒரே சமயத்தில் இரண்டு பக்ஷிகள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டன. நமக்கிருக்கும் இந்நிலையில் அந்த அக்கிரமக்காரருடன் போர்புரிவதென்பது அவ்வளவு லேசானதில்லை. மிகுந்த பலமும், அளவிலா கபடமும் நிறைந்த அவர்களால் நம் இளவரசருடைய உயிருக்கே தீங்கு வந்துவிடும். ஆகையால் போர்செய்வது தவிர வேறு காரியங்கள் மேற்கொண்டு ஆகவேண்டியதைத்தான் நாம் முதலில் கவனிக்கவேண்டும்."



"ஆம்!மைத்ரேயி சொல்வது வாஸ்தவந்தான், எனக்குத் தெரிந்தவரையில் மூன்று தலைமுறைகளாக நமது மங்களபுரியில் எவ்விதக் கலக்கமோ யுத்தமோ நடந்ததேகிடையாது. நாடு செழிக்கவும் குடிகள் பிழைக்கவும் நமது மன்னர்கள் கலை, வித்தை, தொழில், வியாபாரம் முதலியவற்றின்

அபிவிருத்திக்கே பாடுபட்டுவந்து,சைன்யத்தைப் பலப்படுத்தாமலும் அதிகரிக்காமலுமிருந்து விட்டார்கள். இதேசமயத்தில் சிம்மபுரியில் யுத்தபலத்தைப்பெருக்குவது தவிர வேறுஎதுவுமே செய்யவில்லை. ஆகையால் நாம் திடீரென்று போருக்குப்போவது அவ்வளவு உசிதமில்லை" என்று ஸ்ரீவத்ஸர் கூறிமுடிக்குமுன் மைத்ரேயி "நமது மந்திரியார் சொல்வதுபோல் நாம் ஊகிக்க வேண்டுமே தவிர, நேரில் நடந்ததைப் பார்த்தவர் யாருமில்லை. ராணியாரொருவருக்குத்தான் உண்மையான விஷயம் தெரியும்; அதைக் கூறுவதற்குத்தான் அவர் இவ்வுலகில் இல்லையே" என்று கண்ணீர்விட்டாள்.

"பதிவ்ரதை யென்றால் நம் ராணியாருக்கேதான் தகும். தன் கணவரைப் பாம்புகடிப்பதைப்பார்த்த அதிர்ச்சியிலேயே இவ்வுலகத்தையே துறந்துவிட்டாரே! ஸ்மரணையற்று விழுந்தவர் எழுந்திருக்கவேயில்லையே!" என்று குணசேகரன் வருத்தப்பட்டான்.

"பதியின் உயிருக்கு ஆபத்து என்பதை அறிந்த அந்த க்ஷணமே தனது உயிரை விட்டுவிட்ட சதியல்லவா நமது ராணியார்! எங்குமே கேள்விப்பட்டதில்லையே இத்தகைய கோர சம்பவத்தை" என்று ஏங்கினான் வீரநாதன்.


*                    *                    *                    *

மேற்கூறிய சம்பாஷணை நடப்பதற்கு முன் என்ன நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதை விவரிக்கவேண்டியதில்லை. மார்பிலேயே இரண்டிடங்களில் கடித்துவிட்டதனால் விஷம் சீக்கிரம் அரசனின் உயிரை பலிவாங்கிக்கொண்டது. விதியின் கூத்துக்கெதிரே மந்திரமோ வைத்தியமோ என்ன செய்யமுடியும்? ராணிக்காவது மூர்ச்சைதெளியுமோ என்று பார்த்ததற்கு அவள் இன்னும் முன்னரே இம்மண்ணுலகை நீத்தது தெரியவந்தது. ஒரேசமயத்தில் அரசதம்பதிகளிருவரும் உயிரிழந்தச் செய்தி பேரிடிபோல் மக்களைத்தாக்கியது. ஆனால், சூழ்ச்சியினால் ஏற்பட்ட மரணம் என்பது ஜனங்களுக்குத் தெரியாது; ஆகையால் அவர்கள் விதியையே நொந்தார்கள். கடவுளிடமே கோபங்கொண்டார்களென்று சொல்லவேண்டும்: அவர்களது ராஜபக்தி அவ்வளவு ஆழ்ந்தது. அதிசய மரணமடைந்த அரசதம்பதிகளின் சவஊர்வலம் அபூர்வமான முறையில் நடந்தது. துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடந்த மக்கள் அதனைக்கண்டு கண்ணையே இழந்தவர்போல் தவித்தார்கள்.

*                    *                    *                    *

க்ரியைகள் முடிந்தபிறகுதான் அரண்மனையில் முதலில் கூறப்பட்ட சம்பாஷணை நடந்தது. மன அதிர்ச்சியும், கலக்கமும், குழப்பமும் அடைந்திருந்த அவர்களுக்கு மனது ஒருநிலையில் நிற்கவில்லை. என்ன செய்வதென்றே புரியவில்லை. தற்சமயம் போர் நடத்துவதென்பதைமட்டும் அடியோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள்.

விதிசெய்துள்ள கொடுமை குழந்தை பாஸ்கரனுக்கு என்ன தெரியும்? சவ ஊர்வலமும் தகனமும் பெரிய ப்ரமையை உண்டாக்கிவிட்டது. எப்போதும் மைத்ரேயியிடமே வளர்ந்துவந்த அவனுக்கு இப்போது மைத்ரேயி துக்கத்திலாழ்ந்திருப்பது இன்னும் அதிக கலவரத்தை உண்டுபண்ணியது. மனதில் உள்ள



தைச் சொல்லத்தெரியவில்லை. அந்தச்சிறிய இதயத்திலும் ஒரு விதப்புயல் அடித்துக்கொண்டிருந்தது.

* * * *

மனப்புயல்மட்டுமடித்தது மங்களபுரியில்; ஆனால் மிகக் கடுமையான புயலே அடிக்க ஆரம்பித்தது அந்த அக்கிரமக் காரன் ராஜ்ஜியத்திலே. திடீரென ஏற்பட்ட மண்காற்று பெரும் புயலாகமாறி சிம்மபுரியில் பெரும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் விளைவித்தது. இயற்கையன்னை கோரத்தாண்டவம் புரிகிறாள். இது இப்படி இருப்பினும் பலவந்தசேனனும், ராஜபூஷணமும் குடிகளுக்கு உதவிசெய்யவேண்டுமென்பதையே மறந்து ஏதோ கலவரத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள். “மகாராஜா! நாம் ஒன்று நினைக்க நமது சதி பலிக்காமல் முற்றும் வேறுவிதமாக நடந்துவிட்டதே! போகும் வழியிலேயே கருணாகரன் நமது ராணியார் தனது மனைவிக்கு என்னதான் அனுப்பியிருக்கக்கூடுமென்று திறந்துபார்க்க ஆவல்பெற்று பெட்டியைத் திறந்தால் நமது சதி வெற்றி பெற்றுவிடும்; அவன் துலைந்தால் நமது பலத்தையும் திறமையையும் உபயோகித்து காத்யாயினியை அடிமைப் படுத்திவிடலாமென்று நினைத்தோமே! இருவருமல்லவா ஒரே சமயத்தில் மறைந்துவிட்டார்கள்!” என்று சொன்னதும் பல

வந்தசேனனுக்கு ஏமாற்றமும் ஏக்கமும் இடிவிழுந்தது போன்ற அதிர்ச்சியும் ஏற்பட்டன. அந்தக் கொடிய உள்ளத்தி கூட சாதாரண மனித உணர்ச்சி தோன்றியது. ஆனல் ஒரேவிநாடி தான். "ஹா! அந்த அழகியுமா மறைந்தாள்!!' என்று குழப்ப முற்று பைத்தியக்காரன்போல ஏதோஉளறினன். உடனேபெரிய வெற்றியைக் கண்டவன்போல் இடியுடன் போட்டியிடுவதே போல் பிரம்மாண்டமான பேரிடிச்சிரிப்புச் சிரித்துக்கொண்டு "துலேந்தார்கள்! இருவரும் துலேந்தார்கள்! ஒரே அம்பில் இரண்டு பக்ஷிகள்! எப்படி நம்ம சாமர்த்தியம்?" என்று ராஜ பூஷணத்தை இறுமாப்புடன் கேட்கும் பலவந்தசேனனின் மனப் பான்மையை என்னென்பது! அல்லது அவனெதிரில் பல்லே இளித் துக்கொண்டு தலேயை ஆட்டிக்கொண்டு நிற்கும் அந்தச்சதிகார னின் உள்ளத்தைதான் எப்படிவர்ணிப்பது? இத்தகைய சந்தோ ஷம் நீடித்து நிற்காது என்பது அந்த அல்பர்களுக்குத் தெரியாத தால் வெற்றி-வெறி கொண்டிருந்தார்கள்.

சொந்த ஊரில் ஜனங்களின் சாபம்; மங்களபுரியில் விஷயம் தெரிந்த தலேவர்களின் சாபம்—இவையெல்லாம் சேர்ந்துதானே என்னவோ பலவந்தசேனனுக்குத்திடீரெனப் பாரிசவாய்வுகண்டு கைகால்கள் சுவாதீனமற்று நாக்கும் தழதழத்துப்போயிற்று. கலிகாலதெய்வம் கண்மூடியல்ல என்று பலர் வாய்விட்டே கூறி னர். இந்த தெய்வதண்டனே பலருக்குத் திருப்தியே அளித்தது; ராஜபூஷணத்திற்கு ஒருவித திகிலேயும் பயத்தையும் கிளப்பிற்று.

* * * *

இரவுக்குப்பின் பகலும், இருளுக்குப்பின் ஒளியும், புயலுக் குப்பின் அமைதியும் நிலவுவது இயற்கையின் தாண்டவத்தில் தவருது நடக்கும் அம்சங்களல்லவா? இரு சமஸ்தானங்களிலும் இருவிதப்புயல்களடித்து ஒருவாறு அமைதி நிலவ ஆரம்பித்தது. ஒருகாரணமும் சொல்லாமல் ராஜபூஷணம் தன் பதவியைவிட்டு விலகி, நோய்வாய்ப்பட்டிருக்கும் அரசனுக்குத் தொண்டுபுரியும் அந்தரங்கக்காரியதரிசியாக விருந்தான். புதியமந்திரிசபையுடன், அரசனின்பேரால் ராணி ஹேமாங்கினிதேவி ஆள ஆரம்பித்தது ஜனங்களிடையே அமைதியை ஏற்படுத்தியது. மங்களபுரியிலும், இளவரசர்பேரில் ஸ்ரீவத்ஸர், குணசேகரன், வீரநாதன் தலேமை யில் ராஜ்யபாரம் நடந்துவந்தது. இளவரசரையும் (தற்போது அவர் தானே அரசர்) அவரது தம்பியையும் மைத்ரேயிதான் அருமையாய்க் கவனித்து வந்தாள் என்று சொல்லவும் வேண்டுமோ? ராஜகுமாரிகளிருவரும் முன்னேவிடப் பன்மடங்கு ப்ரீதியுடன் மைத்ரேயி யுடன் பழகலாயினர். கண்களேக் காக்க இமைகளே ஏற்படுத்திய பக வான், இச்சிறுவர்களேக் காக்க மைத் ரேயியை சிருஷ்டித்தான் போலும்!



ஸ்ரீமதி. தி. நீலாம்பிகை அம்மையார்.

# ஆதிரை வரலாற்றின் அருங்கருத்துக்கள்

(ஆண்டுமலரின் தொடர்ச்சி)

ஆதிரையின் வரலாற்றினால் நாம் அறிந்துகொள்ளவேண்டிய முதன்மையான கருத்துக்களைக் குறிப்பிடுவோம்.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பைத் தரும்'
'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்ற திருவள்ளுவப் பெரியாரின் திருமொழிகளுக் கிணங்க சாதுவன் ஒரு பரத்தைபாற் சென்று தம் உயிரினுஞ் சிறந்த ஒழுக்கத்தைக் கைவிட்டமையால் இவன்றன் உயிரை இழக்கக்கூடிய நிலையில் இவன் ஏறிச் சென்ற கப்பல் கடலில் உடைந்து கவிழ்ந்தது. கவிழவே, அதனினின் றும் ஒடிந்த மரத்துண்டைப்பற்றி இவன் கடலில் நள்ளிரவிற்றவித்தான். இவன் அப்போது உயிர் பிழைத்தற்குக் காரணமாயிருந்தது ஆதிரை நல்லாளின் அன்பின் புணையாகிய மரத்துண்டே யெனலாம்.

நல்லறஞ் செய்துகொண்டிருந்த ஆதிரை தன் கணவன் சாதுவன் கடலில் இறந்தானென்று கேட்டபோது மனந்துடிதுடித்து உயிர்வாழ ஆற்றாளாய்த் தீக்குழியிற் புகுந்தனள். புகுந்த அவளை அப்பெருந்தீ, சுடாதொழிந்தது. இஃது உலக இயற்கைக்குப் பொருந்துமோ? சுடு தலையும் சுடாதொழிதலையும் தீயுணருமோ? என்றெல்லாம் கேள்வி கேட் பாருமுளர். ஆனால் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் உயிர் உண்டென்பதை நந்தமிழ்ப் பெரியார்களும், J. C. போஸ் முதலிய வட நாட்டறிஞர்களும், மேனாட்டு உண்மை நூற் புலவர்களும் தக்கவாறு ஆராய்ந்து முடிவு கட்டியிருக்கின்றார்கள். இதுவுமல்லாமல் உலகத்திலுள்ள முதற் பொருள்களான நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பொருள்களும் எல்லாம் வல்ல ஆண்டவனருளால் படைக்கப்பட்டன. ஆதலால் அவை அவன் ஆணைவழியே நிகழும் என்பதை கீழ் வரும் அருள் நிகழ்ச்சிகள் சிலவற்றால் நாம் அறியலாம்.

மதுரையை அரசாண்ட கூன்பாண்டியன் காலத்தில் ஞான சம்பந்த பெருமான்றம் அடியவர் கூட்டத்துடன் மதுரைக்கு வந்து திருமடத் திற்றங்கியிருந்தார்கள். அப்போது அவர்கள் தங்கியிருந்த திருமடத்தில் சமணமுனிவர்கள் தீக்கொளுவினர். இஃதறிந்த சம்பந்தப் பெருமான் உடனே அத்தீ அவ்விடத்தைவிட்டு அகலுமாறு ஆண்டவனை வணங்கி, "செய்யனே திருவாலவாய் மேவிய ஐயனே" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர். உடனே அத்தீ திருமடத்தைப்பற்றாதொழிந்தது. இதுமட்டுமா?

திருநாவுக்கரசு அடிகளைச் சமணர்கள் நீற்றறையில் அடைத்தபோது அவர் அதனைப் பொருட்படுத்தாமல் எல்லாம்வல்ல இறைவனை வணங்கி 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்னுந்திருப்பதிகத்தைப் பாடியதும் அவனருளால் அப்பெருநெருப்பு அடிகளை ஒரு சிறிதும் ஊறுபடுத்தவில்லை. அவர் அங்கே மிக மகிழ்ச்சியாக ஆண்டவனைப் பாடியபடியே இருந்தனர்.

இன்னும், சுந்தரமூர்த்தி நாயனர், சேரமான் பெருமாள் நாயனரோடும் அடியவர் கூட்டத்தோடும் திருக்கண்டியூர் முதலிய திருத்தலங்களை வணங் கிக்கொண்டுவரும் வழியில் திருவையாற்று இறைவனை வணங்கக் கருதி காவிரியாற்றங்கரையை அடைந்தனர். அப்போது காவிரியாறு ஓடஞ் செல்லமுடியாதவாறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அக்கரை

சென்று ஆண்டவனை வழிபடமுடியாமலிருப்பதை யறிந்து சுந்தரமூர்த்தி அடிகள் உடனே ஆண்டவனை வணங்கிப், 'பரிவும் பரிசு' என்னுந் திருப் பதிகத்தைப் பாடியருளினர். உடனே இருவரும் அக்கரை சென்று ஆண்டவனை வழிபட்டு மீளும்வரை பெருகி வரும் ஆற்றுநீர் விலகி நின்று வழி விட்டது. இவ்வாறு ஆண்டவனருளாலும் அருட் பேரடியார்களின் ஆணையினாலும் ஐம்பெரும் பொருள்களுந் தத்தந் தொழில்களை நடாத்தும் என்பதை நாம் அறிகின்றோம். இத்தகைய நிகழ்ச்சிகள் இன்னும் பலவுள; அவை விரிப்பிற்பெருகும்.

மேனாட்டு நிகழ்ச்சி ஒன்றையும் இங்கு குறிப்பிடுகின்றோம். சில ஆண்டு களுக்கு முன்னே ஆங்கில நாட்டில் அறிதுயிற் கலை வல்ல அறிஞர் சிட்னி (Dr. Sydney) என்னுந் துரைமகனார் எண்பது கல் விரைவில் ஓடிவரும் புகைவண்டித் தொடரைப் பார்த்து அதன் எதிரே நின்று 'நில்' (Stop) என்று மன ஒருமையோடு சொன்னவுடனே அது நின்றுவிட்டது. அவர் நிகழ்த்திக் காட்டிய அரிய நிகழ்ச்சிகள் பலவற்றை அவரெழுதிய நூலிற் பரக்கக்காணலாம். ஆதலால் நம்முடைய அறிவுக்கும் மனதிற்கும் புலப் படாதனவெல்லாம் பிறர் பாலும் பிற நாட்டிலும் நிகழாதன என்று கூறல் மிகப் பொருத்தமற்ற உரையேயாகும். ஆதலின் குற்றமற்ற ஆதிரை நல் லாளை அப் பெருந்தீ சுடாதொழிந்தது; அவளது கற்பின்றிறத்தை ஆண்ட வன் உலகிற்கு அறிவித்தற்பொருட்டேயாம்.

## ஆதிரை கற்பின் மாட்சி

திருநாவுக்கரசு அடிகளின் தமக்கையாரான திலகவதி அம்மையார் தம் தம்பியார் சீர்திருந்தவேண்டி, ஆண்டவனை வணங்கியதுபோல், ஆதிரை தன் கணவன் சாதுவன் அறிவு திருந்தப்பெற்று தன்னிடம் வந்து சேர வேண்டுமென்று நல்லறங்கள் புரிந்தும் ஆண்டவனை வேண்டியும் வந்தனள். அதனாலேயே கடலிற் கப்பல் கவிழ்ந்தும் சாதுவன் இறவா மலும் மக்களையே உணவாகக் கொள்வோரிடை யகப்பட்டு அவர்களாற் கொல்லப்படாமலும் ஆதிரையிடம் திரும்பி வந்து சேர்ந்தான்.

## நாகர் மக்களின் தாய் மொழிப்பற்று

நாகர் மலையிலுள்ள நாகரிகமற்ற நாகர்களும் அவர்கள் குரு மகனும் தம் மொழியினைச் சாதுவன் நன்றாகத் தெரிந்திருக்கின்றான் என்பதனை அறிந்தவுடனே அவர்கள் சாதுவனைக் கொல்வதை விடுத்து அவனை அன் பாக நடத்தி, அவனது அறவுரை கேட்டுச் சீர்திருந்தினர். இவர்தம் மொழிப்பற்றைப் பாருங்கள். இவர்கட்கிருந்த மொழிப்பற்றிற் காற்பங் காயினும் நாகரிக மிக்க நந்தமிழ் மக்கட்கு இருத்தல் வேண்டாமா! பேராசிரியர் சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலையில் வந்த இத் தகைய வரலாறுகளை நந்தமிழ் மக்கள் கற்றுச் சீர்திருந்த வேண்டுவது மிக இன்றியமையாததாகும்.

இன்னும் தமிழ்ப் பெருமகனை சாதுவன் முதலில் ஏதோ தீவினை வயத்தால் நெறி தவறிப் பொருளிழந்து வறுமையுற்றான். பின்னர், அவன் அறிவு திருந்தி குரு-மகன் தந்த இளநங்கையை வேண்டாமென வெறுத்து அவனுக்கு அறிவுரை கூறி அவனாற்றருப்பட்ட பெரும் பொருள் பெற்று ஆதிரையிடஞ்சென்று நல்லறம் நடாத்தி இனிது வாழ்ந்தான். இதனால் தீ யொழுக்கத்தால் தீமையும், நல்லொழுக்கத்தால் நன்மையும் மக்கள் அடைவ ரென்பது திண்ணமாகின்றது. பெண் மக்கள் தம் கற்பொழுக்க மாட்சி யால் வியத்தகு அருஞ்செயல்களைச் செய்யத்தக்கவர்களாகின்றனரென் பதும் ஆதிரைப்பெருமாட்டியின் வரலாற்றால் இனிதுபெறப்படுதல்காண்க.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்" —திருக்குறள்.

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்

# குண்டுக்குமேல் குண்டு

"ஆச்சர்யத்தைப் பார்த்தாயா கமலம்! சென்றமுறை பாழாப்போன ஜப்பான்காரனின் குண்டு தலைமீது விழுந்துவிடப்போகிறதேயென்கிற பயத்தினால் வீட்டிலுள்ள ஓட்டை உடைச்சல்முதல் காலிசெய்துகொண்டு ஜனங்கள் ஓடினார்களே, இப்போது நேரேயே குண்டு விழுந்துங்கூட யாராவது ஓடுகிறார்களா பார்த்தனையா! உலகம் என்ன விசித்திரமாக மாறுகிறது?" என்றார் சாமா ஐயர்.

கமலம்:—உலகம் மாறாமல் போட்டவிடத்திலா கிடக்கும்? ஜனங்கள் முன்பு குண்டுக்குப் பயந்து, குண்டு தைரியத்தையும் இழந்து, குண்டோட்டம் குதிரோட்டமாக ஓடினார்கள். ஜப்பான் குண்டுக்கும் மேலான கொடிய குண்டு பாய்வதுபோன்ற பல கஷ்டங்களை அனுபவித்துவிட்டு தமது குண்டுபோன்ற தேகம் மெலிந்து, சாவுக்கும் குண்டுதைரியம் பிறந்து இருப்பிடமே வந்து அடைந்துவிட்டார்களே. இனி குண்டு தலையில்தான் விழட்டுமே. ஏன் போவார்கள்?

மீனாட்சி:—என்ன இது! ஒரேமட்டாகச் சொல்லிவிடுகிறாயே! தம்தம் மக்கள் மனிதர்களிடம் போனால் ஜப்பான் குண்டுக்கும் கொடியதாகவா தாக்கிவிடும்? நீ சொல்வது அதிசயமாக இருக்கிறதே!

கமல:—ஆமாம். உங்களுக்கு அதிசயமாகத்தானிருக்கும். உங்களைப் போல் இங்கொரு வீடும், அங்கொருவீடும் என்ற வசதியிருப்பவர்களுக்கு என்போன்று கஷ்டமனுபவிக்க என்ன தலைவிதி? இங்கு விட்டால் அங்கு ஹாய்யாக இருந்து வந்தீர்கள். வேண்டுமானால் மின்ஸார வசதியில்லையே, சினிமா இல்லையே,ரேடியோ இல்லையே, உலாவ பீச்சு இல்லையேஎன்று கஷ்டப்பட்டிருக்கலாம். மற்றவர்களைப்போல் உங்களுக்கு என்ன தெரியும்?

சாமா:— எவாக்வேஷனுக்குப் போய் கஷ்டப்பட்டேன் என்று எல்லோரும் சொல்கிறார்களேயன்றி அது என்னமோம்மா... என்று ஒருமாதிரி இழுத்தார்.

கமல:—என்னமோம்மாவா? ஆமாம்... அப்படித்தானிருக்கும். அவ்வளவு தூரம் போவானேன்... நான் போய் பட்ட கஷ்டத்தைச் சொல்லுகிறேன் கேளுங்களேன். என்னை என் தம்பி வந்து அழைத்துப்போனது தான் உங்களுக்குத் தெரியுமே...தங்கம்போன்ற புருஷனைத் தவிக்கவிட்டு கண்ணுங் கண்ணீருமாய் குழந்தையுடன் நல்லதங்காளைப்போல் போனேன். மாமா! உண்மையில் என் மனம் தவித்த தவிப்பை அளவிட்டுக் கூறமுடியாது. தம்பியும் அவன் மனைவியும் ப்ரேமையுடன் அழைப்பதாகவே எண்ணினேன். ஆபத்து தலைமீது வந்துவிட்டது என்று உலகமே தவித்ததால் நான் போக இசைந்தேன்.

ரயிலில் செத்துச் சுண்ணும்பாகி மறுநாள் காலையில் ஊரையடையும் போது மணி 10 அடிக்கும் சமயமாகிவிட்டது. காப்பியில்லாது தலைவலி கொல்லுகிறது. குழந்தைகளின் கூக்குரலோ கேட்கவேண்டாம். நான்தான் நோயாளி என்பது உங்களுக்குத்தெரியுமே. பசியால்வாடி வடாய்த்துப் போனேன். வீட்டில்போனதும் காப்பி சாப்பிடவே மனதும் பறந்தது.

எங்கள் தலையைக்கண்டதும் என் தம்பியின் பெண் "அம்மா! அத்தை வந்துவிட்டா! அத்தை வந்துவிட்டா" என்று அன்புடன் ஆரவாரம் செய்தது. வீட்டில் அந்த குழந்தையைத்தவிர யாரையுமே காணவில்லை.

நானகவே சமயல் அறையை எட்டிப்பார்த்தபடியே என் தம்பி அகமுடயாளைக் கூப்பிட்டேன்.

என்ன அனியாயம்! அடுப்பில் பூனைக்குட்டி தூங்குகிறது. அந்த புண்யவதி அப்போதுதான் எண்ணெயைதேய்த்துக்கொண்டு புறக்கடையில் நின்றிருந்தாள். எனக்கு அப்போது இருந்த நிலைமையில் அழுகையே வந்துவிட்டது. என்னைத்துடர்ந்து என் தம்பியும் உள்ளேவந்துபார்த்தான், அவன் கண்கள் சிவந்தன. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. புறக்கடைப்பக்கம்போய் மனைவியைத்திட்டினன். "காலையிலேயே வர வேண்டிய வண்டியே இன்னும் தாமதமாக வந்தது. காப்பியும் டிப்பனும் செய்து வை என்று நான் கிளிப்பிள்ளைக்கு சொல்வதுபோல் சொன்னேனே, இத்தனைத்திமிரா உனக்கு?" என்று அவன் ஏதேதோ சண்டை செய்வதைக் கேட்காதுபோல் நான் அவனைக்கூப்பிட்டு ஒட்டலிலிருந்து காப்பி வரவழைக்கச்சொல்லி குழந்தைகளுக்கும் கொடுத்து நானும் சாப்பிட்டேன். அன்றுபகல் இரண்டுமணிக்கு சாப்பாடுகிடைத்தது. தினம்விடிந்தால் அஸ்தமித்தால் தம்பிக்கும் அவன் மனைவிக்கும் சண்டைதான்... அதிகம் சொல்லுவானேன். ஏன் நாம் வந்தோம். குண்டோ, கிண்டோ விழட்டுமென்று இராமல்போனேமே என்று தவித்தேன். சிலநாள்கூட இருக்கமுடியாதுபோனதால் வேறு வீட்டில் குடியேறினேன்... மாமா! என் தோழி சங்கரியும் அதோ வந்துவிட்டாள். அவள் பட்ட கஷ்டத்தைக் கூறச் சொல்கிறேன். கேளுங்கள்...'சங்கரி! எங்கே எவாக்வேஷன் புராணத்தை சற்று ஆரம்பி. என் மாமா கேட்கவேண்டுமாம்' என்றாள்.

சங்கரி:—செத்துப்போனவர்களைப்பற்றி அடிக்கடி பேசுவதுபோல் ஜனங்களிடையே இந்த எவாக்வேஷன் ஒன்று இப்போது அகப்பட்டிருக்கிறது. குண்டுவிழட்டும் விழாதுபோகட்டும் க்ராமாந்திரத்தில் சாப்பாட்டுக் குத்தக்க நிலமும், தங்க ஒரு சிறு குடிசையும் கட்டாயம்வேண்டும் என்கிற பாடத்தைமட்டும் அனேகம்பேர் கற்றுக்கொண்டார்கள். ஏதோ என் கதையை ப்ரமாதமாகக் கேட்கிறாய்? என் சொந்த நாத்தனார் இருக்கையில் இன்னொரு இடத்திற்குப்போவதா,என்று என்னை என் எஜமானர் குழந்தைகளுடன் தன் தமக்கையின் வீட்டில் கொண்டுவிட்டார். போவதற்குமுன்பு நான்கூட மிகவும் சந்தோஷமே அடைந்தேன். ஏன் தெரியுமோ! என் நாத்தனார் வீட்டில் சமையல்காரன், வேலைக்காரர்கள் முதலியோர் உண்டு. சமைத்துச்சமைத்து அலுத்துப்போன எனக்கு இரண்டுமாதமாவது சமையல் உபத்திரவமும் டிப்பன் தலைநோயும் இல்லாதிருக்கும் என்ற ஆசைதான்.

நாங்கள்போய் இறங்கியவுடனே தடபுடல் உபசாரங்கள் நடந்தன. ஆனல் சகலமும் என் நாத்தனரே செய்தாள். "ஏன் அக்கா சமையல்காரனில்லையா?" என்றேன். "அவனுக்கு ஜுரமாம்: வரவில்லை" என்றார்கள். "நாத்தனராயிற்றே... அவள் வேலைசெய்ய நான் பார்த்துக்கொண்டிருக்கலாமா?...என்னிழல் என்னைத்துடர்ந்தது" என்று எண்ணி சமையல்கட்டில் புகுந்தேன்.

என் வீட்டில் எங்க குடும்பத்திற்குமட்டும் வேலை. அங்குபோன சுகத்தில் வேளைக்கு ஒன்னரைபடி, இரண்டுபடி அரிசி வடிக்கும் உத்யோக உயர்வு கிடைத்தது. என்னுலும் சமாளிக்கமுடியாது கஷ்டமாகிவிட்டதோடு நில்லாமல், சமையல்டிபார்ட்டுமெண்டே எனதாகிவிட்டதால் சாமான்களும் என் கைப்பணத்தினலேயே வாங்கவேண்டியதாயிற்று. தன் குழந்தையைச்சரியாக கவனிப்பதில்லை என்றும் என் குழந்தைகளுக்கே பாலாயும் தயிராயும் கொட்டிவிடுவதாயும் வார்த்தைகள் கிளம்பின.

அதோடு நிற்காமல், என் நாத்தனருக்கு நாத்தனர் என்னைப்போல் எவாக்வேஷனுக்கு ஒருடஜன் ஆத்மாக்களுடன் வந்துவிட்டாள். அவளோ ஆஸ்த்துமா வ்யாதி உடையவள். பச்சைத்தண்ணீர் தொடக் கூடாது, வேலைசெய்யக்கூடாது, சதா இருமலும் ஈளையுமாக ஸேவை சாதித்தாள்.

என் நாத்தனரோ, தன் நாத்தனரை உபசரிக்கும் வேகத்தில் என்னை சாக்ஷாத் சமையல்காரியாகவே எண்ணிவிட்டாள். "நோயாளிக்கு இதைச் செய்யச்சொன்னேனே! அதைச் செய்யச்சொன்னேனே! இன்னும் ஆக வில்லையா!" என்று கடிபுடிசெய்யவாரம்பித்ததை என்னால் சகிக்கவே முடியாதுபோயிற்று. சாமான்கள் வாங்க என்கையைவிட்டுப்பணச்செலவு செய்வதுபோக, தான்தான் நஷ்டமாய்விட்டதுபோல் "எத்தனை செலவு? என்ன நஷ்டம்...என்ன அனியாயம்! நூறுநூறாகச் செலவழித்தாலும் போதவில்லையே!" என்று என் நாத்தனர் புருஷனும் ஒத்துப்பாட ஆரம்பித்தார்.

குருவி மூக்கினால் சேர்ப்பதுபோல் சேர்த்தபணத்தை பட்டணத்தில் பாங்கியில் வைத்தால் குண்டுவிழுந்துவிடும் என்கிறபயத்தில் நான் கை யோடு 500 ரூபாய் கொண்டுவந்தேன்.

முதல் முதல் பொங்கல் பண்டிகைக்கே நாத்தனர் வீட்டிலிருந்ததால் 50 ரூபாயில் அவளுக்குப் புடவை வாங்கிக்கொடுத்தேன். மத்தியில் சென்ற சில மாத நரக வேதனையில் என் சரீரமும் கரைந்து கையிலுள்ள பணமும் கரைந்து 50 ரூபாய்தான் மிஞ்சியது. உயிராவது மிஞ்சினால் போதும் என்று ஆகிவிட்டதால் குண்டாவது விழட்டும், பீரங்கியாவது விழட்டும். நான் இனி இங்கிருக்கமுடியாது," என்று என் கணவரிடம் ஆகாத்யம் செய்துகொண்டு வந்துவிட்டேன். அத்தனை மாதம் மாடு போல் உழைத்துப் பணத்தையும் கரைத்து வந்த எனக்கு என்ன பட்டம் கிடைத்தது தெரியுமா? "வருகிற சம்பளம் அப்படியே மீதி; இத்தனை மாத காலம் இங்கு இலவசக் குடித்தனம் செய்தாயிற்று. என் மகன்தான் கடனாளியாகிவிட்டான்" என்று என் நாத்தனரின் மாமியார் தம்பட்டை யடித்துப் பறைசாற்ற வாரம்பித்தாள், தன் பெண் டஜன் கணக்கில் சைனியத்துடன் வந்து உருட்டியது யாருக்கும் தெரியவில்லை. பாரு... ராமராமா! இனிமேல் என்ன யுத்தம் வந்தாலும் போவதில்லை என்று தான் தீர்மானம் செய்துவிட்டேன். அப்படி ஆபத்தான நிலைமை வந்து போனாலும் சொந்தக்காரர்களின் வீட்டிற்கு செத்தாலும் போவதில்லை, என்று ப்ரதிக்ஞை செய்துகொண்டேன். போதுமா என் எவாக்வேஷன் கதை?" என்றாள்.

இது கேட்ட சாமா ஐயர் திகைத்துப்போய் மூக்கின்மீது விரலை வைத்தார். இந்த மனிதர்களெல்லாம் வருந்தி வருந்தி ஆயிரந்தரந்தான் அழைத்தாலும் வரவாபோகிறோம்?...சமயா சமயத்திற்கு இப்படியா செய்வது?" என்று வியப்புக் கடலாடினர். "ஆமாம். நீங்க் எங்கேயோ வடக்கே தொலைதூரத்தில் இருப்பதால் இதெல்லாம் தெரியவில்லை. நீங்கள் இந்தப்பக்கம் இருந்திருந்தால் உங்களுக்குக்கூட இந்த எவாக்வேஷனின் சக்தி தெரிந்திருக்கும்.

கம:—இதைவிட அதிசயம் நம்ப ஜானகியின் விஷயம். அதைக் கேட்டால் நீங்கள் எப்படித்தான் திகைப்பீர்களோ?...அவளையே கூப்பிடு கிறேன்—என்று கூறிவிட்டு ஓடோடிச் சென்று எதிர் வீட்டு ஜானகியைக் கூப்பிட்டுக்கொண்டுவந்து விஷயத்தைக் கூறச் செய்தாள்.

ஜானகி:—அட ராகவா! வருஷம் ஒன்றாயிற்றே! இன்னமா அந்த புராணம் வேணும்? ஏதோ ஒரு வசனம் சொல்வார்கள் பாருங்கள். அதாவது நவமி திதியன்று ஊரை விட்டு ப்ரயாணமானால் கட்டாயம் படாத பாடுபட்டு, திருட்டுப்பட்டமும் அனுபவிக்க நேரும்'' என்பார்கள். நான் நவமியன்றுகூட புறப்படவில்லை. சனிக்கிழமை பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் நல்ல வேளையில்தான் புறப்பட்டு என் குழந்தைகள், மாமியார், குட்டி நாத்தனார் சகிதம் என் மூத்த மைத்துனர் ஊருக்குச் சென்றேன். என் ஓர்ப்படியிடம் நான் அதிகம் பழகியதில்லையெனினும் அவரிடம் எனக்கு நல்ல மதிப்பும் ஆசையுங்கூட உண்டு.

குடும்பத்துடன் நாங்கள் சென்றதும் பரம சந்தோஷத்துடன்தான் வரவேற்றாள். "குண்டுக்குத் தப்பிப் பிழைத்துவருவீர்களா என்று ஏங்கி விட்டேன்'' என்றுகூட சொல்லிக்கண்ணீர்விட்டாள். நானும் அவளும் எத்தனையோ ஒத்துமையாகவே வீட்டுக்காரியத்தைச் செய்துவந்தோம். செலவுக்குப்பணம் என் கணவர் மாதாமாதம் தன் தமயனுக்கே அனுப்பி வந்தார்.

அந்த மகானுபாவர், என் கணவர் பணமனுப்புவதை தன் மனைவியிடம் தெரிவிக்காது தனியாக சேர்த்துவைத்த ரகஸியம் யாருக்கும்தெரியாது. நாங்களோ, மார்கழிமாதமே அங்குபோய்விட்டோம். தை, மாசி... ஒருவாறு முடிந்தது. பங்குனியும் பிறந்தது. என் ஓர்ப்படியின் மூளையைக் கலைக்க அவள் தாயார் கூனியைப்போல்வந்து கூடச்சேர்ந்தாள்...கலகத்தீ ஏறியது. முகம் கருகிச் சுருங்கியது. வார்த்தைகள் காரஸாரமாக ஆரம்பமாயிற்று. வேலைசெய்வதை விட்டுவிலகினாள். சகலமும் தலைமீதேவிழுந்தது.

அடிக்கடி உள்ளேவந்து சாமான்களைத் திறந்து திறந்துபார்ப்பதும் அளந்து அளந்துவைப்பதும் ஆரம்பமாயிற்று. "எழுவெடுத்த வீட்டில் படிப்படியாகவும் மரக்கால் மரக்கால்களாகவும் சமைத்தாலும் ஒரு சுற்றுக்கு வருவதில்லை.'' என்பதுபோன்ற வசைகள் உதிரவாரம்பித்தன. எனது சந்தோஷமெல்லாம் எகிறிப்போய் சங்கடஉதயமாகிவிட்டது. இந்த உபத்திரவங்களைச் சகிக்காமல் வெகு கஷ்டப்பட்டு பின்னும் சிலகாலம் தள்ளுவதற்குள் என்உயிரே போய்விடும்போலாகியது.

என் கணவருக்கு இந்த விஷயங்களை எழுதினால் தமயன்மீது புகார் சொல்வதாக எங்கே மனம்மாறிவிடுமோ என்கிற பயத்தில் அதைமறைத்து குழந்தைகளுக்கு உடம்புசரியில்லை என்றும் நான் கட்டாயம் ஊருக்கு வரவேண்டுமென்றும் கடிதங்கள் பாணம்போல் ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டேன்.

எப்படியாவது எங்களையனுப்பிவிடவே என் ஓர்ப்படியும் தன் குழந்தையின் சங்கிலியைக்காணவில்லை என்றும், அது வீட்டிலிருப்பவர்களையன்றி எப்படிப்போய்விடுமென்றும் வெகு கொடியவார்த்தைகளால் திட்டி, பெட்டிகளை எல்லாம் சோதனைபோடும் அத்தனை அல்பத்தனத்திற்கும் வந்துவிட்டாள். அதற்குமேல் என்னால் தாளாது பெட்டிகளைத்திறந்து காட்டிவிட்டு உடைந்தமனத்துடன் தனிமையாக என் குழந்தைகளுடன் அன்றே ரயிலேறிவந்துவிட்டேன்... என் கணவர் விஷயமறிந்தபிறகு விபரீதமான ஆத்திரமடைந்து தமயனுக்கு பெரிய கடிதபாணம் தொடுத்தார். தான் அனுப்பிய பணவிஷயத்தைச் சொல்லாதிருந்ததே இத்தனைக்கும் காரணம் என்று கத்தினார். 'குண்டாவது விழட்டும் எரிந்தாவதுபோகட்டும்; இனிமேல் நீ எங்கும்போகவேண்டாம்' என்று அவரே உத்திரவுபோட்டுவிட்டார். போதுமா வெட்கக்கேடு?'' என்றாள்.

சாமா ஐயரின் ஆச்சரியம் கரைபுரண்டது...கமலம் சிரித்துக் கொண்டே, 'மாமா!' இதுபோன்ற ருசிகரமான விஷயம் எனக்குத்தெரிந்த வரைக்குமே ஏராளமாயிருக்கிறது. அதைக்கூறிக்கொண்டுபோனால் உதய மாகிவிடும். இந்தப்பாழும் எவாக்வேஷன் வந்தாலும்வந்தது. பெண்களின் பாடு இத்தகைய திண்டாட்டம் என்றால் ஆண்களின் நிலைமையோ சொல்லவே வேண்டாம். வேளாவேளைக்குச் சரியாகவீட்டில் நல்லபண்டங் களுடன் நடந்த சிச்ருஷைகள் இல்லாது, ஓட்டல்சாப்பாடும் தனிவாழ்க்கை யின் விபரீதமும், சவுகரியக்குறைவின் கொடுமையும் ஒன்றுகூடி பலபேர் களுக்கு ஏதேதோ நோய்கள் வந்துவிட்டன. பல மாணவர்களுக்குப்படிப்பு ஹரோஹரோவாய் போய்விட்டது. பல குடும்பங்கள் சிதறியேபோய் விட்டன. பல குடும்பங்களில் இதுகாரணமாக மனஸ்தாபங்கள் உண்டாகி தீராதபகையாகவே முடிந்தது. ஆனால் ஒரு விசித்திரம் பாருங்கள். கெடுதி நேருவதுபோல் நன்மையும் சில இடங்களில் நடக்காமலில்லை. முகம் பார்க் காதிருந்த தம்பதிகள் அன்யோன்யமானார்கள். தகப்பனுடன் பேசாதிருந்த மகன் தடபுடலாகிவிட்டான். தெரியாமல் ரொக்கம் சேர்த்து வைத்திருந்த மனைவி குண்டுக்கு பயந்து ரகஸியத்தைக் கணவனிடமே தெரிவிக்கும்படி யாகிவிட்டது. தேவடியாள்வீடே கதியாகவிருந்த கணவன் தேவடியாள் ஓடிவிட்டதால் மனைவியே கதியாக வந்து சேர்ந்தான். சீர் வரிசைக்காகப் பெண்ணைத் தள்ளி வைத்திருந்த பிள்ளைவீட்டார் சம்மந்தி குடும்பத்தையே எவாக்வேஷனில் தாங்கும் அதிசயம் உண்டாகியது. க்ராமத்தையே கண் டால் பிடிக்காதிருந்த சிலர் எவாக்வேஷன் வைபவத்தில் க்ராமமே சிறந்த தென்று சேவை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதுபோன்றவைகள் சொல்பந்தான். கஷ்டப்பட்டுத் திண்டாடியதுதான் அனந்தம். உலகவிசித் திரங்கள் ஒன்ரு இரண்டா!

சாமா:—அடேயப்பா! கேட்கவே பயமாயிருக்கிறதே. நான் இந்த பக்கம் இருந்திருந்தால் நானும் இப்படித்தானே தவித்திருக்கவேண்டும். நல்லவேளையாக ஆண்டவன் இன்னும் மூன்றுவருஷம் வடக்கேயே என்னைப்போட்டுவிட்டார்...சரி. இன்னொரு எவாக்வேஷன் வரவேவராது. அப்படிவந்தால் நீ என்னிடம் வந்துவிடு; அங்கு அப்படியொன்றும் உனக் குக் குறைவு நடக்காது.

கமல:—ச்வாமீ! ஆண்டவனே! இனிமேல் அத்தகைய கோரமே உலகில்வேண்டாம் என்று நான் இரவுபகல் இறைவனை வேண்டுகிறேன். குண்டோ! பீரங்கியோ! இருப்பிடமே வைகுந்தம். இதுதான் எங்கள் தீர்மானம்—என்ருள்.

எல்லோரும் சிரித்த எதிரொலி அந்தக்கட்டிடம் பூராவுமே சூழ்ந்து எதிரொலித்தது.

[கும்பகோணத்தில் சில மாணவர்கள் சேர்ந்து ஸ்தாபித் துள்ள 'வாணி நிலயம்' நன்கு நடைபெறுவதாகவும், கையெழுத்துப் பத்திரிகை ஒன்று நடத்திவருவதாகவும் அறிந்து மிகவும் களிப்பெய்தினேன். காகிதப் பஞ்சமும் யுத்த பயங் கரமும் நிலவும் இக்காலத்தில் கையெழுத்துப் பத்திரிகையை நடத்துவது இவர்களுடைய சாதுர்யத்தையும், தமிழ் பக்தி யையும் காட்டுகிறது. மாணவர்களின் கோரிக்கைப்படி அவர் களது பத்திரிகையின் ஆண்டு மலருக்கு அனுப்பப்பட்டது இது. மாணவர்கள் ஊக்கத்துடனும் உத்ஸாகத்துடனும் நடத்தி வரும் இக் கையெழுத்துப் பத்திரிகை விரைவிலேயே அச்சு வாகனமேறி ப்ரகாசிக்கும்படி பகவானை வேண்டுகிறேன்.

வை. மு. கோ.]

ஸ்ரீமதி. விஜேதினி தேசாய்

# சித்தத்துணிவுடைய பிறநாட்டுப் பெண்மணிகள்

## ஜப்பான் துள்ளஜே வரவேற்க மழுவும் வெட்டுக்கத்திகளும்

**[தமிழ் நாட்டில் ''மோகினி''க் கென்றே பிரத்யேகமாக அளிக்கப்பட்ட விசேஷ கட்டுரை இது. ப-ர்.]**

பிறப்பு, இறப்பு, மனந்துணிந்த மாதர்—இம்மூன்றிலிருந்தும் ஒரு மனிதனும் தப்பமுடியாதென யார் கூறியுள்ளார்? அது பெரிதும் உண்மையே. மாதர் மனம் என்னே விசித்திரமானது! சாதாரண ஆடவர் மனதில் காண்பதற்கரிதான ஓர் யதார்த்திக வன்மை, தெளிவு, திடவுறுதி அதில் காணலாம். சந்தேகமில்லை, அபலாமணிகளின் சார்பாக பரிந்துப் பேசுகிறேனென்று என்மேல் குறைகூறுதீர்கள். கீழ்வரைந்துள்ள கதைகளை படித்துப்பாருங்கள். யாவும் உண்மையாக நிகழ்ந்தவைகள்-பூர்ணமாக நிரூபிக்கமுடியும். நேர்ந்தபடியே வரைந்திருக்கிறேன்.

1. கொடிய துஷ்டர்களான ஜப்பானியர்கள் சீனவை முதன்முதல் ஆக்கிரமித்தகாலத்தில் சீனஸ்திரீகள் பலத்த எதிர்ப்பை அவர்கள் சற்றுக் கூட எதிர்பார்க்கவில்லை. அந்த மதியீனத்தின் பயனை இன்று அவர்கள் அனுபவிக்கும் வாதனை கொஞ்சம் நஞ்சமில்லை. பற்பல மாகாணங்களிலும் ஜப்பான் இராணுவம் பெண்டிரை பலாத்கரித்தபோது, கிராமவாசிகளான வயதுசென்ற தாய், மாமியர்கள் அடுத்தபடி வந்த ஜப்பான்குள்ளர்களுக்கு மழு, வெட்டுக்கத்திகளால் சரியான வரவேற்பளித்தார்கள்!

2. 240 மைல் நீளமான கன்ஸூலேசீசுவான் இராஜவீதியானது கன்ஸூவிலுள்ள சீனஸ்திரீகளின் மனவுறுதிக்கு என்றுமழியா ஞாபகச் சின்னமாக விளங்குகிறது. அதன் நிர்மாணத்திற்கு ஆயிரக்கணக்கான பெண்கள் உதவிபுரிந்தனர்.

3. 1940-ம் ஆண்டு கொடியோனை கொயரிங் வட பிரான்ஸில் வந்திறங்கி இங்கிலீஷ் பட்டணங்களை கூடினவரை பாம்பிட்டு சுட்டுக் கரித்து ஈவிரக்கமற்ற தனது விமானப் படைகளுக்கு ஆக்ஞையிட்டான். அதன்படி அவ்வரக்கர்கள் லண்டன் முதனிய நகர்கள்மீது சரமாரி குண்டுகள் பொழிந்து உலகு முழுவதையும் திகைக்க வைத்தார்கள். பின்பு நேர்ந்தது தான் உலகப் பிரசித்தமாயிற்றே! லண்டன்மாநகர் சிறுமியர்கள் கொயரிங்குக்கோ அவனுடைய பைசாசிக் குண்டுகளுக்கோ சற்றேனும் அஞ்சாமல் வெகு துணிகரமாக தோற்பையும் கையுமாக பஸ் ஏறி சாதாரணம் போல் ஆபீஸுகளுக்கும் ஷாப்புகளுக்கும் சென்று தம்தம் வேலைகளை கவனிக்கத் தவறினரில்லை, உறக்க இளைப்பால் சற்று கண்கலங்கி யிருந்தாரேயன்றி அவர்கள் இதழ்களில் இயற்கையான புன்முறுவல் சதா தாண்டவமாடியேயிருந்தது. இன்னும் அப்படியேதான் செய்து வருகிறார்கள்—ஆனல் இன்று ஐக்கிய தேச அங்கத்தினரென்ற நிலையில் தங்களது அதிகரித்த சக்தியை அவர்கள் நன்கு உணர்ந்தே யிருக்கிறார்கள். என்னே அம் மங்கையரின் தீரம், துணிவு, திடசங்கற்பம்!

4. ருஷியன் வனிதை டானியாவின் கல்லையும் கரையச் செய்யும் சரிதைதான் ஓர் புராணக் கதையாய் விட்டதே! அவளை தூக்கிலிடுவதை நேரில் பார்த்த ஓர் ஜெர்மானியக் கைதி அதைப்பற்றி கூறும் வரலாற்றைக் கேளுங்கள்; "எங்கள் காம்பில் பெருத்த கோலாஹலம். பாராக்காரர்கள்

ஒரு கொரில்லா மங்கையை கைதி செய்திருந்தார்கள். இரண்டு சிப்பாய்கள் மத்தியில் அவள் உள்ளில் கொண்டுவரப்பட்டாள்; அவள் செய்த குற்ற மென்னவென்று வினவியதற்கு, வீட்டுக்கு நெருப்பு வைக்க முயன்றதாகவும் இரண்டு காஸொலீன் புட்டிகள் அவள் வச மிருந்தனவென்றும் சிப்பாய்கள் கூறினர்கள். எங்கள் கர்னல் வருமளவும் அவளை லாக்கப்பில் வைத்திருந்தோம். கர்னல் வந்தான். செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு, சகாயிகளின் தகவல்களை கூறுமாறு அவளை என்ன மன்ருடி வற்புறுத்தியும் அவள் பதிலளிக்கவேயில்லை. ஆடைகளைக் களைந்து பலவிதத்திலும் அவளை அடித்து இம்சித்தார்கள், அவள் வாய் திறக்கவேயில்லை. நிர்க்கதியான அவளை பனிக்கட்டி சிந்திக்கிடக்கும் பரந்த வெளியில் கொணர்ந்து பின்னும் சித்திரவதை செய்தார்கள். குளிரினல் தேகம் ஜில்லிட்டு, உடம்பிலிருந்து ரத்தம் கசிய ரா முழுதும் குளிர் நடுக்கமெடுக்கும் அறையில் கிடத்தினர்கள். மறுநாள் காலை தூக்கிலிடவும் செய்தார்கள். அவள் மூடின வாய் மூடினபடியேயிருந்தது!

5. சேனைகளின் பராமரிப்புக்காக பின்னணியினின்று உழைக்கும் பெண்மணிகள் எத்தனை! யுத்தகால நெருக்கடிகளனைத்தையும் சகித்துக் கொண்டு தம்தம் குடும்ப நிர்வாகம் செய்துவரும் தருணிகள் எத்தனை பெயர்கள்! குடும்பங்களை நிலைநிறுத்திவர நிலம் சாகுபடி செய்வதிலும் முன் ஒரு பொழுதும் செய்தறியாத மற்றும் ஆயிரக்கணக்கான வேலைகளிலும் முனைந்துவரும் பெண்டுகள் எத்தனை! இன்றைய நாகரீக உலகின் பெரும் பாதியினுடையவும் சித்திரம் இதுவேயாகும்.

ஆனல், இந்தியாவைப்பற்றி என்னவென்று கேட்கிறீர்களோ? என்ன அசட்டுத்தனமான கேள்வி அது! இந்தியாசரித்திரம்பற்றி முழு மக்குக்கள் தான் அதுபோன்ற கேள்விகேட்பர். சுருங்கக்கூறப்போமாயின், சித்தூர் ராணி பத்மினி, சக்கிரவர்த்தினி நூர்ஜெஹான், சாந்த்பீபி, ஜான்ஸி மகாராணி—வீரத்திலும் தீரத்திலும் இதுபோன்ற பாரதநாட்டு வனிதா ரத்தினங்களுக்கு நிகர் இவ்வையகந்தனிலுண்டோ?

மற்ற ராஜ்யப்பெண்மணிகள் என்ன செய்து வருகிறார்களோ, அது நம்பெண்மணிகளாலும் செய்யமுடியுமென்பதற்கு ஐயமில்லை. (I. P. F.)

---

"குகப்ரியை"

# மைத்ரேயி

"வேதகாலத்திலே பெண்கள் எப்படி இருந்தார்கள், நாட்டிலும், வீட்டிலும் அவர்களது நிலை என்ன?" என்பதற்கு மைத்ரேயி ஒரு சிறந்த உதாரணம். பொதுவாக இந்துமதத்தில் பெண்களுக்கு துறவறம்விதிக்கப்படவில்லை என்றும், விவாகமின்றியே காலங்கழித்ததில்லை என்றும் கருதப்படுகிறது. இவை பின்னர் ஏற்பட்ட பலமாறுதல்களுள் ஒன்ருக இருக்க வேணுமேயன்றி வேதகாலத்திலே அப்படி இருக்கவில்லை என்பதற்கு உபநிடதமும், கார்க்கி, மைத்ரேயி இவர்களது சரிதமுமே போதும். கார்க்கி விவாகமானவரா? என்று சொல்லவில்லை, யஞ்ஞவல்க்யருக்குப்பின், மைத்ரேயி துறவியாய் வாழ்ந்தாள் என்பதை நம் அனுமானத்திற்கே விட்டுவிடுகிருர் ஆசிரியர் நாடகத்திறமையோடு.

துறத்தல் என்னும் பதம் மிகச்சிறந்த ஒரு பதம். காவி உடையினலே ஒருவனே அல்லது ஒருத்தியோ துறவியாகிவிடமுடியாது. மனத்துறவு வேண்டும். அப்படித்துறக்கும் உரிமை ஆடவர்களுக்குமட்டும் தானு?

உடலா துறவியாகிறது. மனதிலல்லவோ துறக்கவேணும். மனம் என்று சொன்னால், அதில் ஆண்மனம், பெண்மனம் என்று பேதமுண்டா? "மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றே யன்றே" என்றார் கம்பர். மனதில் உதிக்கும் இச்சைகளைத் துறப்பதல்லவா துறவு, இந்த நிலையை, ஆசைகள் ஒடுங்கிய ஒரு தன்மையைத்தான் மனம் இறத்தல், மனம் அழிந்துபோகிறது என்று சொல்லுகிறார்கள். இந்தக் கருத்தைத் தான், அதாவது விருப்பு, வெறுப்பு, இவ்விரண்டும் அற்ற ஒரு நிலையை, துறவு நிலையைச் சொல்லும் பொழுது.

**சினம் இறக்கக் கற்றாலும் - சித்தி எலாம் பெற்றாலும்,**
**மனம் இறக்கக் கல்லார்க்கு வாய் ஏன்? பராபரமே!"**

என்று கேட்கிறார் தாயுமானார்.

மனதிலுள்ள ஆசைகளைத் துறப்பது ஆண்மக்களுக்குமட்டுமேதான் சாத்யமா?

**ஆணும் பெண்ணும் நிகர் எனக்கொள்வதால்**
**அறிவில்ஓங்கி இவ்வையம் தழைக்கும்,**

என்று வருங்காலத்தில் வாக்பத்தை வைத்தால், செய்தால், நடக்கும் என்றார் பாரதியார். ஆனால், 'ஆணும் பெண்ணும் நிகர் எனக்கொண்டதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைத்தது வேத காலத்தில்' என்று மைத்ரேயி சொல்லுகிறாள் என்றே நமக்குத் தோன்றுகிறது. ஆகவே பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கையும், பொய்மை கொண்ட கலிக்குப் புதிதேயன்றி, சதுர்மறைப்படி மாதரிருந்த நாள்தன்னிலே பொதுவான வழக்கம்தான் என்பதை உணர, மைத்ரேயியைக் காட்டிலும் சிறந்த உதாரணம் வேண்டியதில்லை.

* * * *

யஞ்ஞவல்கியர் சிறந்த தவசிரேஷ்டர், பிரம்மஞானி. இவருக்குத் துறவறம் ஒன்று என்று வேறாகக் குறிக்கவேண்டிய அவசியமேயில்லை, சிறந்த பிரம்ம நிஷ்டராகிய இவர் எதற்குத் துறவு பூணவேணும்? என்று நமக்குத் தோன்றுகிறது. விஷயம் வேறொன்றுமில்லை. மைத்ரேயியின் மனநிலை, அவளது தியாகபுத்தி, அறிவின் முதிர்ச்சி; இவைகளை நாம் உணர்ந்துகொள்ளவேணும் என்பதன்பொருட்டும் இருக்கலாமல்லவா?

சந்தர்ப்பங்களைப் பார்க்கும்பொழுது, கார்க்கியின் விஷயம் முன்னதாகவும், மைத்ரேயி யஞ்ஞவல்க்ய ஸம்வாதம் பின்னதாகவும் இருக்கலாமென்று தோன்றுகிறது; ஆனால் பிரகதாரண்ய உபநிஷத்திலே, முதலில் மைத்ரேயியும், பின்னர் கார்க்கியுமே இடம் பெறுகின்றனர்.

* * * *

ஒருநாள் பகல், யஞ்ஞவல்க்யர் தமது மனைவியர்களோடு சொல்லுகிறார். மூத்தவளான மைத்ரேயி சற்று அருகிலும், அவளை அடுத்து காத்யாயனியும், உட்கார்ந்திருக்கிறார்கள் குருவும் மாணவரும்போல. முனிவரது முகத்திலே சாந்தம் ததும்பி நிற்கிறது. மிகவும் மெல்லிய குரலில் "இன்று ஒரு நல்ல முடிவுக்குவந்து முத்திபெறுவதற்கு உலகத்திலே சிறந்த வழி எதுவோ அதைப் பின்பற்றத் தீர்மானித்துவிட்டேன்." என்றார்,

"அது என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள் காத்யாயனி.

"இதுவரையில் ஜனகனது தோழமையால் ஏராளமான பொன்னையும் பொருளையும் தேடி வைத்துவிட்டேன். அதை இரண்டாய்ப் பகிர்ந்து உங்கள் இருவருக்கும் கொடுத்துவிடுகிறேன். வைத்துக்கொண்டு

சுகமாய் வாழுங்கள். நான் துறவறம் பூண்டு வனம் செல்ல உத்தேசித்து விட்டேன்'' என்றார்.

காத்யாயனி சற்றே திகைத்தாள். "மிறகு, சரிதான், அவர் துறவு பூண்டால் கணவன் மனைவி என்ற பந்தமேது? உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய் என்றபடி ஏதோ ஒருவாறாய் வாழ்நாளைக் கழிக்கவேண்டியதுதான்.'' என்று நினைத்தாள்.

ஆனால் மைத்ரேயியோ சும்மாவிடவில்லை. "எதை அடைவதற்காக இவர் துறவுபூணவேணும்? யாகயஞ்ஞங்கள் செய்யப் பொருள் அவசியம், பொருளைத்துறந்துபோவானேன்!''என்றுகேட்க,பொருளினால் ஒருவனுக்கு அமரத்வம் கிடைப்பதில்லை என்கிறார் அவர். "அப்படியானால், எதனால் அமரத்வம்கிடைக்குமோ அதை எனக்குத் தெளியச்சொல்லவேணும்.'' என்கிறாள் அவள்.

அவர் சொல்லுகிறார், "மனிதன் ஆத்மவிசாரம் செய்யவேணும், ஒருவரை ஒருவர் ஆத்மாவுக்காக நேசிக்கவேணுமேயன்றி, காரியார்த்தமாகவோ, சரீரசம்பந்தமாகவோ நேசிக்க, அன்புசெய்யக்கூடாது, அப்படி அன்புசெய்வதற்கு ஆத்மாவைத்தெரிந்து கொள்ளவேணும். அன்புசெய்வதற்கு ஆத்மலக்ஷணம் தெரியவேணும். ஆத்மா ஒன்றே பார்க்கத்தக்கது. அதுவே கேட்கத்தக்கது, நினைக்கத்தக்கது, தியானிக்கத்தக்கது, ஆத்மதர்சனத்தினாலும், கேட்பதனாலும், ஸ்மரிப்பதனாலும் தியானிப்பதனாலும் எல்லாம் தெரியும். எல்லாம் தெரியும் என்பது எப்படி என்றால், ஒருபெரிய பேரிவாத்யமானது எப்படி மற்ற சிறு சப்தங்களைத் தனித்தனியே கேட்க ஒட்டாமல் தனக்குள் அடக்கிக்கொள்ளுகிறதோ, அதுபோல பிரஞ்ஞானம் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக்கொண்டது, அதாவது ஆத்மாவைத் தெரிந்துகொள்ளுவதுதான் பிரஞ்ஞானம். (இது இல்லாவிட்டால், எந்த அவயவத்திற்கும் எந்த இந்திரியத்துக்கும் செயல் இல்லை.)

உதாரணமாக, அக்னியிலிருந்து நெருப்புப் பொறிகள்,ஜ்வாலை, புகை, இவைகள் உண்டானபோதிலும், எப்படி அக்னிமட்டும் ஒன்றோ அதுபோல பிரஞ்ஞானகனமான பிரம்மத்திலிருந்து, அக்னியிலிருந்துதோன்றி மறையும் மற்றவைகளைப்போல நாமரூபமான இந்த ஜகத் உண்டாயிற்று.

ஈரமான விறகுகளில் மூடப்பட்ட அக்னியிலிருந்து எப்படிப் பலவிதமான நிறமுள்ள புகை எழுகின்றதோ அப்படி இந்த மகத்பூதமான பரமாத்மாவின் சுவாசத்தைப்போல, வேதம் புராணம், இதிகாசம் முதலியவைகள்தோன்றின. ஆகவே இவையெல்லாம் பிரஞ்ஞானகனமென்ற பிரம்மத்துள் அடக்கம், வாபீ, கூப, தடாக, நதீ, நத ஜலங்கள் எல்லாம் எப்படி முடிவில் கடலை அடைகிறதோ அதுபோல ஆத்மாவான இந்த உலகம் பரப்பிரம்மத்தில் இரண்டறக்கலந்துவிடுகிறது. ஆகவே ஜகத்திற்கு ஸ்தானம் பிரம்ம் ஆத்மாவை அறிந்துகொள்ளுகிறது என்பதுதான் பிரஞ்ஞானகனமான பிரம்மத்தை அறிதல்,எல்லாம் ஒன்றே என்ற தத்துவத்தை அறிதல்—என்றார்.

மைத்ரேயி மறுபடிசொல்லுகிறாள்.—இப்பொழுது பிரஞ்ஞானகனம் என்றபெயரினால் பிரம்மத்தைக் குறிப்பிட்டீர்கள். அதை அடைந்தபிறகு நாமரூபங்கள் நசித்துவிடுகின்றன என்று சொன்னீர்கள். இவை எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. தெளியச்சொல்லவேணும்'' என்று கேட்க,

மைத்ரேயீ! நான் சொன்னவைகள் உனக்குத் தெரியாதவைகள் அல்ல. இவைகள்போதும்! இருந்தாலும் இன்னொரு உவமைசொல்லுகிறேன். இந்த அவித்யாசம்பந்தமான உலகம், பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பம். ஜலத்தில் காணப்படும் சந்திரபிம்பம், எப்படி தண்ணீரை

(30-ம் பக்கத்தில் முடிவு.)

### சிங்கப்பெருமாள்கோவில்

## ஸ்ரீபாடலாத்ரி நரஸிம்ஹர் அஷ்டச்லோகி

2. சிந்தயேநிசமிந்திராபதிமார்த்த ப்ருந்தபயாபஹம்
மத்த தைத்யஜகுக்ஷி தாரணலோலுபம் பவதாரகம்
தாடகேயமுகாரி ஸங்கநி பர்ஹணேத்ஸுகமச்யுதம்
பாடலா சலகந்தரம் ச்ரிதமீச்வரம் ந்ருஹரிம் ப்ரபும்

இந்திராபதிம்.—ஸ்ரீலக்ஷ்மீநாதனையும்

| | |
|---|---|
| ஆர்த்த ப்ருந்த பயாபஹம் | வருந்திய ஜனக்கூட்டத்தின் பயத்தைப் போக்கடிப்பவராயும் |
| மத்த தைத்யஜகுக்ஷி தாரணலோலுபம் | கொழுத்த அசுரனை இரணியனுடைய வயிற்றைப் பிளப்பதில் ஆசைகொண்டவராயும் |

பவதாரகம் —ஸம்ஸாரத்தைத் தாண்டிவைப்பவராயும்

| | |
|---|---|
| தாடகேயமுகாரி ஸங்க நிபர்ஹணேத்ஸுகம் | மாரீசன் முதலிய சத்ருக்களின்கூட்டத்தை ஒழிப்பதில் அவாவுள்ளவராயும் |
| அச்யுதம் | தன்னை அடைந்தவர்களை நழுவச்செய்யாதவராயும் |

பாடலாசலகந்தரம்—ஸ்ரீ பாடலாத்ரியின் குகையை
ச்ரிதம்—அடைந்திருப்பவராயும்
ஈச்வரம்—ஸர்வேச்வரனையும்
ப்ரபும்—பிரபுவாயுமிருக்கிற
ந்ருஹரிம்—ஸ்ரீநரஸிம்மனை
அநிசம்—எப்பொழுதும்
சிந்தயே—தியானிக்கிறேன்,

தேவரீர் ஹிரண்யன் மாரீசன் முதலிய விரோதிகளை நாசம் செய்து ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் முதலியோரை ரக்ஷித்தபடி எங்கள் விரோதிகளையும் அழித்து எங்களை ஸம்ஸாரத்திலிருந்து மீட்டு தேவரிடமிருந்து விலகாமலிருக்கச் செய்யவேணுமென்பது கருத்து.

3. சிந்தயேநிசமிந்து ஸுந்தர பாண்டுராங்கமய: ப்ரதம்
காந்தஹீர கிரீடகுண்டல ஹார நூபுர சோபிதம்
வாம பாக ஸமுல்ல ஸஜ்ஜலஜாலயாநந ஸாரஸோந்
மேஷண ருணவீக்ஷணம் கடிகாசலே ந்ருஹரிம் ப்ரபும்


| | |
|---|---|
| இந்து ஸுந்தர பாண்டு ராங்கம் | சந்திரன்போல் அழகாயும் வெளுப்புமான திருமேனியுடையவரும் |

அயப்ரதம்—சுபங்களைக் கொடுப்பவரும்

| | |
|---|---|
| காந்தஹீர கிரீடகுண்டல ஹார நூபுர சோபிதம் | அழகிய வஜ்ரமிழைத்த கிரீடம், குண்டலம், ஹாரம், தண்டை, இவைகளால் பிரகாசிப்பவரும் |
| வாம பாகஸமுல்லஸஜ் ஜலஜாலயாநநஸார ஸோந்மேஷணருண வீக்ஷணம் | இடது பக்கத்தில் விளங்கும் மகாலக்ஷ்மியின் திருமுகமாகிற தாமரைப் பூவை மலரச்செய்கிற சிவந்த திருக்கண்களையுடையவரும் |

கடிகாசலே—கடிகாசலத்தில் (வஸிப்பவருமான)

| | |
|---|---|
| ப்ரபும்-ந்ருஹரிம் | பிரபுவான ஸ்ரீநரஸிம்மனை (ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியை) |



# கோயில்

★

பி. ஆர். ராஜசூடாமணி

கும்பமொடு குவிந்தெழுந்த கோபுரஞ்சூழ் கோயில்
தம்பமொடு மண்டபங்கள் தாங்கிநிற்கும் கோயில்

தும்கமலர் செங்கழுநீர் அங்கைதனில் கொய்து
பங்கமின்றி வினைமுடிக்கும் ஐங்கரனார் கோயில்

செங்கனலின் மேனியினர் சங்கரனார் கோயில்
பொங்கருளின் மழைநீலம் பொங்கிவருங்கோயில்

செங்கமலப் பொன்னழகு தங்கிவளர் கோயில்
வெண்கமலக் கலைஅழகு விளங்கிவளர் கோயில்

தங்குபனி மலை அழகி தழைத்துவளர் கோயில்
அங்கதிர்வேல் ஆறுமுக அழகமரும் கோயில்

எண்ணியெண்ணிச் சித்திரித்த இன்னழகுக் கோயில்
மண்ணுலகில் விண்ணவரும் நண்ணிவரும் கோயில்

எண்ணரிய முடி மன்னர் எழுப்பிவைத்த கோயில்
பண்ணிறைந்த பாடல்பெறும் பண்பமைந்த கோயில்

உண்ணுவதில் உறங்குவதில் எண்ணமற்ற சிற்பி
எண்ணிவிட்ட அழகினுக்காய் பண்ணிவைத்த கோயில்.

உள் நெகிழ்ந்த அன்பர் உள்ளம் ஓங்குவித்த கோயில்
உள்ளத்தின் ஆசையெல்லாம் உருவான கோயில்.

---

அநிசம் சிந்தயே—எப்பொழுதும் தியானிக்கிறேன்.

தேவரீர் திருமேனியும் திருவாபரணங்களும் ஸ்ரீதேவி முகோல்லாஸகரமான கடாக்ஷங்களும் எங்கள் கண்முன் எப்பொழுதும்நிற்கின்றனவென்பது கருத்து.

பிழை திருத்தம்:—1-4-44-சஞ்சிகையில் 29-வது பக்கத்தில் [விட்டுப்போனவை.

5-வது வரி. குணவாரிதிம்—குணங்களின் ஸமுத்திரமாயும்

8-வது வரி. விபும்—எங்கும் வியாபித்திருப்பவராயும்

(27-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இறைத்துவிடுவதனால் மறைந்துபோய் அப்பொழுது உண்மையான சந்திரன்மட்டுமே நிற்கின்றதோ அதுபோல, அவித்யசம்பந்தமான உலகம் நசித்துப்போகும்பொழுது பிரம்மம் ஒன்றுமட்டுமே எஞ்சி நிற்கிறது."

இப்படி நெடுநேரம் நடந்த விவாதத்திற்குப்பிறகு மைத்ரேயி தன்னிடமுள்ள பொருள்களைக் காத்யாயனியிடம் ஒப்புவித்து தானும் அவரைப்பின் தொடர நிச்சயிக்கிருள். அதன்பின் என்ன? என்று கேட்கவேண்டியதில்லை. நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவதுபோல உபநிடத நாடகத்தின் திரை வீழ்கிறது.

---

<u>ஸ்ரீமான். வித்வான் வி. லக்ஷ்மணன்</u>

# ஆயர்பாடியில் ஒரு நாள்



இன்றுதான் கார்த்திகைத் திருநாள். ஆம்! எல்லாப் பெண்களையும் இன்பத்தில் திளைக்கச் செய்யும் நன்னாள்!

கண்ணன் மற்ற நண்பர்களுடன் கூடிக் குலாவிப் பேசிக் கொண்டிருக்கிறுன். அவருள் ஒருவன் இராமன் என்பவன் கோவிந்தனைத் தனியாக அழைத்து கண்ணன்மீது ஓரளவு பொறுமையுடன் ஒரு வார்த்தை கூறுகிறுன்.

"என்டா கோண்டு! கண்ணன்மட்டும் என்னென்ன மந்திரத்தைத்தான் கையில் போட்டு வைத்திருக்கானே! அவன் செய்வதெல்லாம் ரொம்ப ஆச்சரியத்தைத் தருகிறதே! அவன் நம்மோடே விளையாட்டாய் பேசிக்கொண்டேயிருக்கும்பொழுது மற்றொரு

இடத்தில் இன்னொரு காரியத்தைக் கண்ஜாடையினாலேயே செய்து விடுறானே! அது என்ன ஏதாவது மாயவேலையா? என்ன!

கோவிந்தன்:—"அதெல்லாம் ஒண்ணுமில்லேடா! ஏதோ இக்ஷிணி வித்தை அவனுக்கு இயற்கையிலேயே அப்பியாசமாக இருக்கவேண்டும். போகிற வருகிற பெண்கள் எல்லாம் அவனைக் கண்டால் போதும்! எப்படி மயங்கிப்போய்விடுகிறார்கள்? இவ்வளவு சக்தியும் அந்த இக்ஷிணி வேலைதான்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மற்றொருவன் இவர்கள் வார்த்தையைக் கேட்டதும் ஒரே வேகமாகக் கிட்டே வந்து இருவர் மண்டையையும் தட்டுகிறான் பலமாக.

"ஏண்டா எங்களை அடிக்கிறாய்! கண்ணனிடம் உன்னைப் பற்றிச்சொல்லுகிறேனா இல்லையா பார்!..."இத்தனை நாழிகை கண்ணனைப்பற்றித்தானே பொறுமையுடன் பேசினீர்கள். பிறகு உனக்கு ரொம்ப வேண்டியவன்மாதிரி அவனைச் சுட்டிக்காட்டி அவனிடம் சொல்லி என்னை அடிவாங்கி வைக்கிறேன் என்கிறாயே! முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாயே!"

ஆமாண்டா! இதுவரையிலும் அவனைப்பற்றித்தான் பேசினோம். ஆனால் எங்கள் மனம் அவனிடம் லயித்துப்போய்விட்டதென்றே சொல்லணும். ஏனென்றால் நாங்கள் எங்களை அறியாமலேயே அவனைத் துணைகொண்டு பேசிவிடுகிறோமல்லவா?

கண்ணன் எல்லோருடனும் புல்லாங்குழலை வாயில் வைத்த வண்ணம் இன்னிசை எழுப்பிக்கொண்டே வருகிறான்.

கோவிந்தன்:—"வா! கண்ணா வா! இன்னிக்குக் கார்த்திகைத் திருநாள் அல்லவா? எங்கெங்கே போவதாக திட்டம் போட்டிருக்கிறாய்? சீக்கிரம் சொல்.

கண்ணன்:—எல்லாம் நடக்க நடக்கத் தெரியும். எல்லாரும் மாலைவேளையில் தயாராக இருக்கணும். சரி. போங்கள்.

மாலை ஐந்து மணி இருக்கும். எல்லா நண்பர்களும் தம் பக்கத்தில் இருந்த கண்ணனைக் காணவில்லையே எனத் தவிக்கிறார்கள். கண்ணன் எங்கே கணப்பொழுதில் போயிருப்பான் என்று ஏங்கித் தவித்துத் தேடுகிறார்கள். ஓரிடத்தில் கண்ணன் கோபிகை ஒருத்தியிடம் சரஸசல்லாபம் செய்வது இவர்களுக்கு எப்படித் தெரியும்!

கோபிகை:—கண்ணா! இந்தா பொரி! எடுத்துத்தின்னு! என் கையினால் உன் அதரத்தைத் தொட்டு திருவாயில் வைக்கட்டுமா! அதற்கு நான் அருகதை ஆனவள்தானே! உன்மேல் எனக்கு இருக்கும் பிரேமை வெள்ளம் புகலத் தரமில்லை கண்ணா! இந்த அபலை இனி என்றும் உன்னுடைய அடிமை என்றே எண்ணிக்கொள். (எடுத்துக் கொடுக்கிறாள் கையில்.)

கண்ணன்:—(ஒருவித புன்னகையுடன்) உன்னிடம் பொரி வாங்கித் தின்னவா நான் வந்தேன். இவ்வளவுபெரிய உலகத்தில் நீ கொடுக்காவிட்டால் எனக்குப் பொரி கிடைக்காமற் போய்விடுமா என்ன! பெரிய பொருளைக் கொண்டுவந்துவிட்டதுபோல் எனக்கு உபசாரம் செய்கிறாயே! எனக்கு வேண்டாம் இது.

கோபி:—கண்ணா! என்மீது ஏன் இவ்வளவு பாராமுகம்! இந்தப் பொரி அல்பமாக இருந்தாலும் இன்று கார்த்திகைத் திருநாள் அல்லவா? நீ எடுத்துத் தின்றால் என் மனம் எவ்வளவு பூரிப்பாக இருக்கும் தெரியுமா!

கண்:—உன் மனதைப் பூரிப்படையச் செய்வதற்கு ஆள் நான்தான் என்று பார்த்தாயோ?

கோபி:—அப்படி என்றால் நான் உன்னையே நம்பி என் மனத்தைப் பறிகொடுத்ததற்கு இதுதானு பிரதிப் பிரயோசனம்?

கண்:—வேறு எதை நீ எதிர்பார்த்தாய்?

கோபி:—(கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது கண்களிலிருந்து) நான் எதிர்பார்த்ததா! உன்னிடம் எதிர்பார்த்ததா! எதையென்று சொல்வேன்! எல்லாம்தான்! உன் கருணை வடிவத்தைத்தான் முழுவதும் எதிர்பார்த்தேன்.

கண்:—அழாதே! என்னைப்பார்.

(கோபி தலைகுனிந்தவள் நிமிர்ந்து பார்க்கிறாள்)

கண்:—ஆஹா! என்ன அழகு! அழுவதிலும் ஒரு அழகு உன்னிடம் அருமையாக இருக்கே! சரி! ஒரு சிரிப்புச் சிரி பார்ப்போம்!

(கோபிகை கண்ணன் பேசிய வார்த்தையிலிருந்து தனக்கு ஒருவித ஆனந்தம் பொங்கி வழிவதை அடக்கி நிதானமாகச் சிரித்தாள்.)

கோபி:—சரி சாப்பிடலாமே பொரியை?

கண்:—நீ உன் கையால் என் வாயில் போடணும் என்று சொல்லவில்லை? அதற்குள் அந்த வார்த்தையை மறந்துபோய் நானே எடுத்து சாப்பிடுவேனு என்ன!

கோபி:—ஆஹா! கண்ணா! என்ன பாக்கியம் செய்திருக்கிறேன்! தேவர் யாவர்க்கும் கிட்டாத பேறு அடியாளுக்குக் கிடைத்தது. இந்தா! ஆ! என்ன அழகிய இதழ்! குமுதமும் தோற்றுப்போய்விடுமே! என்ன கண்கள்! என் மனத்தின் இடையில் சென்று பாயும் சக்தியைப் பெற்றிருக்கிறதே! என் கண்ணா! ஏற்றுக்கொள்.

கண்ணன் பொரியை உண்டவனாய் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு திடீரென்று நண்பர்களிடையில் வரவே எல்லோரும் பரவசமாய் "கண்ணா! வா! எங்கு போயிருந்தாய்! எந்தக் கண்கள் உன் மாயக் கண்களை மருட்டிவிட்டன? ஆ! வாயில் என்ன பொரியா! எங்களுக்குக் கிடையாதா?" என்றனர்.

கண்ணன் தன் மடியிலிருந்த பொரியை உதிர்த்து அனைவரையும் தின்னச்செய்துதான் போயிருந்த இடத்தையும் அங்கே நடந்தவற்றையும் ஆயிரம் புளுகுடன் சேர்த்துச் சொல்லி அவர்களை மயக்குவித்தான். பொய்சொல்லி மாயம் புரிந்து, ஆயர்களை மயக்குவதில் தான் அவனுக்கு என்ன ஆனந்தமோ!



# பக்தி

*மூன்று கட்டுரைகளும் ஒரு சம்பாஷணையும்*

## 1

பக்தி என்பது அன்பு என்று பொருள்படும். அதாவது ஒருவன் மற்றொருவனிடத்தில் அன்பாக இருந்தால் அது பக்தி. அதே போல் கடவுளிடத்தில் நாம் காட்டும் அன்பிற்கு கடவுள்பக்தி என்று பெயர். பக்தியில் பலவிதங்கள் உண்டு. ராஜபக்தி, தேசபக்தி கடவுள்பக்தி, பதிபக்தி என்பன.

எனக்கு வியாசம் எழுதுவதென்றால் பிடிக்கவும் பிடிக்காது. எழுதவும் தெரியாது. நான் முதன் முதலில் இப்பொழுதுதான் கட்டுரை எழுதுகிறேன். அதுவும் 'பக்தி' என்றதும்தான் நான் எழுத ஆரம்பித்தேன்.

பக்தி என்றாலே எனக்குப் பிடிக்கும். என் வீட்டிற்கு சமீபத்தில் ஒரு யோகி இருக்கிறார். அவருடைய நற்போதனைகளாலும், நற்செய்கைகளாலும் என் பக்தி அதிகமாயிற்று. அடிக்கடி அந்த யோகி பக்தியைப்பற்றி என்னிடம் பல தடவைகள் உதாரணக் கதைகள் மூலம்விளக்கிக் காட்டியிருக்கிறார்.

கடவுளிடத்தில் நாம் பக்தி செலுத்தவேண்டியது நம் கடமையே. ஆனால் அந்த பக்தியை பலவிதங்களில் செலுத்தலாம். நமக்கு பக்தி செலுத்த பணச்செலவு கிடையாது. அதற்கென்று தனியான நேரமும், எப்படி செய்வதென்பதும் கிடையாது. நாம் நினைத்தபோது கடவுளை தியானம் செய்யலாம். நமது சரீரம் களைப் படைந்துவிட்டால் மனதினாலாவது நாளுக்கு ஒருதடவையாவது கடவுளை நினைக்கலாம்.

ஒரு சமயம் நாரதர் பரமசிவனிடம் "என்னைவிட உயர்ந்த பக்தன் வேறு ஒருவன் இருக்கிறானா" என்று கர்வத்துடன் கேட்டதற்கு பரமசிவன் "உன்னைவிட உயர்ந்தவன் ஒருவன் பூலோகத்தில் இருக்கிறான்" என்றார். நாரதருக்கு கோபம் வந்துவிட்டது. "அவன் யார்?" என்று கேட்டார். "ஒரு விறகுவெட்டி" என்று பரமசிவன் சொன்னார். நாரதர் பூலோகத்துக்கு வந்து பார்த்தார். அந்த விறகு வெட்டி தினமும் மூன்றுவேளையும் கஞ்சி குடிப்பதற்கு முன்னால் 'கடவுளே! எனக்கு இந்த கஞ்சி கிடைத்ததற்காக உமக்கு வந்தனம்' என்று ஒரு நாள் தவறாமல் சொல்லிவந்தான். நாரதர் பரமசிவனிடம் சென்று "அவன் ஒருநாளுக்கு 3 தடவை நினைக்கிறான். நானோ நாள் முழுவதும் கடவுளையே நினைக்கிறேன்" என்றார். சிவன் ஒரு கிண்ணம் வழியப்பால் கொடுத்து "இதில் ஒரு சொட்டும் சிந்தாமல் என்னை பிரதக்ஷணமாக வந்து எனக்கு அபிஷேகம் செய்" என்றார். நாரதர் பாலை வாங்கிக்கொண்டு கீழே சிந்தாமல் பிரதக்ஷணம்

வந்து பரமசிவனுக்குக்கொடுத்தார். சிவன் "நீ இன்றையதினத்தில் நாளும் என்னை ஒரு தடவையாவது நினைத்தாயா" என்று கேட்டார். நாரதர் ஒருதடவையாவது நினைக்கவேயில்லை. "ஆகையால் விறகு வெட்டிதான் உயர்ந்தவன்" என்ருர். நாம் கடவுளிடத்தில் பக்தியைச் செலுத்தினல் நம்முடைய காரியங்கள் கைகூடும். என் அனுபவத்தில் நான் எவ்வளவோ காரியங்களில் ஜெயமடைந்திருக்கிறேன். இதில் தப்புகள் இருக்கும். அவைகளை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். —ஸ்ரீமதி. ஏ. சுந்தரம்

## 2

எனக்கு கட்டுரை எழுதுவதென்ருலே தெரியவே தெரியாது. ஆனல் ரொம்ப நாளாக கட்டுரை எழுத ஆவல்மட்டும் உண்டு. தைரியமோ இல்லை. ஏன்? நமது ஆசிரியர்கள் என்னுடைய கட்டுரையைப் பார்த்ததும் waste paper basket டிடம் ஸெலெக்ட் பண்ண அனுப்பிவிடுவார்கள் என்று பயம். இருந்தபோதிலும்கூட எனக்கு மிகவும் அன்புள்ள ஒரு பெரியவர் என்னை 'பக்தி' என்பதைப் பற்றி ஏதாகிலும் எழுது என்று சொன்னதின்பேரில், நான் 'பக்தி' என்ற பெயரைக்கேட்டுப் பரவசமாகி, பக்தி என்பதைப் பற்றி எழுதினல் நாம் அபஜெயம்அடையமாட்டோம் என்றெண்ணி இக்கட்டுரை எழுதலானேன்.

'பக்தி' என்ருல் அன்பு என்று சொல்லலாம். அன்பு என்னும் பதம் மனிதர்களுக்குள்ளும், பக்தி என்பது கடவுளுக்கும் மனிதர்களுக்கும் தொடர்பாயுள்ள ஒரு பதம்.

சிலசமயங்களில் எனது அன்புக்குரிய பெரியவருக்கும் எனக்கும் தர்க்கம் வரும். அப்பெரியவர், மகாஞானி, த்யாகி. அவரிடம் நான் தர்க்கம் செய்வேன். நான் தினம் காலைக் கடன்களை முடித்ததும் விபூதி தரித்துக்கொண்டு ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்வேன். அப்பெரியவர் இல்லாதசமயத்தில் நான் ஸ்தோத்திரம் செய்துவிட்டு வந்துவிட்டால், "என்ன சேதி? ஏதாவது ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்தாயோ! விபூதிகூட தரிக்கவில்லைபோலிருக்கே!" என்று என்னைக் குறும்பாகக் கேட்பார். நான் "ஆம் எனக்குக் கடவுளே கிடையாது; எல்லாம் வயதானபிறகுதான்" என்று குறும்புடன் பதிலளிப்பேன். ஆனல் உண்மையில் நான் அன்று கடவுளைத்தொழுதிருப்பேன். அவ்வாறு அவர் சொல்லியவுடன் நாம் பிறருக்காக கடவுளைத் தொழுகிருேமா நமக்காகத் தொழுகிருேமா என்று எண்ணியே கோபத்துடன் பதிலளிப்பேன்.

ஆனல் நான் அப்பெரியவரிடம் பழகியதுமுதற்கொண்டுதான் எனக்கு பக்தி சிறிது அதிகமாயிற்று. அவர் எனக்கு ஸ்படிகப் பிள்ளையார் கொடுத்து, நீ இதை சரிவர பூஜை செய்தால் நன்மை உண்டாகுமென்ருர். நானும் அதை தினந்தோறும் பூஜைசெய்து வந்தேன். சில சமயங்களில் நாம் இவ்வளவு நாள் பூஜைசெய்தோமே என்னடா இது? இந்தப் பிள்ளையார் நமக்கு ப்ரஸன்னமாகவில்லையே என்று அலக்ஷியமாயுமிருப்பேன். "இதற்குத்தானு தினமும் காலையில் ஸ்னனம்செய்து, மடி உடுத்திக்கொண்டு, சந்த

ணம் அரைத்து புஷ்பம் கொய்து அபிஷேகம் எல்லாம் செய்தோம். இதற்குச் செய்ததை உருவமில்லாத கல்லுக்குச் செய்யலாம்'' என்றுகூட எண்ணுவேன். இப்பொழுதுதான் என் குற்றத்தை உணர்ந்தேன். நான் கடவுளை பூஜைசெய்த பொழுது என் மனம் வேறு இடத்திலிருக்கும். கைகள், மற்ற அவயவங்கள் கடவுளை வணங்கும். மனமும் கடவுளிடம் செல்லவேண்டும்.

பக்திசெய்வதென்றால் திடீரென்று வராது. தினந்தோறும் கடவுளைத் தொழவேண்டும். வணங்கும்போது முழுமனதையும் கடவுளிடம் செலுத்தவேண்டும். சிறு உதாரணம்: ஒரு வயதான மாமியாரும், மாட்டுப் பெண்ணும் இருந்தனர். வைகுண்ட ஏகாதசியன்று மாட்டுப்பெண்ணுக்கு அவசியம் கோயிலுக்குப் போக எண்ணம், ஆனால் மாமிக்குப் பயந்து போகவில்லை. மாமியார் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது மாட்டுப்பெண் தோசை வார்த்துக் கொண்டிருந்தாள். மாமியார் கோயிலுக்குப்போகும் வழியில் "இத்தனை நாழி இரண்டாவது தோசைக்கு மாவு ஊற்றியிருப்பாள். இத்தனை நாழி வெந்துபோயிருக்கும்." என்று பலவாறு எண்ணிக் கொண்டே கோயிலுக்குள் போய் ஸ்வாமி தரிசனம் செய்யும் பொழுது கையைக் கூப்பிக்கொண்டு மனத்தில் தோசையைக் கணக்குப் பண்ணிக்கொண்டிருந்தாள். ஆனால் மாட்டுப்பெண்ணோ 'இத்தனை நாழி கோயிலில் தீபாராதனை நடக்கும்; மாமி தரிசிப்பாள்' என்று ஸ்வாமியைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தாள். கடவுள் மாட்டுப்பெண்ணின் பக்திக்கு மெச்சி அவளுக்கு தரிசனம் தந்தார்.

நாம் ஏன் பக்தி செய்யவேண்டும்? கடவுள் நமக்கு ஏன் பகுத்தறிவு என்கிற, மற்ற பிராணிகளுக்கு இல்லாத, உயர்ந்த அறிவைக் கொடுத்தார்? பிறர் பொருளை தந்திரமாகத் திருட யோசனை செய்யவா! நன்றாக ஆலோசனைசெய்து தீவிரமாக பொய் சொல்லவா? பிறருடைய குற்றங்களை வர்ணிக்கவா? இல்லவே இல்லை. கடவுளைப் பலவாறு ஸ்தோத்திரம் செய்து அவர் பாதாரவிந்தத்தையடையவும் பிற ஜீவன்கள் கஷ்டப்படும் காலத்தில் தேறுதலோ உதவியோ செய்யத்தான் பகுத்தறிவு கொடுக்கப்பட்டுளது.

வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் உலகில் பிறந்துள்ள எல்லா பிறப்புகளுக்கும் பல பிறப்பு உண்டு என்று காணப்படுகின்றது. கடவுள் நம்மை தன்னுடைய சாயலைப்போல் படைத்திருக்கிறார். நாம் எவ்வளவோ கீழான ஜென்மங்களைக் கடந்து இவ்வுயர்ந்த மானிடப் பிறவியை அடைந்திருக்கிறோம். இதனை வீணாக்காமல் கடவுளை பக்தி செய்தால் என்ன?

உலகத்தில் பிறக்கும்பொழுதே நமக்கு கஷ்டமும் கூடப்பிறக்கிறது. உலகத்தில் கஷ்டம் என்றால் இரண்டுவகையாக சொல்லலாம். 1. பணக்கஷ்டம் 2. மனக்கஷ்டம். பணக்கஷ்டத்தைவிட மனக்கஷ்டம் ரொம்ப ரொம்பப் பெரியது. உலகத்தை பெரியோர்கள் சம்சார சாகரம் என்று சொல்கிறார்கள். நாம் இச்சாகரத்தை கடக்கவே கடவுளைத் தொழவேண்டும்.

ஒவ்வொரு ஜன்மத்திலும் மனிதன் ஆசையால் பல பாபகாரியங்களைச் செய்து வீணே நாசமடைகிறான். இவ்வுலகில் மனிதனை கீழே இழுப்பது ஆசை. ஒருவனிடம் ஒரு நல்ல பொருள் இருந்தால் அதில் ஆசை விழுந்து, பொறாமை ஏற்பட்டு அதை அபகரிக்க அவனை தொந்திரவு செய்கிறான். இது இவனுடைய பாபக்கிரியை. இப்படியே மனிதன் இவ்வுலகில் உழன்றால் அவனுடைய கதிதான் என்ன ?

நாம் கடவுளை அடைந்துவிட்டால் பிறப்பே கிடையாது என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே நாம் கடவுளைத் தொழும்பொழுது முழுமனதுடனும் நம்பிக்கையுடனும் தொழவேண்டும்.

இதில் எவ்வளவோ பிழைகளிருப்பினும், இதில் ஏதாவது நல்ல விஷயங்கள் இருந்தால் எடுத்துக்கொண்டு குற்றங்களை நீக்கி என்னை மன்னிக்கக்கேட்டுக்கொள்கிறேன். —ஸ்ரீமதி. G. தஞ்சிதம்

3

சகோதர, சகோதரிகளே. நான் ஏதாவது பத்திரிகைக்கு கட்டுரையோ அல்லது கதையோ எழுத ஆவல்பட்டுக்கொண்டிருந்தேன். ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி எழுதவேண்டுமானால் யோசித்து எழுதமுடியவில்லை. நாம் ஏதாவது வேலை செய்துகொண்டிருக்கும்போது நினைவு வரும் உடனே அதை எழுதிவிடவேண்டும். என்னைப் பொருத்தமட்டில் திடீரென்று எழுதத்தெரியவில்லை. மனதிலோ எல்லாம் அப்படியே தெரிகிறது. ஆனால் எழுதவோ, சொல்லவோ, இன்னும் தைரியம் வரவில்லை. இந்த கட்டுரையை எழுத மூன்று நாட்களாக மனம் தூண்டி இப்பதான் எழுதுறேன்.

பக்தியில் அநேகவிதமுண்டு. தெய்வபக்தி, ராஜபக்தி, பதிபக்தி எனப் பலவகை உண்டு. நான் சொல்லப்போகும் விஷயம் தெய்வ பக்தி என்பதைப்பற்றி. நம்மில் சிலர் கடவுளைத் தொழ நேரமில்லையே என்று மூக்காலழுவார்கள். அப்படி அழவேண்டியது அனவசியம். நாம் எந்தவேலை செய்தபோதிலும் மனதைமட்டும் ஸதா கடவுளிடத்தில்செலுத்தி பக்தி செய்யலாம். அவருடைய நாமத்தையோ, அல்லது பாட்டுமூலமாய் அவருடையபுகழையோபாடலாம். பூஜைசெய்கிறேனென்று ஊதுவத்தி, சாம்பிராணி, சூடம், பழம், வெற்றிலை, மாலை, அர்ச்சிக்க புஷ்பம் இதெல்லாம் வைத்துக்கொண்டு பூஜை செய்வது அனவசியம். ஆனால் இந்த தடபுடலுடன் ஆரம்பித்து, அசல் தெய்வபக்தி அடையலாம். ஏனென்றால் நாம் பூஜைசெய்யப் போகிறோமென்று மனம் குதூகலித்து கடவுளிடத்தில் லயிக்கும். நாம் காணுமெல்லா உயிர்களும் கடவுள் ரூபமே என்று நம்பவேண்டும். எல்லாரிடத்திலும், காருண்யமும் அன்பும் காட்டி கடவுளாக கொண்டாடவேண்டும். இந்த நிலைமை வர ரொம்பகஷ்டம். ஞானிகள் எல்லா உயிர்களிடத்திலும் கடவுளை தரிசிக்கிறார்கள். நாம் மனதை வேறோர் காரியத்திலோ, அல்லது கவலையிலோ, செலுத்தி நமது அங்கங்கள் மாத்திரம் பூஜைசெய்யும்படி செய்யக்கூடாது. கண்ணை வேறு பொருளையோ மனிதரையோ பார்க்கச் செய்யாமல் அந்த விக்ரக ரூபமுள்ள பகவானைப் பார்க்கச்செய்சது, முழு

மனதோடு வாக்கால் அவருடைய திருவடியைப் புகழ்ந்து, கையால் அவருக்கு சந்தனம், புஷ்பம் முதலியன சாற்றி, செவிகளை அவருடைய புகழையே கேட்கச்செவி சாய்த்து பூஜைசெய்யவேண்டும் இப்படி ½ மணி நேரமாவது கடவுளைத் தொழுதால் போதும்.

சில பெரியோர்கள் கையில் ஜெபமாலையும், பட்டை பட்டையாக விபூதியும் அணிந்து சிவ சிவ சிவ என்று ஜபித்துக்கொண்டிருப்பார்கள். திடீரென்று பிள்ளையை கூப்பிட்டு "எண்டா! சாதம் பிசைந்து வைத்தேனே அதை எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட்டாயோ. நான் ஜபம் பண்ணும்போது தொந்திரவு செய்வாயே என்று முன்னடியே பிசைந்துவைத்தேன்" என்பாள். அவள் மனம் நாம் சாதம்பிசைந்து வைத்தோமே சாப்பிட்டானோ இல்லையோ என்பதையே ஜபித்துக்கொண்டிருக்கும். கை மணி உருட்டுகிறது. வாய் மனம் லயிக்காமல் சிவ சிவ சிவ என்று சொல்லும். மடி ஆசாரம் ருத்திராட்சம் விபூதி இவைகளிலில்லை. ஆனல் அதஒரு நியமனம். உதாரணம் ஒரு கதை.

ஓர் ஊரில் சுப்புகுருக்கள் என்று ஒரு குருக்களிருந்தார். அவருக்கு ரமணீ என்று ஒரு பிள்ளை இருந்தது. அவர்கள் ஏழ்மை நிலைமையில் இருந்தார்கள். ராமர் கோவிலில் குருக்களாக இருந்தார். ஆகையால் எது உண்பாரோ அதை ராமனுக்கு நிவேதித்து சாப்பிடுவார். ரொம்ப பக்தி உள்ளவர். அவர் ஒருநாள் ஒரு க்ராமத்திற்கு போக நேர்ந்தது. ஆனதால் அவர் ரமணியை கூப்பிட்டு "ரமணீ! நான் இன்று வெளியூருக்குப் போறேன். ஆகையால் ராமனுக்கு நீ நிவேதித்து அம்மாவும் நீயும் மற்றுமுள்ள குழந்தைகளும் உண்ணுங்கள். நான்நாளைக்கு திரும்பிவிடுவேன்" என்று சொல்லிப்போய் விட்டார். அன்று ரமணியின் தாயார் 5 ரொட்டி தட்டி ரமணியின் கையில் கொடுத்து 'ராமனுக்கு நிவேதனம் செய்துகொண்டுவா' என்று அனுப்பினள். ரமணி ராமன் கோவிலுக்குப்போய் ராமனுக்கு முன்னடி 5 ரொட்டியையும் வைத்து, 'ஹே ராமா! ரொட்டி சாப்பிடு; ரொட்டி சாப்பிடு' என்று சொன்னன். ஆனல் அந்த ராமனுக்கு காதில் விழுந்தால்தானே? பேசாமலிருந்தார். ரமணி கொஞ்சம்நாழி சும்மா நின்று மறுபடி "ஹே ராமா! என்ன நாழியாச்சே இருட்டிப் போச்சு. உம். தின்னு நான் போகணும்" என்ருன். அப்பவும் ரொட்டியை ராமன் தின்கிற வழியாக இல்லை. "என்ன ராம் உனக்கு காது கேட்கல்லே? என்னை எங்கம்மா கோபிப்பாள். சீக்கிரம் தின்னு. நான் போகணும்" என்ருன் அப்பவும் அவன் மிரட்டல் பலிக்கவில்லை. "என்னடா! அப்பா வந்தால்தான் தின்பாயோ? அப்பா நாளைக்கு வருவார். இன்றைக்கு சாப்பிடறயா மாட்டியா? இல்லாட்டா இதோபார் உன் காலிலேயே முட்டிக்கொண்டு உயிரை விடுகிறேன்" என்று ரமணி முட்டிக்கொள்ளப்போகிருன். உடனே ராமன் ரமணியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு தனது மாலையை அவன் கழுத்தில் போட்டு 2 ரொட்டிகளைச் சாப்பிட்டார். வெகு நேரம் கொஞ்சிக் குலாவி வீட்டிற்கு அனுப்பினர். ரமணி வீடு திரும்பும்போது இரவு வெகு நேரமாயிற்று. ரமணி போனபோது

அவன் தாயார் அவனைக் கடிந்துகொண்டாள். "ஏதுடா மாலை? ராமனதை எடுத்துப் போட்டுக்கொண்டு வந்திருக்கே? மீதி 3 ரொட்டியா! பாக்கி எங்கே? நீ எங்கோ விளையாடிவிட்டு பையன்களுக்கும் கொடுத்து நீயும் தின்று பாக்கி 3 ரொட்டி கொண்டுவந்திருக்கே" என்று பலமாக அடித்தாள். ரமணி "இல்லேம்மா! ஸ்வாமி 2 ரொட்டி தின்றார். என்னை மடியில் வைத்துக்கொண்டு இந்தமாலையை எனக்கு போட்டார்" என்று பலசொல்லியும் அம்மா கேட்டு நம்பவில்லை. மறுநாள் சுப்புகுருக்கள் வந்ததும் அவர் மனைவி சகலவிஷயமும் சொன்னாள். சுப்புகுருக்களுக்கு கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று. "இன்றைக்கும் அவனிடமே நிவேதிக்கவேண்டிய சாமானைக்கொடு நானும் கூடப்போய் பார்க்கிறேன்" என்று சொன்னார். அன்றைக்கும் ரமணி ரொட்டியை எடுத்துப்போய் ராமனிடம் வைத்து சாப்பிடும்படி சொன்னான். ரமணியின் தகப்பனார் இதையெல்லாம் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார். வெகு நாழியாக ரமணி சொல்லச் சொல்ல ராமன் அசைவதாக இல்லை. ரமணி ரொம்ப வேண்டி இன்றைக்கும் முட்டிக்கொள்ளப்போகும் சமயம் கடவுள் "ஹே ரமணீ! நீ உண்மையான பக்தன்." என்று அவனை மார்புறத் தழுவி முத்தமிட்டார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த குருக்களுக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. கோவில் எதற்கு? அவ்விடத்தில்தான் கடவுளிருக்காரா? கடவுள் எவ்விடத்திலும் இருக்கார். ஆனால் இது வெறும் பேச்சு. கண்டதையெல்லாம் நாம் அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணுகிறோமோ? இல்லை. மூலைக்கு மூலை பிள்ளையார் கோவிலிருக்கு. நாம் போய்வரும்போது அவ்விடத்தில் போனதும், கால் செருப்பைக் கழற்றிவிட்டு அஞ்சலிசெய்து வணங்குகிறோம். கோவிலென்றால் நாம் எவ்வளவு அவசர வேலையாகப் போனாலும் அவ்விடத்திற்கு வந்ததும் 1 நிமிஷமாவது கடவுளைத் தொழுகிறோம். மணிசப்தம் கேட்கும் போதும், தீபம் காண்பிக்கும்போதும் கன்னத்தில்போட்டுக்கொண்டு 2 செகண்டாவது கடவுளை த்யானம் செய்கிறோம். எவ்வளவு மனக்கவலை, அவசர ஜோலி இருந்தபோதிலும் அந்த ஸமயத்திற்காவது கடவுளை த்யானம் செய்கிறோமல்லவா? ஆகையால்தான் கோவில் இருப்பது நல்லது. ஔவைகூட கோயிலில்லா ஊர் பாழ் என்று பாடியிருக்காள். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது நாம் ½ மணி நேரம் கடவுளிடத்தில் மனதைச் செலுத்துவோமானல் கடவுள் கைவிடமாட்டார். குற்றத்தை நீக்கி குணத்தைக் கொள்ளவும். —ஸ்ரீமதி ரின். ஞானம்பிகை

## 4

பங்கஜம்:—அத்தை! எனக்கு எதைப்பார்த்தாலும் பிடிக்கவேயில்லை. இந்த எழவெடுத்த வீட்டில் எனக்கு இருக்கவே பிடிக்கல்லை. கோயில் குளம்தான் போகமுடியவில்லை; வீட்டிலிருக்கும் பகவானைக்கூட பூஜிக்க முடியவில்லை யென்றால் எப்படி இக் கட்டை கடைத்தேறுவது?

கமலம்:—"அம்மா பங்கஜம்! இதற்கெல்லாமா இப்படி கோபிப்பது? சம்சாரமென்றால் லேசானதா! அது ஓர் பெரிய சாகரம், அதை நீந்தி கரையேறுவதற்கு அவசியம் ஓர் ஓடம்வேணும். அந்த ஓடம்தான் பகவா

னின் பாதகமலம், 'பகவானே ! உன் திருவடியில் சரணமடைகின்றேன், என்னை ரக்ஷி'யென்று நம் வாழ்க்கையை அவரிடத்தில் விட்டுவிட்டோமானல் அவர் நம்மை ரக்ஷிக்கிருர். அதைவிட்டுவிட்டு உன் பர்த்தாவையும் குழந்தைகளையும் இம்சித்துக்கொண்டு நீ பூஜை செய்வதில் பிரயோஜனமே இல்லை.அப் பூஜை பகவானுக்கும் ஏற்காது. தானத்தில் உயர்ந்தது நிதானம் தான். எல்லாவித தத்துவத்தையும்விட சரணுகதி தத்துவத்தைதான் நம் ஆசாரியர்கள் பொறுக்கி எடுத்துள்ளார். ஸ்ரீக்ருஷ்ணன் தேர்த்தட்டிலிருந்து அருச்சுனனைப் பார்த்து பதினெட்டு அத்தியாயமுள்ள கீதையை உபதேசித்தார். அதிலும் மயங்கி நின்ற அருச்சுனனுக்கு பதினெட்டாவது அத்தியாயத்தின் நடுவிலுள்ள ஒரு சுலோகமாகிய "ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாசுச," என்கிற சுலோகத்தை சரமஸ்லோகமாக அதாவது நம்மைப்போல்வார் நற்கதியடைவதற்கு கடைசி வழியாக உபதேசித்தார்.

அந்த சுலோகத்தின் சுருக்கமான அர்த்தம் என்னவென்ருல் "ஹே அருச்சுன ! உன் சகலவிதமான காரியங்களையும் என்னிடத்தில் ஒப்படைத்துவிட்டு என்னைச் சரணமடை. (அதாவது என் பாதத்தில் தண்டன் சமர்ப்பித்துவிடு) நான் உன்னை ஒருவித விபத்துக்களும் அணுகாமல் ஒருவித பாபமும் உன்னை வந்தடையாமல் காப்பாற்றுகிறேன். நீ சோகியாதே, உனக்கு மோக்ஷம் தருகிறேன்." என்பது.

இதை நம்போல் எளியவர்களுக்காகத்தான் அருச்சுன வியாஜத்தை வைத்து உபதேசித்தார் ஸ்ரீகிருஷ்ணன்.

ஆகையால் பக்தியுடன் நம்பிக்கையாய் நம் குடும்ப காரியத்தை ஸ்ரீ க்ருஷ்ணனிடம் ஒப்படைத்துவிட்டு பகவத் குடும்பம் இதுவென்று நினைத்து இதில் இருப்பவர்களெல்லாம் அவனடியார்களென்றெண்ணி "பகவான் இக்காரியத்தில் நம்மை ஏவியுள்ளார். ஸ்ரீக்ருஷ்ணனது வேலைக்காரர்களாகிய நாம் இதைச் செய்யவேண்டியது நமது கடமை" யென்கிற ஸ்திரமான நம்பிக்கையுடன் இருந்தோமானல் நம்மை பகவான் காப்பாற்றி நற்கதியளிப்பார். இவ்வித நினைவில்லாமல் நாம் எவ்வித கர்மத்தைச் செய்யிலும் அதற்குப் பலனே கிடையாது.

பக்தியும், சிரத்தையும், நம்பிக்கையும் இல்லாமல் கோவிலுக்குப் போவதிலும், நாலுபேர்களுடன் வம்பளப்பதிலும், என்ன பிரயோஜனம் ! நம்மால் முடிந்தால் கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு தீர்த்த ப்ரசாதம் வாங்கிவரலாம். முடியாவிட்டால் அதுவுமில்லை. இதற்காக நாம் யோகம் பண்ணவேண்டாம், சந்நியாசியாய் போகவேண்டாம். அதிகமான பந்த பாசத்தைவிட்டு பகவானை ஸ்மரித்தோமானல் போதும். இது தான் உண்மையான தத்துவம். பங்கஜம் ! இதையறியாமல் வீணுக்கெல்லாம் கோபித்துக்கொண்டேயோனல் அது நன்ருகவே இல்லை. இனிமேல் மூஞ்சியை தூக்கிக்கொள்வதையும் விட்டுவிடு.

பங்:—அத்தை ! நீ சொல்வதெல்லாம் மிகவும் சரியாய்த்தானிருக்கிறது. இதையறியாமல் என்மனது மிகவும் க்லேசத்தையடைந்தது. இனி உன் சொல்லை குருவாக்காய்க்கேட்கிறேன். நீயும் பத்துபசங்களுள்ள பெரிய குடும்பியாய் இருக்கிருயே. நீ எந்தவேளையும் சிரித்தமுகமாயும், நிதானமாயுமிருப்பதைப்பார்த்தால் எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது, நீ எப்படி ஸ்வாமிபூஜை செய்கிருய்? அதைச்சற்று எனக்கும் தெரிவி.நானும் அப்படியே செய்கிறேன்.


கம:—அப்படியே சொல்கிறேன் கேள். காலையில் குளித்துவிட்டு இருகையிலும் ஜலம்எடுத்து கோயில், திருமலை, பெருமாள்கோயில், ஆழ்

வாராசாரியாள், ஜீபாள் ஸ்ரீயபேதி ஸ்ரீபாததீர்த்தமென்று தலையில் ப்ரோக்ஷித்துக்கொண்டு, நெற்றிக்கிட்டுக்கொண்டு நம் ஆசாரியர் நமக்கு சமாச்ரயணம் செய்தபோது உபதேசித்த திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகம், இவைகளை குருபரம்பராபூர்வமாகச் சொல்லிவிட்டு நம் ஆசாரியன் தனியனையும் ஆழ்வாராதியர்கள் தனியனையும் சொல்லிவிட்டு பகவான் அபயஸ்தம், திருவடிஜோடு இவைகளை கண்களிலும், தலையிலும் ஒத்திக் கொண்டு, நம்வீட்டிலிருக்கும் பெருமாளை சேவித்துவிட்டு, கையில்கிடைத்ததை பெருமாளுக்கு சமர்ப்பித்துவிட்டு, கிடைக்காததை மானஸீகமாய் நினைத்துக்கொண்டு, தளிகையானதும் பெருமாளுக்கு தளிகை ஸமர்ப்பித்துவிட்டு வீட்டுவேலையை கவனிப்பது. ஏதோ வாயில்வந்த பகவத் விஷயத்தை பகவானுடைய முகோல்லாஸமாய்ச் சொல்லுவது. இவ்வளவு தான் எனக்குத் தெரிந்தவை. இன்னும் அனேகமாய் பகவத்கைங்கரியத்தைப் பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். என்னால் முடிந்தது இவ்வளவுதான்- பகவானை துதிப்பதற்கும் பூஜிப்பதற்கும் முடிவே இல்லை. ஏதோ நம்மால் முடிந்தவரையில் செய்வது. நாழிகையாச்சு, நான் போய்வருகிறேன்.

பங்:—சரி. இந்தா, அத்தை! மஞ்சள், குங்குமம் வெற்றிலைபாக்கு.

—ஸ்ரீமதி. ரங்கப்ரியை

---



டைரெக்டர்:—இப்போ நீ சொல்லவேண்டிய பாடம் நினைவிருக்கோல்லியோ? அவரைப் பார்த்து, கையை இப்படி வச்சுண்டு, "இந்த ஸினிமா ஆடர தேவடியாளை—தளுக்கு சுந்தரிகளை—நக்ஷத்திரங்களைக்—கண்டாலே எனக்கு கட்டோடு பிடிக்கிறதில்லை" என்று அழுத்தந் திருத்தமாய் சொல்லணும். எங்கே! சொல்லு பார்க்கலாம்.

நடிகை:—நானு? என் வாயினாலேயா!

—விருச்சிகம்.

ஸ்ரீமதி. V. லக்ஷ்மி திருவேதி

# ராதை அளித்த பரிசு

இருளை நீக்கி ஆதித்தன் உதித்தான். பறவையினங்கள் ஆனந்தத்துடன் சிறகடித்துக்கொண்டு பறந்துசென்றன. நானும் என் படுக்கையை விட்டெழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டேன். அன்று ஏனோ என் மனமானது நான் கொஞ்சம் தினங்களாக மறந்திருந்த, பழைய சம்பவமொன்றை அடிக்கடி நினைத்துக்கொண்டது. நான் சிந்தனைக் கடலில் மூழ்கியவாறு சாய்வு நாற்காலிமீது சாய்ந்தேன். கையில் காப்பியுடன் என்னெதிரே தோன்றிய ஸரளா, என்னை நோக்கிப் புன்னகை புரிந்து, "என்ன, மாமா! எப்படியோ இருக்கிறீர்களே?" என்று வினவினள்.

அதற்குள் அங்கு வந்த என் மைந்தன் ரகு "அப்பா, உங்கள் மருமகள் ஸரளாவின் குறும்புத்தனத்தைப் பார்த்தீர்களா? நேற்று விளையாட்டாக நான் ஒரு ஸ்த்ரீயின் அழகை வர்ணித்து, ஒரு கவிதை எழுதினேன். அதை இவள் படித்துப்பார்த்து நான் சரியாக எழுதவில்லையென்று, பரிகாஸம் செய்கிறாள். ஏனென்றால், இவள் கல்வியில் கலைவாணியின் சொருபமல்லவா? அதனால்தான் இவ்வளவு கர்வம்" என்று ஏளனத்துடன் ஸரளாவை நோக்கியவாறு கூறினன்.

ஸரளா, குறும்புடன் அவனை நோக்கிவிட்டு, என் பக்கம் திரும்பி, "பாருங்கள் மாமா! நீங்களே சொல்லுங்கள், இவர் கவிதையில் தாமரை மலரைப் போன்ற கரங்கள் என்று எழுதியிருக்கிறார். நான் சொன்னேன், தாமரைமலரைப்போன்ற மிருதுவான சிவந்த கன்னங்களுடையவள் என்றெழுதவேண்டும். கரங்களுடையவள் என்றெழுதுவது தப்பு என்றேன். இதிலென்ன மாமா, தவறிருக்கிறது? எது நியாயமென்று நீங்களே சொல்லுங்கள், அப்பொழுதுதான் அவருக்குத் தெரியும்" என்றாள்.

நான் இருவரையும் பொதுவாக நோக்கிவிட்டு, "அடே ரகு! ஸரளாவின் கட்சிதான் நியாயமானது. நான் அவள் கட்சிக்குத்தான் ஓட் கொடுக்கப்போகிறேன்." என்றேன்.

ஸரளா, பெருமையுடன் ரகுவை நோக்கினள்.

ரகு, சற்று ஆத்திரமடைந்து, 'என்ன அப்பா இப்படி சொல்கிறீர்கள்? என்னவிருந்தாலும், உங்களுக்கு மருமகள் சற்று ஒசத்திதான். அதனால்தான் அவள் கட்சியை ஆதரிக்கிறீர்கள்" என்றான்.

நான் கலகலவென்று நகைத்து, "என்னடா ரகு! ஸரளாவுடன் குழந்தை முதல் பழகியும், கொஞ்சகாலமாக மனைவியாக அடைந்திருந்தும்கூட உனக்குத் தெரியவில்லையே? அதற்கு நானென்ன செய்வது? ஒன்று சொன்னலாவது கேட்கவேண்டும்; இல்லாவிடில் தானகவாவது தெரியவேண்டும், அல்லது ஸரளாவின் தாமரைபோன்ற சிவந்த கன்னங்களைப் பார்த்தாவது அவள் கட்சி நியாயமானது என்று ஒத்துக்கொள்ள வேண்டும். அப்படியிருக்க உங்களிருவருக்கும் நடுவில் பொதுவாக், ஓட் கொடுக்குமென்னை நொந்துகொள்வதில் பயனென்ன?" என்று கூறி மேலும் நகைத்தேன்.

சட்டென்று ஸரளாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது. "போங்கள் மாமா, உங்களுக்கு வேலையில்லை. எப்போது பார்த்தாலும், என்னை பரிகாஸம் செய்யத்தான் உங்களுக்குத்தெரியும்" என்றாள்.

ரகு சந்தோஷத்துடன், "பேஷ் பேஷ். அப்பா, நீங்கள் சொன்னதுதான் சரியானது. நானும் என் தவறை ஒப்புக்கொள்கிறேன். கடைசியில்

ஸரளா ஜயித்துவிட்டாள். நான் தோற்றுவிட்டேன். அவ்வளவுதானே!'' என்று ஸரளாவின் முகத்தைநோக்கிப் புன்னகை புரிந்தான். உடனே அவள் நாணத்துடன் சரேலென்று உள்ளே சென்றுவிட்டாள்.

இந்த இளம் தம்பதிகளுக்குள் அடிக்கடி நேரும், விளையாட்டான தகராறுகளுக்குள் எனக்கும் பங்குண்டு. நான்தான் அதற்குச் சரியான தீர்ப்பு கூறுபவன். அதனல் ஸரளா, தமாஷாக என்னை நியாயாதிபதியவர்களே என்று கூப்பிடுவாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் ராதையின் நினைவு அடிக்கடி எனக்குண்டாகும். இன்று காலையிலிருந்து அவளுடைய நினைவே என் மனதில் தோன்றிக்கொண்டிருந்தது.

## 2

பழையசம்பவங்கள் கற்பனை ரூபமாக என் மனக்கண்முன்தோன்றின. என் வாழ்க்கைச் சித்திரம் சலனப்படம்போல் விருவிருப்பாக என்முன் ஓடியது, எனக்கு 23 வயதிருக்கும். என் தந்தை காலமாகிவிட்டதால், குடும்பத்தை நடத்தவேண்டிய பொறுப்பு என்தலைமீது விழுந்தது. நான் ஒரு கம்பெனியில் சொற்ப சம்பளத்தில் உத்தியோகத்திலிருந்தேன். அந்த வரும்படி எனக்குப் போதாததாலும், எனக்கு சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி இருந்தமையாலும், சில வீடுகளில் சங்கீத ட்யுஷன் ஏற்படுத்திக்கொண்டேன். எனக்கு விவாகமாகி மனைவியும் வீட்டிற்கு வந்துவிட்டாள். இப்படிச் சிலதினங்கள் கழிந்தன. நான் வாழ்க்கையில் விருப்பும் வெறுப்புமின்றி ஏதோ நாட்களை யோட்டிக்கொண்டிருந்தேன். காரணம் என்மனம் விரும்பாத பெண்ணை மணந்துகொண்டதுதான். ஒருநாள், சிலதினங்களாகக் காலியாகக் கிடந்த எதிர்வீட்டில் திடீரென்று மேளச் சத்தம் கேட்டது. நான் வியப்படைந்து எதிர்வீட்டு வாசலை நோக்கினேன். அங்கே மெழுகிக் கோலமிட்டு, வாழைமரமும் கட்டி இருந்தது. சிலர் அந்த வீட்டிற்குள் போய்க்கொண்டும், வந்துகொண்டுமிருந்தனர். நான் ஒன்றும் புரியாமல் என்னன்னையிடம் அதைப்பற்றி விசாரித்தேன். உடனேயவள், "என்னடா நாகராஜா நீ! எந்த உலகத்திலிருக்கிறாய்! இரண்டு தினங்களாக எதிர் வீட்டில் சுண்ணம்படித்து, ரிப்பேர் செய்தார்களே, அதை நீ கவனிக்கவில்லையா? அந்த வீட்டை யாரோ வாங்கி இருக்கிறார்களாம். இன்று கிரகப் பிரவேசம் நடக்கிறது'' என்றாள். எங்களுக்கும் எதிர்வீட்டாருக்கும் நாளடைவில் மிகுந்த சிநேகம் ஏற்பட்டது. அவர்களுக்கு ராதை என்னும் 14 வயது பெண்ணைத் தவிர வேறு குழந்தை கிடையாது. ராதைக்குச் சங்கீதம் கற்பிக்க அவள் தந்தை என்னை நியமித்தார். நானும் அவளுக்கு மிகுந்த சிரத்தையுடன் சங்கீதம் கற்பிக்கத்தொடங்கினேன்.

நாளடைவில் ராதையைக்காண்பதும் அவளோடு பேசுவதும் என் மனதிற்கு இன்பமாகத்தோன்றியது. கபடமற்ற வெள்ளைமனதுடையவள் ராதை. யாவரிடமும் கூச்சமின்றி தாராளமாகப்பேசுவாள். எப்பொழுதும் கலகலவென்றுப்பேசி கல்மிஷமின்றிப் பழகுபவள். நான் காலையில் பாடங்கற்பிக்க அவளில்லத்திற்குச் செல்வேன். என்னைக்கண்டவுடன், குழந்தையைப்போல் துள்ளியோடி ஒரு பாயைக்கொண்டுவந்து விரிப்பாள். உடனே, "ஸார்! உட்காருங்கள், காப்பி கிப்பியெல்லாம் குடித்தாகிவிட்டதா, இல்லையா?'' என்று விசாரிப்பாள். நான் குறும்புடன், "காப்பிமாத்திரந்தான் குடித்தேன், கிப்பியொன்றுங்குடிக்கவில்லை. அதென்னம்மா அது? கிப்பி என்பது புதுப்பெயராக இருக்கிறதே?'' என்பேன்.

உடனே அவள் கலகலவென்று நகைத்து, "கிப்பியென்றால் டிபன் என்று அர்த்தம். காப்பியோடுகூட ஏதாவது டிபன்தானே சாப்பிடுவார்கள்?

அதைத்தான் காப்பியோடுகூட இப்பியென்று சேர்த்து உச்சரிப்பது. நாங்கள் அப்படித்தான் சொல்கிறோம். அதனால்தான் உங்களையும் கேட்டேன்''

''சரி, சரி, இனிமேல் நீ எனக்குக் குருவாகிவிட்டாய். ஸ்ரீமதி, ராதாதேவி குரு அவர்களே! சிஷ்யனாகிய அடியேனுக்கு இப்படிச்சேர்த்து உச்சரிக்கும் பதங்களை கற்றுக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.''

''போங்கள், ஸார்! உங்களுக்கு வேலையில்லை. என்னைக்கண்டால் உங்களுக்குப் பரிகாஸமாக தோன்றுகிறதாக்கும்.''

''என்னை போகத்தானே சொல்கிறாய்? இதோபோய்விட்டேன். ஆனால் உனக்குப்பாட்டு கற்றுக்கொடுத்தபிறகு போகட்டுமா அல்லது இப்போதே போய்விடட்டுமா ?''

''என்ன ஸார், பரிகாஸம் செய்கிறீர்கள்?'' என்று கூறிக்கொண்டே தன்னுடைய பாட்டுப்புத்தகத்தைக்கொண்டு வருவாள். மேற்கண்டவிதம் தினம் ஹாஸ்யமாக எங்களுக்குள் பலவித ஸம்பாஷணைகள் நடக்கும். நாட்கள் செல்லச் செல்ல, எனக்கு ராதையின்மீது தோன்றிய பிரேமை வளர்பிறைபோல் வளரத்தொடங்கியது. அவளைக்காணாதநேரமெல்லாம், இந்த உலகமே பாழடைந்ததுபோலெனக்குத் தோன்றும், எந்தகாரணத்தைக்கொண்டாவது, தினத்திற்கு இரண்டு மூன்றுதடவை அவள் வீட்டிற்குச்செல்வேன். என்னையுமறியாமல் என்மனமானது அவளைக்காதலித்தது. ஒரு மனைவி இருக்கும்போது மற்றொருத்தியை விரும்புவது தவறு, என்று என் புத்தி என்னைக்கண்டித்தது. ஆனால் எவ்வளவு அடக்கியும் என்மனமானது அடங்காமல், அவளையே நினைத்தது. நான் அவளை விரும்புவது போல், அவளும் என்னை விரும்புவாளா? என்னும் கேள்வி அடிக்கடி என் மனத்துள் உண்டாகும். ஏன்? என்னைக்கண்டவுடன் சூரியனைக்கண்ட தாமரைபோல் அவள் முகம்தான் மலர்ந்துவிடுகிறதே! அன்றியும் என்னுடன்பேசும்போது எவ்வளவு ஆனந்தமாகப்பேசுகிறாள். இதையெல்லாம் நோக்கும்போது அவளும் என்னைக்காதலிக்கிறாளென்று நிச்சயமாகத் தோன்றுகிறது. ஆகையால் எப்படியாவது நாம் இவளை இரண்டாந்தாரமாக மணந்துகொள்ளவேண்டும், என்று என் மனத்துள், மூட தீர்மானமொன்றைச் செய்துகொள்வேன். ராதையிடமே நம் அபிப்பிராயத்தைத் தெரிவித்து, அவள் கருத்தையுமறிந்துகொள்ளலாமாவென்றெண்ணுவேன். ஆனால் அவளிடம்பேசும்போது இதைப்பற்றிக்கேட்க நாவெழாது. இந்த விதமாக எப்பொழுதும் என்மனமானது நிம்மதியையிழந்து தவித்தவாறிருக்கும், இந்நிலைமையில் என்மனைவி கர்ப்பமுற்றிருந்ததால், அவளை பிரஸவத்திற்காக, அவள்பிறந்தவீட்டில் கொண்டுவிட்டுவந்தேன். அங்கு போய் வருவதற்குள் இரண்டு தினங்கள் கழிந்துவிட்டதால் மூன்றாம்நாள் காலை ராதையின்வீட்டிற்குச் சென்றேன். இரண்டு தினங்களாக அவளைப் பார்க்காததால் தவித்துக்கொண்டிருந்த என்னுள்ளம், ஆவலுடன் அவளைக் காணத்தவித்தது. ஆனால் தினம் என்னை ராதை வரவேற்க வருவதுபோல் அன்று வரவில்லை. அவளுக்குப்பதில் அவளன்னை என்னை வரவேற்றாள். நான் ஆச்சரியமடைந்தவாறு, ''எங்கே ராதையைக்காணோம்? இரண்டு தினங்கள் நான் ஊருக்குப்போய்விட்டதால், என்னைப்பார்க்க வெட்கம் வந்துவிட்டதுபோலும்.'' என்று விளையாட்டாகக்கூறினேன்.

அவளன்னையும் நகைத்து, ''ஆமாம் நாகராஜா! அவளுக்கிப்பொழுது உன்னைப்பார்க்க வெட்கமாகத்தானிருக்கும். ஏனெனில் அவள் கணவன் ஊரிலிருந்து வந்திருப்பதைப்பற்றி நீ பரிகாஸம்செய்வாயல்லவா? அதனால் தான் வெட்கமடைந்து, உள்ளேயிருந்து உன்னெதிரில் வர மறுக்கிறாள்.

உடனே நான் ஏமாற்றமும், மனதிற்குள் விசனமுமடைந்து வெளியில் காட்டிக்கொள்ளாமல், "என்ன? அவள் கணவனா? அது யாரது? எப்பொழுது விவாகம்? ஒரு விஷயமும் இதுவரை சொல்லவேயில்லையே?"

உனக்கு ஒரு விஷயமும் தெரியாதா, என்ன? உன்தாயார் உன்னிடம் சொல்லியிருப்பாளென்றல்லவா நினைத்தேன்? அதுபோகட்டும் நானே உன்னிடம்சொல்கிறேன். என் அண்ணன் மகனை குழந்தைமுதல், அவனுக்குத் தாயில்லாததால், நான் வளர்த்துக்கொண்டிருந்தேன். அவன் இத்தனை தினங்களாக வெளியூரில் படித்துக்கொண்டிருந்தான். ராதை எங்களுக்கு ஒரேபெண்ணுதலாலும், அவனுக்கும் வேறு திக்கில்லாததாலும் ராதையை அவனுக்கேகொடுத்து, வீட்டோடு வைத்துக்கொள்ளலாமென்று தீர்மானித்திருந்தோம்.அவனுக்கும் படிப்புமுடிந்து நேற்றுதான் ஊரிலிருந்து வந்தான். இன்னும் ஒருமாதத்திற்குள் நல்லமுகூர்த்தமாகப்பார்த்து விவாகத்தை நடத்திவிடத்தீர்மானித்திருக்கிறோம். அவளுக்கு பாட்டும் நன்றாக வந்துவிட்டதால், இன்று உனக்குக் குருதக்ஷிணைகொடுத்து நிறுத்திவிடத் தீர்மானித்திருக்கிறோம். ராதையின் அப்பாவும், மாப்பிள்ளையும் வெளியே போயிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சநேரத்தில் வந்துவிடுவார்கள்.எனக்கு உள்ளே கொஞ்சம் வேலையிருக்கிறது. நான்போய் ராதையையனுப்புகிறேன். அவள் தந்தை வரும்வரையில் அவளோடு பேசிக்கொண்டிரு" என்று கூறி ராதையின் அன்னை உள்ளே சென்றாள்.

அப்பொழுது என் மனமிருந்த நிலையில் என் கோபமெல்லாம் ராதையின்மீது சென்றது. "ஆகா! அந்தத் துரோகி என்னெதிரே வரட்டும். சரியானபடி புத்தி கற்பித்துவிடுகிறேன்." என்று எனக்கு ஒருவிதத்திலும் சொந்தமில்லாத ராதையின்மேல் என் மனம் ஆத்திரமடைந்து உறுமிற்று. மறுநிமிஷம் வெட்கத்தால் சிவந்த முகத்துடன் தலையைக் குனிந்துகொண்டு அந்த அழகுப் பிம்பம் என்னெதிரே தோன்றினாள். நான் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோல், அவளிடம் நேசம் வைத்து கடைசியில் ஏமாற்றமடைந்த ஆத்திரத்தில், மதியிழந்திருந்ததால், அவளைக் கண்டவுடன் கொதிப்புடன், "ராதை! நீ என்னை இவ்விதம் மோசம் செய்துவிடுவாயென்று, நான் கனவில்கூட நினைக்கவில்லை. கடைசியில் என்னை இப்படிப்பட்ட படுகுழியில் தள்ளி வேடிக்கைப் பார்க்கவா நினைத்தாய்? நீ இவ்விதமான விஷமுள்ள மனதையுடையவள் என்று நான் முன்பே அறிந்திருந்தால், உன்னோடு ஸகவாஸமே செய்திருக்கமாட்டேன்" என்று படபடப்பாகக் கூறினேன். நல்லவேளையாக அப்பொழுது அங்கு யாருமில்லை- ராதையின் விழிகள் ஆச்சர்யத்தால் விரிந்தன,

"என்ன ஸார்? நீங்கள் சொல்வது அதிசயமாக விருக்கிறதே. நானாவது உங்களை மோசம்செய்வதாவது? நீங்கள் சொல்லும் விஷயமொன்றும் சரியாக அர்த்தமாகவில்லை. சற்று விளங்கச் சொல்லுங்கள். வீணாக ஒரு காரணமின்றி என்மேல் கோபமடைவதில் என்ன பிரயோஜனம்!"

"அர்த்தமா? பாவம்! நீ ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தையல்லவா? அதனால் நானுனக்கு அர்த்தம் விளக்கவேண்டும். நீ இப்படி என்னை நம்பிக்கை மோசம் செய்வாயென்று நான் எப்பொழுதுமே நினைத்திருக்கவில்லை" என்று சற்று கடுமையாக மொழிந்தேன்.

உடனே ராதை பொறுமை இழந்தாள். கோபத்தால் அவள் புருவங்கள் நெறிந்தன."ஸார். நிறுத்துங்கள்! உங்களுடைய மரியாதையற்றவார்த்தைகளை, நீங்கள் என் குருவாயிற்றே என்பதாலும். இத்தனை தினங்களாக நானுங்களை சகோதரனைப்போல் நேசித்ததாலும், பொறுத்து என் தந்தையிடம் கூறாது விடுகிறேன்" என்றாள்.

ஆத்திரத்தில் நினைவிழந்திருந்த நான் இந்த வார்த்தைகளைக் கேட்ட வுடன், இன்னும் சற்று உக்கிரமடைந்தவனாய், 'ராதை! அப்படியானால் இத்தனை தினங்களாக நீ என்னைக் காதலிக்கவில்லையா? பின் ஏன் இந்தச் சங்கதியை முன்பே நீ என்னிடம் சொல்லியிருக்கக்கூடாது? இவ்வளவு தினமும் உன்மேல் நான் கொண்டிருந்த பிரேமையை வளர்க்க விட்டு விட்டு, கடைசியில் இந்த நிலையிலா என்னை வேடிக்கை பார்க்கிறாய்!''

ராதை கலகலவென்று நகைத்தாள். அவள் கொண்டிருந்த கோபம் மறைந்து முகத்தில் ஏளனக்குறி தோன்றியது. "ஓஹோ! உங்களுக்கொரு மனைவியிருக்கும்போதே என்மீது நீங்கள் காதல்கொண்டிருந்தீர்களா? அடாடாடா! அந்த சங்கதி எனக்குத் தெரியாமல் போய்விட்டதே. முன்பே தெரிந்திருந்தால் என்மீது நீங்கள் கொண்டுள்ள பிரேமையை வளர்க்க விடாமல் தடுத்திருப்பேன். நீங்கள் என்னைக் காதலிப்பதால் கல்மிஷமின்றி உங்களுடன் பழகும் நானும் உங்களைக் காதலிக்கிறேனென்று, நீங்கள் நினைத்துவிடுவதா? ரொம்ப அழகாகத்தானிருக்கிறது. இந்த விஷயம்,'' என்று கூறி மேலும் நகைத்தாள்.

அவள் அப்படி நகைத்தது, எனக்கு மிகுந்த அவமானத்தையும், கோபத்தையும் கிளறிவிட்டதுபோலாகியது. என் மனமிருந்த நிலைமையில் அவள் அன்னியஸ்திரி என்பதையும் மறந்துவிட்டேன். கரத்தை ஓங்கிப் பளாரென்று அவள் கன்னத்திலொரு அறைவிட்டேன்.

அத்தனை தினங்கள் குழந்தையைப்போலிருந்த ராதை அன்று பெண் சிங்கமாக மாறிவிட்டாள். தன் கரத்தையோங்கி என் கன்னத்திலொரு அறை விட்டு "போம் வெளியே, இதுதான் நான் உங்களுக்களிக்கும் பரிசு, குருதக்ஷிணை, இதை என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்ளும்'' என்றுகூறி சரேலென்று உள்ளே சென்றுவிட்டாள். நான் அவமானத்தால் குன்றின உள்ளத்துடன், அங்கிருந்து வெளியேறி வீட்டிற்கு வந்து, எங்கள் கம்பெனியின் நிமித்தம் அவசரமாக வெளியூருக்குப்போவதாக, என் அன்னையிடம் கூறி உடனே புறப்பட்டு எங்கு போவதென்னும் முடிவில்லாதவனாய் ஸ்டேஷனையடைந்து ரயிலேறிப் பிரயாணமானேன்.

## 3

நல்ல வேளையாக, ரயிலில் பழைய நண்பரொருவரை சந்தித்தேன். அவரிடம் என் உண்மையான வரலாறுகளை மறைத்து, எனக்கு வேலை போய்விட்டதால் வேறு வேலை தேடுவதற்காக வெளியூருக்குச் செல்கிறேனென்று கூறினேன். அவர் தன் மாமா நடத்தும் மில் ஒன்றில் ஒரு வேலை காலியிருப்பதாகவும், அதிலென்னை அமர்த்துவதாகவும் கூறி, தம்மோடு தம் ஊருக்கழைத்துச்சென்று அந்த வேலையிலமர்த்திவிட்டார். நான் உடனே முன்னிருந்த வேலைக்கு ராஜினாமா கடிதமனுப்பிவிட்டு என் தாயாரையும் நானிருந்த ஊருக்கு வரவழைத்துக்கொண்டேன். பிறகு சில தினங்களில் எனக்கு புத்திரன் பிறந்தானென்னும் நற்செய்தியை என் மாமனாரிடமிருந்து வந்த கடிதத்தின் மூலமறிந்தேன். அப்பொழுது என்னையுமறியாமல் புத்துணர்ச்சியொன்று என் மனத்திலுதித்தது. அன்று நான் ராதையிடம் மிருகத்தனமாகவும், கற்றும் கல்லாத மூடனைப்போலவும், அநாகரீகமாக நடந்துகொண்டதை யெண்ணி வருந்தினேன். என் மனைவியிடம் இதுவரை எனக்குத் தோன்றாத பிரேமையொன்று அப்பொழுதுதித்தது. மணந்தும் அவளிடம் ஒரு நாளாவது அன்பான மொழி புகலாததையும் ராதை எனக்களித்த பரிசால் என்புத்தி திருந்தி, புத்திரனுதித்த நற்செய்தியால், என் மனைவிமீது எனக்கபிமான முண்டானதைப் பற்றிசந்தோஷமடைந்தேன். உடனே புறப்பட்டுராதையிருக்கும் ஊருக்குச்

சென்று அவளிடம் நான் தவருக நடந்துகொண்டதற்காக மன்னிப்புக் கேட்கலாமாவென்று யோசித்தேன். ஆனல் மறுபடியும் அவள்முன் என் முகத்தைக் காட்டுவதற்கு வெட்கமடைந்து பேசாமலிருந்துவிட்டேன்.

சில மாதங்களில் குழந்தையுடன் என் வீட்டிற்கு என்மனைவி வந்து சேர்ந்தாள். நானும் என் துயரங்களை மறந்து குழந்தை ரகுவின் விளையாட்டைக்கண்டு மகிழ்ந்தவாறு, என் மனைவியுடன் தேனும், பாலும் போல் வாழ்க்கையை நடத்தினேன். காலச்சக்கரம் சுழன்றது. குழந்தை ரகுவுக்கு ஆறுவயதாயிற்று, நான் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தியது காலதேவனுக்குச் சகிக்கவில்லைபோலும்.என்னையும் ரகுவையும்கதறவிட்டு விட்டு,என்னன்னையும் மனைவியும் ஒருவர்பின் ஒருவராய் காலமாயினர். நானும் வாழ்க்கையில் வெறுப்படைந்தவனுய் என் புத்திரன் ரகுவை, கண்ணுங்கருத்துமாய் வளர்ப்பதி லீடுபட்டேன். மேலும் 2 வருடங்கள் உருண்டோடின.

ஒருநாள், என் புத்திரன் ரகுவுடன் உலாவிவர வெளியே புறப்பட்டேன். அப்பொழுது இளைத்துத் துரும்புபோலிருந்த மனிதரொருவர் என்னெதிரே வந்துகொண்டிருந்தார். அவரை எங்கேயோ பார்த்த நினைவு எனக்குண்டாகியது. அவர் யாராக இருப்பாரென்று நான் யோஜிப்பதற்குள், என்னைப்பார்த்த அந்த மனிதர் முகமலர்ச்சியுடன், "அப்பா, நாகராஜா! சௌக்கியமா ? ஏனப்பா, என் குழந்தைக்கு விவாகம் நிச்சயம் செய்திருந்தகாலத்தில் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு வந்துவிட்டாயே! சில தினங்களுக்கு முன்புதான் நீ, இந்த ஊரிலிருக்கிருயென்றும், உன் விலாசமும் உன் நண்பனெருவனுடைய மூலமாகத் தெரிந்தது. என் பணமெல்லாம் போய்விட்டதால் இப்பொழுது என்னைக் கவனிப்பவர் ஒருவருமில்லை. என் குழந்தை ராதை மிகுந்த நோயுடனிருப்பதால், இந்த ஊரிலிருக்கும் நல்ல வயித்தியரிடம் காண்பித்து, உன் வீட்டில் ஒருமாதமிருந்துப் போகலாமென்று அவளையுமழைத்து வந்திருக்கிறேன். முதலில் நான் உன் வீட்டைக் கண்டுபிடித்த பிறகு அவளை யழைத்துவரலாமென்று இங்குள்ள ஒரு நண்பரின் வீட்டில் அவளை இறக்கிவிட்டு வந்திருக்கிறேன். அவர் வீட்டிலேயே தங்கலாமென்ருலும், என்மனதிற்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. என் சொத்தெல்லாம் போய்விட்டதால், கடைசியில் மிச்சமிருந்த வீட்டையும் விற்று, ரொக்கத்தை கையில் கொண்டுவந்திருக்கிறேன். நீ இந்த ஊரிலிருப்பவனுகையால், நான் ஏதாவது நல்ல வியாபாரம் செய்வதற்கு வழிகாட்டுவாயென்றும், ராதையையும் நல்ல வயித்தியரிடம் காண்பித்து உடம்பை சொஸ்தமாக்கலாமென்றும் வந்தேன். நல்ல வேளையாக நான் வீட்டைத்தேடிக் கண்டுபிடிப்பதற்கு முன்பே, உன்னைப் பார்த்துவிட்டேன்" என்று கூறினர்.

நான் வியப்பும் சந்தோஷமும் அடைந்தவாறு, "ரொம்ப சந்தோஷம். ராதையைமட்டும்தான அழைத்துவந்திருக்கிறீர்கள்? அவள் கணவனையும் மாமியையும் அழைத்து வரவில்லையா? மாமி, நீங்கள், ராதையெல்லோரும் சௌக்கியந்தானே? உங்களுடைய சொத்தெல்லாம் எப்படிபோய்விட்டது! ராதையினுடம்பிற்கு அசௌக்கிய முண்டாகும்படி என்ன நேரிட்டது ? பாவம். இந்தக் கவலைகளினல்தான், அடையாளமே தெரியாதபடி உங்களுடம்பு இளைத்துவிட்டிருக்கிறது. என்ன அதிசயம்? சில வருடங்களுக்குள் எவ்வளவு மாறுதல்கள் நேர்ந்துவிட்டன! முதலில் என்னேடு, என் வீட்டிற்கு வாருங்கள். அப்புறம் மற்ற சங்கதிகளைப் பேசிக்கொள்ளலாம்." என்று கூறி அவரை என்வீட்டிற் கழைத்துச் சென்று மற்ற சங்கதிகளை விசாரித்தேன். அதற்கவர், ராதைக்கு விவாகமானவுடன் கணவனேடு

சந்தோஷத்துடனிருந்ததாகவும், தாம், தம்முடைய சொத்துக்களை ராதையின் விருப்பப்படி அவள் கணவன் பெயருக்கே எழுதி வைத்ததாகவும், இந்தவிதமாகச் சில வருடங்கள் செல்லவே, ராதையின் கணவன் துஷ்ட ஸகவாஸத்தால் கெட்டு, வேசிக்கும் சூதுக்கும் பணத்தை வீண் விரயம் செய்ய ஆரம்பித்ததாகவும், தாமும், தம் மனைவியும் எவ்வளவு புத்திமதி கூறியும் கேளாமல், ராதையின் மனது பதைக்கும்படி அக்கிரமங்கள் செய்ததாகவும், இந்நிலையில் ராதை கர்ப்பமுற்றிருந்ததாகவும், அவள் கணவன் அதைக்கூட கவனியாமல் தாசிவீடே கதியாகக் கிடந்ததாகவும் இப்படிப்பட்ட சமயத்தில் ராதை ஒரு பெண் குழந்தையை பிரஸவித்து பிழைத்ததே புனர்ஜன்மமாகியதென்றும், ஆனால் அவளைக் கொடிய இருதயநோய் பிடித்துக்கொண்டதாகவும், தாம் எவ்வளவோ செலவழித்து வயித்தியம் செய்தும் அவளுடைய நோய் அதிகமாகியதேயொழிய குறையவில்லையென்றும், இந்நிலையில் குழந்தையை, தங்கள் வீட்டிலேயேயிருந்து, வெகு நாளாக வேலைசெய்துவரும் கிழவி கவனித்து, பாதுகாத்து வந்தாளென்றும் இந்த சங்கடங்களில் மனமுடைந்திருந்த, தம் மனைவி திடீரென்று காலமாகிவிட்டதாகவும், சொத்தில் முக்கால்வாசிக்குமேல் கரைத்தானவுடன், தம் மருமகன் கொடிய நோயொன்றை விலைக்கு வாங்கிக்கொண்டு வீட்டிற்குவந்து சேர்ந்ததாகவும், அவனுக்கு அநேக வயித்தியர்களிடம் காட்டி சிகிச்சை செய்தும் தேறாமல் உயிர் நீத்ததாகவும், அந்த ஏக்கத்தில் ராதையின் நோய் அதிகமாகி, படுத்த படுக்கையாகக் கிடந்தாளாகையால், அநேகர் சொன்னதின்பேரில் இந்த ஊரில் சிகிச்சை செய்யலாமென்று அவளையும், குழந்தையையும், வேலைக்காரிக் கிழவியையும் அழைத்துக்கொண்டு, இரண்டாம் வகுப்பில் ஜாக்கிரதையுடன் ராதையைப் பாதுகாத்து அழைத்துக்கொண்டு வந்திருப்பதாகவும் கூறினார்.

நான் இந்த விஷயங்களைக்கேட்டு மிகுந்த வருத்தமடைந்து அவரையும் தேற்றினேன். பிறகு நாங்கள் ஸ்பெஷல் கார் வைத்துக்கொண்டு சென்று ராதையை யழைத்துவந்தோம். ராதையைப் பார்க்கும்போது, துக்கத்தால் என்னிதயம் பிளந்தது. குறுகுறுவென்று களைநிறைந்தமுகமும் அன்புதோய்ந்த விழிகளும், தளதளப்பான மேனியுமுடைய ராதையெங்கே! இப்படிக் குழியில் விழுந்த கண்களும் சோபையிழந்த முகமும், ஒட்டி உலர்ந்துவாடி சருகுபோலிருக்கும் மேனியுமுடைய இந்த ராதையெங்கே! ஆ! ஒரே உருவத்திற்கு இவ்வளவு வித்தியாசமா? சில வருடங்களுக்குள் எவ்வளவு மாறுதல்? நான் முன்பு தவறாக நடந்ததற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டதற்கு அவள், தான் என்னை அன்று திருப்பியடித்ததற்காக வருந்திக்கொண்டிருப்பதாகவும், அதனால் நான்தான் அவளைமன்னிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள், அன்றிலிருந்து அநேக வயித்தியர்களை வரவழைத்து ராதைக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தோம், ஆனால் ராதையின் தேக நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டிருந்ததே யொழிய சற்றுவது குறையவில்லை. அவள் பெண் ஸரளாவைக் காணும் போதெல்லாம், பரிதாபகரமாக எனக்குத் தோன்றும். மூன்று வயதுடைய அந்தக்குழந்தைக்கு அன்னையின் அன்பான போஷாக்கின்றி வளரும்படி நேரிட்டதே என்று என்மனம் வருந்தும். ராதையின் ஸ்திதி மிகுந்த அபாயகரமான நிலைமைக்கு வந்துவிட்டது. வயித்தியரனைவரும் அவளைக்கைவிட்டுவிட்டனர். அவள் தந்தை அழுதுகொண்டே அவளுடைய கால்மாட்டிலமர்ந்திருந்தார். நானும் துக்கத்துடன் ராதையின் முகத்தைநோக்கியவாறு நின்றிருந்தேன். திடீரென்று ராதை என்னை வெறித்துநோக்கினாள். பிறகு தன் தந்தையின்பக்கம் திரும்பி, "அப்பா! எதற்காக அழுகிறீர்கள்?

என்னைப்போன்ற இளம்விதவைகள் உலகத்தில் இருந்தும் ஒன்றுதான் இறந்தும் ஒன்றுதான். எனக்குப்பதில் என்னைப்போலவே பிறந்திருக்கும், என்குழந்தை ஸரளாவைப்பார்த்து மனதைத்தேற்றிக்கொள்ளுங்கள்,'' என்று கூறிவிட்டு என்பக்கம் திரும்பினாள்.



அவள் மகள் ஸரளாவைக்கூப்பிட்டு, அவள் கரத்தைப்பிடித்து என்னிடம் ஒப்புவித்தாள். அன்றுதான் முதல்தடவையாகவும், கடைசி தடவையாகவும் என் பெயரைச்சொல்லிக்கூப்பிட்டாள். ''நாகராஜரே! முன்பு நீங்கள் என்னை மணந்துகொள்ளவிரும்பினீர்கள், ஆனால் நான் உங்களை மணக்கவிரும்பவில்லை. கடவுளுக்கும் அது சம்மதமில்லை, இப்பொழுது நான் என்மகள் ஸரளாவை உங்களுக்குப்பரிசாக அளிக்கிறேன். அவளைவளர்த்து நல்ல கல்வியளித்து, வயதுவந்தபிறகு உங்கள் புத்திரன் ரகுவிற்கு மணம்செய்துவையுங்கள், கடவுள் அதற்கு அருள்புரிவார். என்னிறுதிகாலத்தில் நானுங்களுக்கு அளிக்கும்பரிசு ஸரளாதான். என்னுடைய தந்தையையும் உங்களிடம் ஒப்புவிக்கிறேன். அவருடைய மரண பரியந்தம் அவரை நீங்கள்தான் கவனித்துக் கொள்ளவேண்டும்'' என்று கூறினாள். அதற்குமேல் பேசமுடியாதபடி பெருமூச்சுவாங்கத் தொடங்கியது. அன்றுமாலையே அவள் கூட்டைவிட்டு உயிர்பறந்து, எங்களெல்லாருடைய மனத்திலும் துக்கக்கனலை மூட்டிவிட்டு மறைந்தாள்.

''ராதை, ராதை! இன்று ஏன் உன்நினைவு வந்து என்மனதை வாட்டுகிறது? ராதை! என்னருமை ராதை!'' என்று மனத்திற்குள் புலம்பிக் கொண்டேன்.

''என்னமாமா! பிரமாதமான யோசனைசெய்கிறீர்கள்? நானும் அப்போதிலிருந்து கவனிக்கிறேன்'' என்று ஸரளா கூறும் குரலைக்கேட்டு, கனவிலிருந்து விழித்தவனைப்போல் திடுக்கிட்டு பின்பு சமாளித்துக்கொண்டேன்.

ஸ்ரீமதி "அரவிந்தம்"

# அமராவதி நதிக்கரையில்

எங்கள் ஊர் என்றாலே தனி ப்ரேமைதான். ஆறில்லா ஊருக்கல்லவா அழகுபாழ் என்று சொன்னது. எங்கள் ஊரில் அழகான அமராவதி ஓடுகிறது. அமராவதி என்றால் அமராவதியேதான். எங்கள் அமராவதியை பார்த்தால் தேவேந்திரனுடைய அமராவதியில் ஒரே கற்பக விருக்ஷம்தான் உண்டு எங்கள் அமராவதியிலோ, எண்ணிறந்த கற்பக விருக்ஷங்கள், ஆற்றின் கரையில் இருபுறமும் ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களின் நிழல், உட்கார்ந்து சிரம பரிகாரம் செய்துகொள்ள வசதியாயிருக்கும்.

கரையில் பெரிய அரசமரம், அதனடியிலே பிள்ளையார். நதிக்கு யார் வந்தாலும் சரி பிள்ளையாரை பார்க்காமல் போக முடியாது. ஆற்றில் குளித்து மேடு ஏறிய உடன் ஸிம்ஹாஸனத்தில் அழகாக காக்ஷியளிப்பார் பிள்ளையார். நதியில் குடத்துடன் குளிக்கவரும் ஒவ்வொருவரும் ஈர வஸ்திரத்துடன் குடத்தில் ஜலமெடுத்துவந்து பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்வார்கள்.



அபிஷேகம் செய்து திரும்பியவுடன் நதியின் படித்துறையும் விசாலமான மணற்பரப்பும், என்றும் வற்றாத பிரவாகமும், திரும்புபவர்களின் மனதை வசீகரிப்பதாலோ என்னவோ, அபிஷேகம் செய்தவர்கள் அப்படியே வீடு திரும்பாமல் மறுபடியும் படிக்கட்டுகளில் இறங்கி தண்ணீரில் அளைந்துவிட்டு மீண்டும் மொண்டுகொண்டு பூர்ண கும்பத்துடன்தான் வீடு திரும்புவார்கள். விசேஷமாக மார்கழிமாதம் கடும் பனியிலும் இவ்விதம்

பூர்ணகும்பத்துடன் வருபவர்கள், ச்லோகங்கள் திருவனந்தால், திருப்பள்ளியெழுச்சி முதலான பாடங்களை இனிமையாக பாடிக்கொண்டு வருவது கேட்பவரை மெய்மறக்கச் செய்யும்.

எங்கள் ஊருக்கு வடக்கே ரஸ்தா, தெற்கே வாய்க்கால், கிழக்கே ஈச்வரன் கோயில், மேற்கே நடராஜகோயிலும் பெருமாள் கோயிலும் தெற்கேயும், கிழக்கேயும் நஞ்சைநிலங்கள், வடக்கிலும் மேற்கிலும் புஞ்சை. எங்கள் ஊரை நினைத்தவுடன், நான் சின்னவளாக இருந்தபொழுது மார்கழிமாதம் தெருவில் பறங்கிப்பூ வைப்பதற்கு சண்டைபோட்டது ஞாபகம்வருகிறது. நடராஜாகோவிலை ஒட்டி எங்கள் தெரு. சாதாரணமாக நாற்பதுஅடி அகலம் இருக்கும். எதிர்வீட்டுக் கோலமும் எங்கள் வீட்டுக் கோலமும் போட்டிபோட்டுக்கொண்டு ஒன்றையொன்று முட்டிக்கொள்ளும் அதிலும் திருவாதிரையன்று கேட்கவே வேண்டாம், நானும் என்னுடைய ஸ்னேகிதிகள் எல்லாரும் அபிஷேகம் தொடங்குவதற்கு முன்பே கோவிலில் தயாராய் ஆஜராகிவிடுவோம். மற்ற இடங்களில் (பேரூர், சிதம்பரம்) திருவாதிரை அபிஷேகம் பார்ப்பது மென்பிடி. எங்கள் ஊரில் அப்படியில்லை. யாவரும் ஒவ்வொரு அபிஷேகத்தையும் நிதானமாக கண்குளிர மனம் திருப்தியுற பூரணகும்பம்வரை தடையில்லாமல் பார்க்கலாம். அபிஷேகம்முடிந்தது என்றால் அங்கு ஒருவரையும் காணமுடியாது. வீடு சென்று அங்கே நடராஜாவுக்கு நிவேதனம்செய்து தயாராகவைத்திருக்கும்.திருவாதிரைகளில் ஏழு கறிக்குழம்பு முதலியவைகளை ஒருகைபார்த்து விட்டுத் திரும்புவோம். மறுபடி ஒருமணிநேரம் கழித்து அலங்காரதீபாராதனை நடக்கும். அதையும் முன்சொன்னதுபோல தடையில்லாமல் தரிசிக்கலாம். கோ ரதத்தில் நடராஜா பவனிவருவார். அம்மன் சீராட்டு மட்டையடியும் ரொம்பவிசேஷம்.

தைமாதத்தில் தீர்த்தவாரி. சந்திரசேகரர் அமராவதிக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுப்பார். அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு அக்ரகாரத்தில் ஒரு சிறு குழந்தையைகூட காணமுடியாது. அவ்வளவுபேரையும் அமராவதியில் பார்க்கலாம். நதியின் நடுவில் அவ்வளவு ஜனங்களுக்கு மத்தியில் ஸ்வாமிதரிசனம் செய்தபோது இருந்த சந்தோஷம் இப்போது அறுபத்திமூவர் ஜனத்திரளை பார்க்கும்போதுகூட உண்டாவதில்லை.

மற்றபடி எங்களூரிலே சில முக்யமானவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தியே தீரவேணும். ஏனென்றால் அவர்களில்லாவிட்டால் எங்கள் ஊருக்கு இவ்வளவு பிரஸித்தி ஏது? எங்கள் அக்ரஹாரத்திலே புருஷர்கள் எல்லாரும் நல்லபடிப்பாளிகள். வடமொழியிலே நல்ல தேர்ச்சி. பெண்களோ அதற்கு நேர் எதிரிடை. கோள்சொல்லுதல் சண்டைசச்சரவுகளில் அபாரருசி. ருசியற்றவர்களும் உண்டு. இருந்தாலும், எங்கள் ஊர் பஞ்சகன்னிகைகள் மிகப்ரஸித்தம், அந்த நாளிலே

'பாடல்பெறுனே பலர்மெச்ச வாழானே'

என்றுளாம் ஔவைப்பாட்டி.

எங்கள் ஊர் பெண்கள் அதற்கு குறைந்தவர்களா என்ன? எங்கள் கவிராயர் பாடியதை பாருங்கள்.

'சுப்பு மீனாக்ஷி கல்யாணி, சங்கரி ஸுந்தரி ததா
பஞ்சகன்யாம் ஸ்மரேதித்யம் மஹாபாப ஸம்பவம்'

இது பஞ்சகன்னிகைகளுக்கு.

அழகிலே சிறந்த சிலருக்கு எங்கள் கவிராயர் பாடியதை பாருங்கள்.

'ஊசிச்சுப்பு ஊதமூஞ்சி காமாட்சி
பல்லுச்சேசி பரட்டைதலை சீதா

குட்டைசேசி குருங்கழுத்து செல்லம்
பொதிப்பொன்னு பொறுமையுள்ள அம்மாளு'

இவை அழகுத்தெய்வங்களுக்கு.

அடுத்தபடி விகடகவி வேம்பன் எங்கள் ஊருக்கே உரியதனிச்சிறப்பு. உள்ளது அறுபது வீடு. அவ்வளவும் பங்காளிகள் ஸாமவேதிகள். அஹமன்னம் ! அஹமன்னம் என்று ஸாமம் சொல்லுவார்க்ள். "ரஸமன்னம் ! ரஸமன்னம் !" என்று சாப்பிடுவார்கள். காலையிலெழுந்தால் ஒருவரையொருவர் குசலம் விசாரிக்காமல் இருக்கமுடியாது. எந்த வீட்டில் எது நடந்தாலும் வேம்பனுக்குத் தெரிந்துவிடும். அவைகளை வைத்துக்கொண்டு கலியாணம் முதலிய விசேஷங்களில் பலர் முன்னிலையில் தானே மாமியாரைப்போலவும், மருமகளைப்போலவும், இடைநிற்பவரைப்போலவும் பேசி வயிறு குலுங்க நகைக்கச்செய்வான்.

'ஏண்டி சேசீ, என்னை அப்படிச் சொன்னாளே ! இப்படிச் சொன்னாளே ! இவ நன்னாயிருப்பாளா? இவளும் நாலு குழந்தைகளைப் பெத்திருக்கா. நாளைக்கு இவளும் ஒரு மாமியாராப்போவ. இப்படி நாக்கில் நரம்பில்லாமல் இப்படிச் சொன்னாளே' என்று உரத்த குரலில் மாமியார் குரல் பற்களைக் கடித்துப் பேசும்.

'நன்னாருக்கு மாமி, நீங்க பெரியவள் இப்படிச் சொல்லுவாளா, என்னமோ சிறிசு விட்டுத்தள்ளுங்கோ. ஆயிரம் பல்லுலே ஒருபல் நச்சுப் பல்லிருக்கும்" என்று இன்னொரு குரல் நியாயம் பேசும்.

உடனே மருமகள் 'நீங்களே சொல்லுங்கோ, பொன்னக்கா குழந்தேளுக்குக்கூட வைக்காத அத்தனையும் தானே திங்கணுங்கிறது. வயசாக வயசாக வயிறு பெரிசாயிடுத்து. கேட்டா நான் ஒன்றையும் பார்க்க லேங்கறது.

"ஏண்டீ ! பெரியவாளை மரியாதையில்லாமல் பேசாதே. என்னமோ சபலம் பாவம். தின்றதாகத்தான் இருக்கட்டுமே. இந்தாத்தில் அவளுக்கு அவ்வளவு ஸ்வாதீனமில்லையா ?"

'அத்தனையும் பத்தியடி ஆயிரக்கால் மண்டபத்தில்
அத்தனையும் உண்டான அடுக்கிவச்சு வாழேனு',

என்று இந்த ரீதியில் மிகமிக அற்புதமாய் நடிப்பான். உண்மையில் அவனால் ஊரில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டதென்றால் ஆச்சரியமென்ன ?

என் பாட்டியார் பகலில் ஒழிந்த நேரங்களில் வேதாந்தக்குறம் பாடம் சொல்லுவார். சிஷ்யர்கள் எப்படித் தெரியுமோ ?

பாட்டி 'அவித்தைவிட்டு மாயைவிட்டு அஞ்ஞானம்விட்டு' என்பாள். 'அவிழ்த்துவிட்டு, மேயவிட்டு அஞ்ஞானம்விட்டு' என்பாள் ஒரு சிஷ்யை. திருத்தினால் கோபம். இதே ரீதியில் நடக்கும் குறவஞ்சி பாடம்.

இவர்கள்தான் எங்கள் ஊரில் முக்கியமென்று நினைத்துவிடாதீர்கள். வித்வத்தில் மற்ற ஊர்களுக்கு எங்கள்ஊர்சிறிதும் பின்னடையாது. எங்கள் கிராமத்திலேதானே ஒரு காலேஜை ஆரம்பித்து நடத்தினார் வெங்கடராம சாஸ்திரிகள். இன்று கொங்குநாட்டிலே ப்ரஸித்திபெற்ற வக்கீல்களாயிருக்கும் பலர் அவருடைய கலாசாலையில் படித்தவர்கள்தான். சின்னஞ்சிறு கிராமத்திலே, ஒரு கலாசாலையை ஸ்தாபித்து அதை திறமையாக நடத்திய பெருமை எங்கள் கிராமத்திற்கே உரியது. வையாகரிணி சின்னப்பா சாஸ்திரிகளைத் தெரியாத வித்வான்கள் தமிழ்நாட்டிலே கிடையாது, இவர் அப்பையதீக்ஷிதர் வம்சத்தை சேர்ந்தவர்தான். இவ்வளவு பெருமைவாய்ந்த ஊரைப்பற்றி எழுத எனக்கேன் மலைப்பு ?



# மௌனம்

ஸ்ரீமதி லலிதாதேவி

முன்னுரை:—நாங்கள் இந்த வருஷம் லீவுக்கு நீலகிரி மலைக்கு கோடைகாலத்தை செலவிட எண்ணிச்சென்றோம். ஒருநாள் மாலையில் என் மனைவியுடன் வெளியிலே உலவச்சென்றேன், என் மனைவி அவ்விடம் ஒருபோர்ட்பலகையில் பெரிய எழுத்தில் எழுதியிருப்பதை சுட்டிக்காட்டினாள்; படித்துப்பார்த்தேன் உடனே என் மனைவியின் முகத்தை ஏற இறங்கப் பார்த்தேன். உடனே அவளுடைய மனதை தெரிந்துகொண்டுவிட்டேன், அவளுக்கு நகைப்பயித்தியம் ஜாஸ்தி உண்டு ஆனால் அதை வெளிக்கு ரொம்ப காட்டிக்கொள்ளவும்மாட்டாள். நமது சக்திக்கு இவ்வளவு கிடைத்ததே என்று திருப்தியாகவே இருப்பாள். நகைக் கடைகளில் அதிகமாய் எட்டியும் பார்க்கமாட்டாள். காரணம் பைசா இல்லாத குறைவுதான். இந்த பலகையிலே பலவித நகைகள் உயர்ந்த ரகம். வேண்டுபவர் வந்து பாருங்கள். இலவசமாய் பெற்றுக்கொள்ளலாம். யோகி ஒருவரால்கண்டுபிடிக்கப்பட்டுகேட்பவர்கள் பார்ப்பவர்கள் யாவருக்கும் எந்த சமயமும் எவ்வித பிரதிபலனும் விரும்பாமல் தரப்படும். அதோடு, சின்னபெண்கள் மட்டுமல்ல நடுவயதுள்ளவர்கள், கிழவிகள்கூட அணிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்ல பெண் வகுப்பினர் மட்டுமல்ல: ஆண்களும் அணிந்துகொள்ளக் கூடியது. வந்து பாருங்கள்: களிகூறுங்கள்."

முழுக்க படித்தவுடனே எனக்கும் அதிக ஆச்சரியமாய் இருந்தது. உடனே இருவருமாக அந்த பலகை மாட்டப்பட்டிருந்த கட்டடத்தினுள்ளே பிரவேசித்தோம். அது ஒரு புஸ்தகசாலை. அவ்விடம்உள்ளஒருசாதுஎங்களை பக்ஷமாய் வரவேற்றார். எங்கள் இருவருடைய முகமும் அசடு வழிய நிற்கக் கண்ட அவர், "ஆம் ஆம். நீங்கள் தேடிவந்த மங்கள பூஷணங்களை இந்த புஸ்தகத்தில் படித்து அணிந்துகொள்ளுங்கள்" என்றார். மறுபடியும், அவர் சொன்னார் "நகைக்கத்தக்க நகை இங்கே இல்லைதான். ஐயா ! அம்மா! வாங்கள். அழியத்தக்க நகை இங்கே இல்லைதான். தம்பதிகளே! பாருங்கள் திருடனோ நீர் நெருப்போ அழிக்கக்கூடிய வெளி அலங்கார நகை இவிடம் இல்லை என்பது உண்மைதான். இதைப் படித்து அறியுங்கள் எப்பேர்ப்பட்ட நகை தெரிந்துகொள்வீர்கள். இக லோகத்தில் சுகப்பட அல்ல: பரலோகத்திற்கு ஏற்றிவிடும். இந்த நகைகள் பற்பல ரகம் பற்பல விதம். யார் யாருக்கு எதுஎது பிரியமோ அனுசரிக்கக்கூடுமோ அனுசரித்து அடையலாம்" என்றார். நாங்கள் மகுடம் என்ற "மௌனம்" நகையை பெற்று திரும்பிவந்து சேர்ந்தோம். எப்படி? வாசித்துப்பாருங்கள். முதலிலே நீங்களும் ஏமாறவேண்டாம்.

சத்குருவே நம: மோனகுருவே நம:

நல்ல உயர்ந்தரகம் மலிவான நகைகள்

மகான்கள் அறைகூவி அழைக்கிறார்கள்; வாங்கி அணியுங்கள்

## I மகுடம் = மௌனம்

உலகயாத்திரையில் மங்கள சூத்திரம்வரையில் உள்ள சகல நகைகளையும் இழந்துவிடநேரினும்கூட அழியாத வேறுநகைகள் உள. பொய்

யான நகை அல்ல; அது மெய்; என்றநகை என்றும் பிரகாசமாயுளது, மெய்யான நாதன் அணிவித்த மெய்யான பூஷணம் உண்டு. அதைஅறியாத அக்ஞான இருளில் ஞானதீபம் மங்கலாயுள்ள சமயம் தூண்டிவிட்டு சுருபத்தை அவரே தரிசிப்பிக்கவேணும். நாமனைவரும் அந்த பூஷணங்களை பூட்டிக்கொள்ளமுயலவேணும். இந்தபூஷணங்களை அணிபவர்கள்உண்மை யான சந்தோஷமடையலாம். இந்த மங்களபூஷணங்கள்எதிரில் தங்க வைரபூஷணங்கள் பிரகாசம்மழுங்கும். சூர்ய சந்திரபிரகாசத்திலும் பிரகாச மானது. அந்த சாக்ஷாத்கடவுள் பிரகாசம், வாருங்கள் அவ்விடம் செல் வோம்.அலங்கரித்துக்கொள்வோம் இவைகள் வெறும்பிரகாசம்மட்டுமல்ல. மந்திரபூர்வகமானது. நமக்கு காவல்கவசமாயும் ரக்ஷிக்கும். நாம் விரும்பும் இடத்தில் கூட்டிச்செல்ல சக்திபெற்றவையும் ஆகும். பூஷணங்கள் பற்பல உண்டு. வரிசைக்கிரமமாக சொல்லிவரேன். முதலாவது "மௌனம் சர்வாத்த சாதகம்" இதுதான் நமக்கு "மகுடம்" போன்றது. தினமும் 1 மணிநேரமாவது மௌன அப்பியாஸம் நல்லது. மகான் காந்தியடிகள் வாரத்தில் 1 நாள் இருந்துவருகின்றார். நம்முடைய எவ்வளவுநேரம் வீண்பேச்சால் செலவிடுகின்றோம். "ஏ என் பிரிய ஆத்மநாத்! சாந்தம் கொடு" என்றெண்ணி 1 மணியாவது பேசாமல் இருப்பதில் எவ்வளவு புத்திசாலித்தனம்,சுகம்உண்டு தெரியுமா? ஏன் வீணை அனாவசியவிஷயங் களில் தலையிட்டு தங்கபோதை சிலவிடணமோ? ஏகாந்தமாய் மௌனமாய் இப்படி பழகிவர லாபம்வரலாம். பண்டிதர்பேச்சு வாசாலகத்தில் எழுத் தாளர் கைலாகவத்தில்லாபம்உண்டுஎன்றால் மௌனிகளின் மௌனத்தில் அதைவிட லாபமேதான் உண்டு. மகான்கள் நமக்கு மவுனமாய் செய்யும் உபதேசத்திலேயே படிக்கும்படிப்பைவிட நேரில்சொல்லிக் கொடுக்கையில் அதிகமாய் வருவதில்லை. பெரியவர்கள் குறைவாகத்தான் பேசுவார்கள் மௌனிகளான ஞானிகள்கடவுளை அடைகிறார்கள். வெறும்பேச்சு தர்க்கக் காரர்களால் கடவுளை காணமுடியாது. புத்தபகவானிடம் ஒரு தர்க்க சாஸ்த்திரிகேட்ட கேள்விக்கு பகவான் மௌனமாயிருந்தாராம். ஏன்! தக்ஷிணாமூர்த்தியானவர் சின்முத்திரைகாட்டி பேசாதே என்று எச்சரிக்க வில்லையா? மகாத்மாக்களுடைய உபதேசம் சப்தமில்லாதது என்கிறார்கள் நாக்கைமட்டும் பேசாமல் அடக்கினால் போதாது. மனக்குதிரையை நாதன் பாதத்தில் கட்டி ஓடாமல்போடவேண்டும்.

அமைதியாய் இருந்துவிட்டால் வெட்கப்படவேண்டாம். சத்தியத்தை ஜெயிலில் அடைக்கவேமுடியாது. நீராவியை அடைக்க அடைக்கப்பின்னால் இஞ்சின்வேகமாய் பல ரயில்களை இழுத்துச்செல்ல சக்தி அடைகிறது. ஒரு சத்யாக்கிரஹி அடைபட்டால் பலரை இழுப்பான்; அதுபோல மௌனம் மற்ற இந்திரியங்களையும் சேர்த்து இழுக்க பலம் சேர்த்துக்கொண்டுவிடும்.

உண்மை சக்தி மௌனம். கர்ஜிக்கிறமேகம் வருஷிக்காது; குலைக்கிற நாய் கடிக்காது என்று வசனம் கேட்டதில்லையா? வீண்பெருமை பேச்சுக் காரர்கள் தோல்வியடைகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய பேச்சி லேயே சக்தியை ஜாடா செலவழித்துவிடுகிறார்கள். எழுத்தாளரும் தங்கள் புத்திபலத்தை எழுத்திலேயே காட்டித் தொலைத்துவிட்டு தலையெழுத்தை அனுபவிக்கவேண்டியவராகின்றார்கள். சாதாரண வியாபாரிகள்கூடதங்கள் ரகஸியத்தை வெளியிட்டுச் சொல்வதில்லை. மூடு மந்திரத்தினாலேயே லாப மடிக்கிறார்கள். நாம்கொள்ளை லாபம்கேட்கிறோம். ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற்றுவிட ஜெயமடையவேணுமேயானால் மௌனிகளாலேயேமுடியும்.

நாம் லக்ஷியத்தை அடையவேண்டுமேயானால் மௌனசக்தியுடன் கிளம்புவோம். வீண் ஆசைகளைவிடுவோம். பேச்சுக்காரனை உலகம் அறியும்.

காரியத்திலே செய்யவேண்டும். மற்றவர்களை இகழ்ந்து தங்களைப்புகழ்ந்து கொள்பவர்களைபற்றி என்ன சொல்வது? அடுத்த படியில் காலே எடுத்து வைக்க முடியாதவர்கள். மற்றவர்கள் துஷணை பூஷணையை நாம் ஏன் கவனிக்கவேண்டும்? காரியத்திலே கண்ணுய் பேசாமல் நடந்து குறியை அடையலாம். ஆத்மஜெயம் அடையலாம். நன்றாய் கட்டப்பட்ட வீட்டுக்குள் மழை பனி வெய்யில் பயமில்லாமல் வசிப்பதுபோல சாந்தி மயமான ஆனந்தமான வீட்டில் வசிக்கிறதை சாந்தமும் மவுனமுமா யிருந்தால் காப்பாற்றலாமாம்.

நம்முடைய பெரிய தவறு என்னவென்ருல் பெரிய வேலையைத் தொடங்கிச்செய்ய நிறைய பேசி எழுதி உபந்நியாசம் செய்யவேண்டும் என்று எண்ணிவிடுகிறோம். மௌனமாயிருந்தால் அது சோம்பேறித்தனம் ஆகமாட்டாது. தற்காலம் ரொம்பபேச்சு பேசுகிறவரை போற்றும் காலம். ஆனல் அது சிலநாள்தான் பெருமை அல்லது சில நாழிக்கே. கடைசியில் ஜெயமென்னவோ மௌனியே கொண்டுபோகிருன். ஒழுக்கமுள்ளவர் களின் லக்ஷணமே மௌனம். எவ்வளவுக்கு எவ்வளவு ஆத்ம அனுபவம் கிடைக்க ஆரம்பம் ஆகிறதோ அத்தனைக்கு அத்தனை தன்னை வெளி ஆடம்பரங்களிலே இருந்து உள்ளே இழுத்துக்கொண்டுவிடவேண்டியது ஆத்மானந்தத்தில் நிரந்தரம் திளைக்க பாக்கியம் பெறுவோம்.

ஆகவே தயவுசெய்து முதலில் இந்த மௌன பூஷணத்தை அனை வரும் ஒப்பி வாங்கி அணிந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ் வளவுக்கு குறைத்துப் பேசக்கூடுமோ அதே நல்லது. பேசத்தான் வேண் டுமேயானுல் பகவன் நாமம் பேசுவோம். தியானம் செய்யவேண்டுமானல் ஸத்குருநாதனையே தியானிப்போம். ப்ரேமைமூர்த்தியையே எண்ணிப் பேசி மௌனமாவோம்.

கட்டுரை படிக்கிறவர்கள் இன்று இந்த பூஷணத்தை நல்லரகம் மலிவானது; வாங்கி அணியுங்கள். மேன்மேலும் வேணுமானல் எதேஷ்ட நகைகள் மெய்யாய் உளது. இந்த மார்க்கத்தில் திரும்பி கடவுள் அருளைப் பெறுவோம் வாருங்கள்.

ஓம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பின்னுரை:—

இந்த மகுடம் பிரகாசம் குறையாதபடி ராட்டையை கையில் பற்றிக் கொள்ளுவோம். சதா பேசிக்கொண்டிருப்பவனும் அமைதி அடைவான். நாக்கு ஜெபம் சொல்ல, கை நூல் நூற்றுப் பழகினல் மனமும் சலித்து சலித்து அடங்கலாகாதா பார்ப்போம்!

கையும் மெய்யும் திருப்பித் திருப்பி வட்டம் சுற்றிக்கொண்டே மனதையும் வட்டம் தாண்டிச் செல்லாமல் மடக்கி விடுவதில்தான் புரு ஷார்த்தம் ஜெயம். மகாயோகி தபசு செய்வதின் ரகஸியம் ராட்டையிலே அடங்கியுளது. மகாத்மா அதைக்கைப்பிடித்து பிரத்யக்ஷமகானுய் தற்காலம் விளங்குகிருர். சக்கரபாணி, கிருஷ்ண பரமாத்மா இதையே சுழட்டி ஜெயம் பெற்ருர். கர்மிகள் கண்ணுக்கு கர்மாசெய்யும் ராட்டினம். ஞானிகள் மனத்திற்கு ஞானம் போதிக்கும், தியானிகள் மனதிலும் பக்தர்கள் மனதி லும் ராட்டை எல்லாருக்கும் அவரவர் இஷ்டபலனைத்தரும். ஓம்காரசப்தத் துடன் மௌன குரு ஸ்தானத்தில் சுழலும். தம்பதிகள் பிரிந்த சமயம் ஆறுதல் அளிக்கும் கதி. தாரம் இழந்தவனுக்கு தாரம், புஸ்தகபடிப்பு மனதை ஒருவழியில் விரட்டினல் ராட்டை படிப்பு சும்மா நிறுத்தும்.

ஸ்ரீமதி. ஸாரநாயகி ஜகன்னாதன்

# அலைமோதல்

மேகங்கள் பன்னீர் தெளித்துவிட்டு, காற்றில் சிக்குண்டு ஓட்டம் பிடித்தன. சிற்பிகளின் சிகரக்கலை இலக்காகிய வர்ண - வில் வானத்தில் தோன்றி கவிகளின் உள்ளத்தைக் களிப்புறச் செய்து கொண்டிருந்தது. சமுத்திரராஜன் சினம் கொண்டுவிட்டானோ என்னவோ அலைகள்சீறியடித்து கரையைக் கரைத்துக்கொண்டிருந்தன. அச்சப்பட்ட நீர்ப்பறவைகள் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தன. நண்டுகள் நிர்ப்பயமாய் நிலத்தில் உலாவிக்கொண்டிருந்தன.

கோர சப்தத்துடன் ஒரு அலை கிளம்பி கரையைமோத, நீர்த் திவலைகள் சிதறுண்டு ஆழ்ந்தகவலையுடன் அமர்ந்திருந்த சுந்தரத்தின் மீது தெளித்தன. அதைக்கூட பொருட்படுத்தவில்லை சுந்தரம். அதற்குப் பதிலளிக்கும் முறையில் அவனது கண் மடைகள் திறந்து நீர் தாரை-தாரையாகப் பெருகி, மூக்கு-முகவாய்க்கட்டை வழியாக வழிந்தோட, அவனையறியாமலே அவனது கைவிரல்கள் அதை வழித்துத் தெளித்துக்கொண்டிருந்தன.

மனிதனது உள்ளத்தில் துக்கம் குடிகொண்டுவிட்டால், அவனது உறுப்புகள் அவனுக்குக் கீழ்ப்படிவதில்லை மூளைக்கருவிகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டு சுயேச்சையாக எங்கோ சஞ்சரிக்கச் சென்றுவிடுகின்றன. எங்கே இருக்கிறோம், என்ன செய்கிறோம் என்பதே தெரிவதில்லை. எதிராளிகள் நோக்குமிடத்து, இவனுக்கென்ன மூளைக்கோளாறோவென்றுகூட எண்ணிவிடுகிறார்கள்.

சுந்தரத்திற்கு மூளைக்கோளாறு ஒன்றுமில்லை. அடக்கமுடியாத துக்கம் அவனை வதைத்துக்கொண்டிருக்க, தலைகுனிந்தவண்ணம், அழுதுகொண்டே அமர்ந்திருந்தான். அக்கம் பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதுகூட அவன் பார்வையிலில்லை.

திடீரென்று யாரோ, அப்பா, அப்பாவென்று கூச்சலிடும் சப்தம் கேட்டது. சுந்தரம் திடுக்குண்டு திரும்பிப்பார்த்தான். ஒரு நாய் அலையில் இறங்குவதையும், சங்கிலியைப் பிடித்துக்கொண்டிருந்த நாலு வயது சிறுவனை அது இழுத்துக்கொண்டு ஓடுவதையும் பார்த்து விரைந்தோடி, குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு நாயையும் இழுத்துக்கொண்டு கரைசேர்ந்தான்.

சுந்தரம்:—ஏண்டா கிட்டு! நாயே இழுத்துண்டு தண்ணீலே இறங்கலாமா அசடே!

குழந்தை கிட்டு:—இல்லேப்பா! நானு இழுத்துண்டு போனேன். அதுதான் என்னே இழுத்துண்டு ஓட்டமா ஓடறதே.

சுந்தரம்:—இத்தனைநாழி அனியாயமாசெத்துப்போயிருப்பியே, ஏண்டா, இருக்கற கவலை போறாதுன்னுட்டா?

கிட்டு:—செத்துப்போறதுன்னு என்னப்பா? அம்மாகூட செத்துப்பேட்டா, செத்துப்பேட்டான்னு சொல்றயே, அப்படின்னு என்ன? அம்மா ஊருக்கா போயிட்டா? ஏன்? நீ அவளை அடிச்சியாப்பா? அம்மாகிட்டே என்னே அழச்சிண்டு போறயா இல்லையா?

என்று ஒரே அடம்பிடித்தான். சுந்தரத்திற்கு என்ன பதில்சொல்வது என்று தோன்றவில்லை. கிட்டு அழ ஆரம்பித்தான்.

சுந்தரம்:—கிட்டு! அழாதேடா, அம்மாகிட்டேதானே போகணம், ஊருக்கு இன்னிக்கி கடுதாசுபோடறேன், அம்மா தன்னாலே வந்துடுவா. என்ன, சமத்தோல்லியோ?

கிட்டு:—(அழுதுகொண்டே) கட்டாயம் வந்துடுவாளா? இல்லேன்னா நான் அழுதுண்டே இருப்பேன்.

சுந்தரம்:—அசடே! ரெண்டு நாள்ளே வந்துடுவோ. அழாதே என்றானே தவிர, அவனது தொண்டை மேற்கொண்டு பேசமுடியாமல் முற்றுகைபோட்டுவிட்டது. கண்ணூற்றில் நீர் பெருக ஆரம்பித்தது. கிட்டு என்ன தொந்திரவு செய்தும் யாதொரு பதிலும் அளித்ததாகத் தெரியவில்லை.

சுந்தரம் இவ்வளவு கவலைப்படவேண்டிய காரணம் என்ன? உயிருக்கு உயிராக மதித்துவந்த அவன் மனைவி ராஜத்தின் பொருட்டுத்தான். வாழ்க்கைப் போராட்டத்தின் பல இன்னல்களுக்குப் பிறகு சுந்தரம், ராஜத்தை மணந்துகொண்டான். சந்தோஷகரமாகவே இல்லறத்தை நடத்திவந்தான். பாழாய்ப்போன காலா சுந்தரத்தினிடம் பகைமை கொண்டிருந்ததோ என்னவோ, ராஜத்தைப் பலியாக்கிக்கொண்டுவிட்டது. அவளிருந்து மறைந்த அடையாளத்திற்காக மூன்றுவயதுக்குழந்தை கிட்டுவைவிட்டுச்சென்றிருந்தாள். அன்றுமுதல் ஒரே துக்கம்தான். இன்று அது அதிகரித்துவிட்டது. காரணம் ராஜத்தின் தலைதிவசம் அன்று. திவசச்சடங்குகளை முடித்துவிட்டு வெளிக்கிளம்பி வந்துவிட்டான். கிட்டு அப்பா என்று கத்தின பிறகேதான், எங்கிருக்கிறோம், கிட்டு எப்படி தன்னுடன்வந்துவிட்டான் என்பது அவனறிவுக்கெட்டியது. மனச்சாந்தி ஏற்படும் பொருட்டு கடற்கரையை அடைந்தும், கிட்டு கேட்ட பதில் கூற முடியாத கேள்விகள் சுந்தரத்தை துக்கக்கடலில் மூழ்த்தி திணறும் படிச்செய்துவிட்டன. அவனது மனம் தன் இளம்பிராயத்தில் நடந்த சம்பவங்களை நாடிச்சென்றது. ராஜம் சாகும் தறுவாயில், "குழந்தே கிட்டுவே கவனிக்காமே விட்டுடாதிங்கோ. சிசு ஏங்கிப் போய்விடும்" என்று சொன்ன சொற்களும் இன்னும் பல சம்பவங்களும் அவனது மனத்திரையில் தோன்றித்தோன்றி மறைய, அசைவற்று உட்கார்ந்திருந்தான்...குழந்தை கிட்டு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அவனுடன் பேசுவதாக இல்லை. நாய்குட்டி ரோஸை இழுத்துக்கொண்டு விளையாடச்சென்றுவிட்டான்.

சூரியன் மேற்கே மறையும் சமயம், மெருகுகொடுத்த பொற் சிகரங்களைப்போல்—மேகங்களின்மீது சூரியனின்கிரணங்கள்பட்டு ஒரே ஜோதிமயமாக இருந்தது. ஆலைகளில் வேலை தீர்ந்து வீடுசெல்லும் பணியாட்களை யொக்க, பக்ஷிஜாதிகள் தத்தம் கூட்டைநாடி விரைந்து சென்றுகொண்டிருந்தன. ஜனங்களும் ஒருவர்பின் ஒருவராக நழுவிக்கொண்டிருந்தனர்.

தலைபூராவும் தும்பைப்பூபோல் நரைத்து, அங்கமெல்லாம் சுருக்கம் கண்டு, பஞ்சைக்கச்சம் அவிழ்ந்து விழுந்துவிடுமோ என்ற பாவ

ளையில் தளர்ந்த தொந்தி, உடலெங்கும் திட்டிய திருநீற்றுப் பட்டையுடன், கண்களுக்குமேல் கையை நெற்றியில் வைத்துக்கொண்டு நாலாபக்கமும் பார்த்துக்கொண்டே தள்ளாடியவண்ணம் வந்து கொண்டிருந்தார் ஒரு பிராம்மணக் கிழவர்.

கிட்டு எப்படியோ அவரைக் கவனித்துவிட்டான். தாத்தா தாத்தாவென்று கூவிக்கொண்டே ஓடினன். கிழவர் கிட்டுவைத் தூக்கிக்கொண்டு, 'அப்பா எங்கே? என்ருர். அதோவென்று கையால் காட்டினன் கிட்டு. கிழவர் சுந்தரத்தின் அருகில் வந்து "சுந்தரம்! சுந்தரம்" என்று கூப்பிட்டார். அயர்ந்து நித்திரைபோகும் ஒருவனைத் தட்டி எழுப்பினல் தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எங்ஙனம் எழுந்திருப்பானே அங்ஙனம் சுந்தரம் "ஆ! அப்பாவா?" என்ருன்.

கிழவர்:—சுந்தரம்! உன்னே எங்கெல்லாம் தேடறது? வண்டாப்பா? ஆயிரம் கவலே இருந்தாலும், சாப்படாமே வரலாமோ? நீ பட்னியோடே போயிருக்கச்சே உன் அக்கா எப்படி சாப்பிடுவோ, இல்லே எனக்குத்தான் சாப்பட மனசுவருமா? எங்கெங்கையோ தேடினேன். என் வயிறே கலக்கிப்பிட்டுது. கடசியா ரெங்குவே பாத்தேன். அவன் சொன்ஞன் நீ இங்கே இருக்கேன்னு. வண்டாப்பா இப்படியே கவலேப்பட்டுண்டு, சாப்படாமே, வேலேக்கி போகாமே இருந்துண்டு வந்தியான வீண உடம்பு கெட்டுடும். கவலேங்கறது எல்லாருக்கும்தான் உண்டு. ஸ்மசான வைராக்யம், ப்ரஸவ வைராக்யம்னு சொல்லுவா. அதெல்லாம் எத்தனே நாளேக்கி? உன் அம்மா கிழவி செத்ததுக்கே நான் அழஅழன்னு அழுதேன்.

சுந்தரம்:—என்னப்பா, நீங்கபாட்லே, ப்ரேக் ஓடிஞ்சுபோன மோட்டார்மாதிரி என்னமோ நீட்டிண்டு, எரியற என் மனத்திலே எண்ணெயே கொட்ரஹ. ராஜம்மாதிரி இன்னெரு பெண் உங்களுக்கு மாட்டுப்பொண்ணு வரமுடியுமா? வந்தாலும் கிட்டுமேலே அவ்வளவு பாசமா இருப்பாளா? இந்தமாதிரி பேச்சயே எங் காதிலே போடாதிங்கோ.

கிழவர்:—வண்டாப்பா! நீ புத்திசாலி. உனக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதில்லே. இருந்தாலும் அவமாதிரியே இன்னெருத்தி கிடைக்கணும்னு முடியுமா? ஏகதேசம், நல்ல அழகு, குணமுள்ள பொண்ணு பாக்கலாம். ஏன்? எனக்கே தெரியும் நம்ம பக்கத்தாத்து சேஷய்யர் பொண்ணே. குட்டி நல்ல அழகு. சாட்டைமாதிரி பின்னல். வண்டுமாதிரி குருகுருன்னு சுருசுருப்பு. ஆத்து வேலேயெல்லாம் பம்பரமா சுத்திவிடருளாம். சேஷய்யருக்கும் அவர் பொண்ணே உனக்கு கல்யாணம் பண்ணிக்கொடுக்கணும்னு அபிப்பிராயம்தான். ஜாடைமாடையா எங்கிட்டே கேக்ரர். நான் என்ன செய்யமுடியும்? உனக்கு இஷ்டமிருந்தாத்தானே.

சுந்தரம்:—என்னப்பா நான் குழந்தையா? ஒரு கலியாணம் பண்ணிண்டு பட்ட சுகம் போதாதா? இன்னம் வேறே கலியாணத்தே பண்ணிண்டு, கிட்டுவே அவ கசக்கி பிழியணும், அந்த கஷ்டத்தை நான் பாக்கணும், எதுக்கு இந்த தொல்லேயெல்லாம்? கிட்டு ஆயிசோடே இருந்தான்ன அதுவே எனக்குப்போறும்.

கிழவர்:-கலியாணப்பேச்சுன்னுலே-இப்பப்பிடிக்காது உனக்கு நாளாக நாளாக தன்னுலே நீயே..................

இந்த சம்பாஷணைகளை கேட்டுக்கொண்டிருந்த கிட்டு தன் தாத்தாவிடம், "என் தாத்தா யாருக்கு கலியாணம்?" என்ருன்.

கிழவர்:—உன் அப்பாவுக்குத்தான்.

கிட்டு:—அப்பாவுக்கா! என் தாத்தா உனக்கு பைத்யமா? அம்மாதான் வரப்போருளே.

கிழவர்:—அம்மாவா? யாரம்மாடா? உளற்றே.

கிட்டு:—நானு உளற்றேன்? அப்பாதான் அம்மாக்கு கடுதாசு போடப்போறேன், ரெண்டு நாள்ளே வந்துடுவோன்னு எங்கிட்டே சொன்னுரே.

கிழவர்:—அம்மாதான் செத்துப்பேட்டாளே. எங்கேந்துா வறது? அசடே!

கிட்டு:—செத்துபோறதுன்னு என்ன தாத்தா? அம்மா வரவே மாட்டாளா? என்வரமாட்டா. என்னதுக்கு அப்பா பொய்சொன்னு

கிழவருக்கு துக்கம் தொண்டையை அழுத்த, கண்களில் நீர் பெருகியது. பதில் சொல்லமுடியவில்லை.

கிட்டு தன் அப்பாவிடம், "எம்பா! நீயும், அம்மா செத்துப்பேட் டாங்கரே,தாத்தாவும் அம்மா செத்துப்பேட்டாங்கிருர். அப்படின்னு என்ன?" என்ருன்.



சுந்தரம் தன் தகப்பனுர் முகத்தைப் பார்த்தான். கிழவரும் சுந்தரத்தைப் பார்த்தார், இருவர் கண்களிலும் நீர் வீழ்ச்சியைப் போல் நீர் பெருகியது. கிட்டு கேட்ட கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் அவர்களதுதொண்டை துக்கத்தால் அடைத்துக்கொண்டது.

ஸ்ரீமதி T. V. ஜெயலக்ஷ்மி திருவேங்கடாசாரி

# கதம்பக் கொண்டாட்டம்
# கவலைத் திண்டாட்டம்.

அன்று மாலை ஸுமதி பள்ளியிலிருந்து வரும்பொழுதே வெகு குதூகலத்துடன் குதித்துக்கொண்டு "அம்மா! எங்கள் ஸ்கூலில் 'டிராமா' போடப்போகிறார்கள். அதில் எனக்கும் ஒரு 'பார்ட்' கொடுத்திருக்கிறார்கள், அதற்குவேண்டிய உடைகளை தயாரித்துத் தரவேண்டு"மென்றுகத்தஆரம்பித்தாள்."ஆகட்டும் எல்லாம்கொடுக்கிறேன். முதலில் கை, கால் சுத்தம் செய்துகொண்டு ஆகாரம் செய். பிறகு எல்லாம் ஆகட்டும்" என்று அவள் தாய் கூறி சாவகாசமாய் "என்ன நாடகம், எப்போ நடத்தப் போகிறார்கள்?" என்றாள்.

"இந்த மாதம் 16-ம் தேதி 'பெற்றோர் தினம்' வருகிறது, அதற்காக ஓர் கதம்பக் கொண்டாட்டம் நடத்தப்போகிறார்கள். அதில் 'அனார்காலி' என்னும் நாடகத்திலிருந்து சில காக்ஷிகள் காட்டப்போகிறார்கள், எனக்கு ராஜ சபையில் நாட்டியம் ஆடவும், அனார்காலியுடன் தோழியாகவரவும், 'பார்ட்' கொடுத்திருக்கிறார்கள் நல்ல ஜரிகை வேலைசெய்து, வட இந்திய நாட்டியக்காரி வேடத்திற்கேற்ற உடைகள் தயார்செய்து கொடுக்கவேண்டுமென்று மறுமடியும் குதிக்க ஆரம்பித்தாள். அவளுடைய அட்டகாஸம் பொறுக்காமல் தாயார் "போதும் போய் படி, பரீக்ஷை நெருங்கும் சமயத்தில் என்ன நாடகம் வேண்டியிருக்கு? உனக்கு வேலையில்லை, உன் உபாத்தியாயினிக்கும் வேலையில்லை," என்று அவளை அதட்டினாள்.

பாவம்! வெகு குதூகலத்துடன் ஓடிவந்த சுமதிக்குமுகம் சுண்டியது. வெளியில் சென்றிருந்த தகப்பனார் வந்ததும், பெரிய பறங்கிப் பழம் போலிருந்த சுமதியின் முகத்தைப் பார்த்து, விசாரித்து விஷயங்களை அறிந்து மனைவியை அழைத்து "ஏன் குழந்தையைக் கோபித்தாய்? நீ மிரட்டியதால் ஏதாவது படிக்கிறாளா? பாவம்! சிறுவர் சிறுமிகளின் மனதை அறிந்து இம்மாதிரி விஷயங்களில் அவர்களுக்கு வேண்டிய சகாயங்களை அளித்து உற்சாகமூட்டி அவர்களை மகிழச்செய்து பிறகு அவர்களுக்கு படிப்பின் அவசியத்தைப் போதித்தால் அவர்களும் அக்கரைவைத்துப் படிப்பார்கள். உடனே அவளை சமாதானம்செய்" என்றார். தாய் அழைத்து எல்லாம் கொடுப்பதாகக் கூறிய பிறகுதான் அவள் முகத்தில் சந்தோஷம் திரும்பிவந்து படிக்க ஆரம்பித்தாள்.

* * * *

அன்றுதான் பெற்றோர் தினக்கொண்டாட்டம். பிரதிதினமும் காலையில் வசவு 'சுப்ரபாதம்'பாடி எழுப்பவேண்டிய சுமதி அதிகாலையிலேயே வெகு சுறுசுறுப்பாக தானகவே விழித்தெழுந்து அன்னையை துரிதப்படுத்தினாள். அவளுடைய அம்மாகுழந்தைகளுக்கு நகைகளின் விலை மதிப்பு தெரியாதாகையால் தங்க நகைகள் அணிவிக்காமல், பளபளவென்று பாசிமணியினால் செய்த குண்டலங்களை காதிற்கும், கழுத்திற்கு போலி முத்துக்களாலும், ஜிகினாவினாலும்

செய்த ஹாரங்களும், கைநிறைய கண்ணாடி சரிகை வளைகளும் அணிவித்து அனுப்பினள். மாலை ஆறு மணிக்கு கொண்டாட்டம் ஆரம்பித்தது. சுமதியின் தாயாரும் காணச்சென்றிருந்தாள். சிறுமிகளின் கள்ளங்கபடற்ற முகமும், விதவித வர்ண விசித்திர உடைகளும், காண்போர் மனதைக் களிக்கச்செய்தன. சின்னஞ் சிறு குழந்தைகள் ஏதோ வேடிக்கையாக கையையும், காலையும், ஆட்டி ஆடினாலே நாம் மகிழ்ச்சியடைகிறோம். இயற்கையிலேயே ஆடும் வன்மையைப் பெற்றிருந்த சுமதியின் நாட்டியத்தை புகழாதவர்கள் கிடையாது. சிறுமிகளின் நடிப்பும், கூட்டமாகச் சேர்ந்து இளங்குரலுடன் ஒத்துப் பாடிய பாட்டுக்களும், கும்மி, கோலாட்டம் முதலியவைகளும், மழலைமொழியுடன் இங்கிலீஷ் கவிகளை அபிநயித்துப்பாடும் சிறுமிகளின் திறமையும், சபையோரை புது உலகத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டன. பொது ஜனங்களின் கூதூகலத்தைவிட இச்சிறுமிகளை வெகு சிரமத்துடன் தயார்செய்து வெற்றிகரமாக கொண்டாட்டம் நிறைவேறியதைக் கண்ட உபாத்தியாயினிகளின் சந்தோஷத்தை அளவிட முடியுமா? அவர்களின் மகிழ்ச்சி கடவுளுக்கே பொறுக்கவில்லை போலும்.

ஆம், இல்லாவிட்டால் இவ்வித பழியை அவர்களின் தலையில் சுமத்துவாரா? மறுநாள் பள்ளிக்குச் சென்ற சுமதி உடனே திரும்பி வந்து முதல்நாள் சிறுமிகள் அணிந்திருந்த மொத்த நகைகளுடன், தாயாரையோ, அல்லது வேறு பெரியவர்களையோ அழைத்துக்கொண்டு கட்டாயம் வரவேண்டுமென்று தலைமை உபாத்தியாயினி கூறியதாகச் சொல்லி அன்னையை அழைத்துச் சென்றாள். கொண்டாட்டத்தில் சேர்ந்திருந்த ஓர் சிறுமியின் சங்கிலி காணாமல்போய் விட்டதாகவும், அதற்கு உபாத்தியாயினிமார்கள்தான் பொறுப்பென்றும், அப்பெண்ணின் தந்தைவந்து மிரட்டிச் சென்றாராம். அவளுடைய தாயார், சிறுமிகள் எல்லா நகைககளையும் அணிந்து கொண்டுவந்தால் தன்னுடையது கிடைத்தாலும் கிடைக்குமென்று கூறியதால் எல்லாரையும் வரச்சொன்னார்களாம். சில குழந்தைகளின் தாய்மார்களுக்கு மிக்க கோபம் வந்துவிட்டது. சுமதியின் தாயார் அந்த அம்மாளை நோக்கி "உங்கள் குழந்தையின் அஜாக்கிரதையால் தொலைந்த பொருளுக்கு எங்களையெல்லாம் இவ்வித அவமானத்திற்கு உட்படுத்துவதா? நல்லவர்கள் தங்களதல்லாத நகையை எடுத்து உள்ளே வைப்பார்களா? இல்லை. அதை அபகரிக்கும் நோக்கமுடையவர்கள் மறுபடியும் அதை அணிந்துகொண்டு வருவார்களா? இச்சிறு விஷயம் எல்லாருக்கும் புரியக்கூடியதல்லவா? நாம் நகைகளை சிறுவர்களுக்குப்போட்டு அனுப்புவது ஒரு பிசகு. அதற்கு நாமேபொறுப்பாக அருகில்இருந்து கவனித்து அழைத்துப் போகவேண்டும். அல்லது உபாத்தியாயினியிடம் நகைகளை பொறுப்பாய் ஒப்புவித்து மறுபடியும் பெற்றுக்கொள்ளவேண்டும். ஒன்றும் செய்யாமல் நீங்கள்தான் இதற்கு பொறுப்பாளியென்பது எத்தகையபிசகு? சிறுமிகளையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் அர்த்தமில்லாமல் அலக்கழிப்பதா ஓர் கௌரவம்? பெரிய மனிதர்க

ளென்றால் எது வேண்டுமாயினும் செய்வதா? நியாயம் கிடையாதா? அன்று கூடியிருந்த கூட்டத்தில் அஜாக்கிரதையாய் போட்டுவிட்டால் யார் கையில் அகப்பட்டதென்பது? அதற்காக யார் யாரை வதைப்பது? நன்ருய் இருக்கிறதே" என்று விடுவிடென்று பேசி சுமதியை அழைத்துக்கொண்டு வீடு சென்ருள்.

பாவம்! உபாத்தியாயினிகளின் சங்கடத்தை என்னென்பது? ஒரு மாதமாக எத்தனையோ சிரமப்பட்டு குழந்தைகளை தயார்செய்து பள்ளிக்கூடத்திற்கு கீர்த்தி சம்பாதிக்க நினைத்து இப்படிப்பட்ட கஷ்டத்தையும், அவமானத்தையும், அடைந்தோமே யென்று எவ்வளவு கவலைப்படுகிருர்களோ? வீட்டில் நாலு குழந்தைகளை வைத்து சமாளிக்க தாய்மார்களால் முடிவதில்லை. ஆட்டு மந்தை மாதிரி அத்தனை குழந்தைகளையும் பொறுமையாக மேய்த்து கல்வி புகட்டும் உபாத்தினிமார்களுக்கு நாம் செய்யும் உதவி இதுதானு? பாவம்! வீட்டில்எத்தனையோ கஷ்டம் கவலைகளுடன் போராடிவிட்டுசுவல்ப சம்பளத்திற்கு வந்து, சிறுமிகளுடன் தொண்டை தண்ணீர்வற்றக் கத்தி, தாய்மார்களுக்கு, 6, 7 மணி காலம் குழந்தைகளிடமிருந்து விடுமுறை யளிக்கும் மகராஜிகளுக்கா நாம் இத்தகைய கஷ்டம் கொடுப்பது? சே! என்ன அநியாயம்' என்று இவ்வாறெல்லாம் எண்ணங்கள் தோன்றி சுமதியின் தாயை வெகுநேரம் நித்திரை கொள்ளாமல் செய்தன.

* * * *

"அம்மா! அம்மா! சங்கிலி கிடைத்துவிட்டது. நாடகத்தன்று அணிந்திருந்த புஷ்பமாலைகளையெல்லாம் ஓர் கூடையில் வாறிப்போட்டிருந்தார்கள். ஒரு பெண், பூத்தொடுக்க தனக்கு வாழைநாறு வேண்டுமென்று வாடியிருக்கும் மாலையிலிருந்து நாறை இழுக்க அத்துடன் சிக்கியிருந்த சங்கிலி கீழே விழுந்தது. உடனே அதை எடுத்து துலைத்துவிட்ட பெண்ணை அழைத்துக்காட்டவும் அப்பெண் ஓடிப்போய் தன் தாயைக் கூட்டிவந்தாள். அந்த அம்மாள் இளித்த இளிப்பைப் பார்க்கவேண்டுமே? எங்களுக்கெல்லாம் கோபம் கோபமாக வந்தது. பாவம் எங்கள் தலைமை உபாத்தியாயினி சங்கிலியை அந்த அம்மாளின் கையில் அளித்து பெரியகும்பிடுபோட்டு பிறகு "எங்கள் மானத்தையும், எங்கள் பள்ளிக்கூடத்தின் கௌரவத்தையும், காப்பாற்றிய தீனபந்துவே! உன்னை நம்பினவர்களை நீ ஒரு போதும் கைவிடமாட்டாய். இச்சிறு விஷயத்தினுல் பெற்ருேர்களுக்குப்புத்தி புகட்டினுய். இனிமேலாவது சிறுவர்களுக்கு நகைகளை அணிவித்து, துலைத்துவிட்டு பலர் மேல் பழி சுமத்தாமலிருக்கட்டும்" என்று கூறி கடவுளின் படத்தை நமஸ்கரித்தார். பாவம்! அப்பெரிய மனுஷிக்கு முகம் சுண்டைக்காய்மாதிரி சுண்டிவிட்டது" என்று கிடுகிடென்று சுமதி பாடம் ஒப்பிப்பதுபோல் மூச்சுவிடாமல் கூறினுள். பிறகுதான் அவள் தாயின் மனதை அழுத்திக்கொண்டிருந்த பாரம் நீங்கிற்று. கதம்பக் கொண்டாட்டத்தின், கவலைத் திண்டாட்டம், கருணசாகரனுகிய எம்பெருமானின் கடாக்ஷத்தினுல் ஒருவாறு நீங்கியது. கடவுளை நம்பினேர் கைவிடப்படார்.

# பாரதியாரின் சிறந்த பாட்டு

பாரதியாரின், பாடல்கள் பிரசித்திபெற்றவை. அவைகளைக் குறித்து விமரிசனமோ, அல்லது அபிப்ராயமோ எழுதுவது என்பது சுலபமான காரியமில்லை. அதிலும் 12 பாடல்களைப் பொறுக்கி எடுத்து, அதிலிருந்தும் சிலாக்யமாக ஒன்றைப் பொறுக்குவது மிகவும் கஷ்டமான பிரச்னை. கற்கண்டு மலையில் எந்தபாகம் அதிகம் இனிக்குமென்றால், என்ன பதில் அளிக்கமுடியும்? ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு விதத்தில் விசேஷஸ்தானத்தை வகிக்கிறது. இருந்தாலும், ஊன்றிக்கவனித்தால் எவ்விதமான விசேஷ அம்சங்களும் நிறைந்த பாட்டு ஒன்று புலனாகாமற்போகவில்லை. அதுதான் பாரதியின் 'பாப்பா பாட்டு.'

'பாப்பா பாட்டு' என்றதுமே நாம் அதில் வேடிக்கையும், விளையாட்டுமே எதிர்பார்க்கிறோம். ஆனால் அதை முழுவதும் வாசித்துப் பார்த்தபின்னர்தான், மற்ற பாடல்களுக்கும், அதற்குமுள்ள வேறுபாடுகள் புரிகின்றன. பாரதியின் சில பாடல்களைப் பார்ப்போம். உதாரணமாக 'பாரதமாதா, ஸ்ரீ கிருஷ்ணஸ்தோத்திரம், தமிழ், பெண்கள் விடுதலைக்கும்மி, சுதந்திரப் பொதுமை,' இவைகளெல்லாம் விசேஷமானவைகள்தான். பாரதமாதாவில், நம் பாரத தேசத்தின் புராதன வீரர்களின் தீரத்தையும், உத்தம புருஷர்கள் கண்டறிந்து சொன்ன சத்திய மொழிகளையும், தெய்வீகக் காவியங்களியற்றிய கவிஞர்களின் பெருமைகளையும், அபூர்வமாகச்சித்திரித்திருக்கிறது. 'ஸ்ரீகிருஷ்ணஸ்தோத்திரத்தில்,' நம் அடிமைத்தனத்தின் கோரத்தையும், நம் பாரதத்தாயின் விலங்குகளைத் தகர்த்தெறியும்படி ஸ்ரீ கிருஷ்ண பகவானை வேண்டுகின்ற சோகரசத்தையும் பொழிந்திருக்கிறது. 'பெண்கள் விடுதலைக் கும்மியில்' அவர்களின் சுதந்திரத்தைப்பற்றிய பெருமைகளும், 'தமிழில்' அம்மொழியின் இனிமையைப்பற்றியும், பண்டைப் புலவர்களின் மேதாவிலாசத்தைப்பற்றியும் வர்ணித்திருக்கிறது. ஆகவே, இவைகளெல்லாம் ஏதாவது ஒரு விதமான விசேஷ அம்சத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்றன. ஆனால் 'பாப்பா பாட்டிலோ இந்த அகில உலகத்தின் சூட்சமங்களுமிருக்கின்றன. குழந்தைகளும் எளிதில் அறிந்து கொள்ளும்படியான ஸரளமான நடையில், அசாதாரணமான உண்மைகளையும், தேசபக்தியையும் போதித்திருக்கிறது. ஜீவஜந்துக்களிடம் அநுதாபம் காட்டவேண்டிய முறையையும், அவைகளினால் உலகில் நாம் அடையும் சௌகர்யங்களையும் விளக்கி இருக்கிறது.

படிப்பைப்போல பாட்டுக்கும், விளையாட்டுக்கும் முக்கிய ஸ்தானத்தைக்கொடுத்து வழக்கப்படுத்திக்கொள்ளவேண்டுமாம்.

பெரியவர்களாகட்டும், சிறியவர்களாகட்டும் சில சமயங்களில் பயத்தின் காரணமாகப் பொய்சொல்லிவிடுகிறார்களென்பது நாம் அறிந்ததே. அதையும் பாரதியார் இந்தப்பாட்டில் அன்புடன் கடிந்து

கொண்டிருக்கிறார். (இது பெரியவர்களுக்கும் சேர்த்துத்தானென் பது எனது தாழ்மையான அபிப்ராயம்.)

'பொய்சொல்லக்கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா
தெய்வ நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவரமாட்டாது பாப்பா.'

உண்மையைச் சொல்ல ஒருபோதும் தயங்காதே. நமக்கு ஒருவித மான தீங்கும் வராமல், அந்த தெய்வம் துணை நிற்கும்.

எனக்கு எப்பொழுதாவது, ஏதாவது கஷ்டமோ அல்லது மன சஞ்சலமோ ஏற்பட்டால், அப்பொழுது 'பாப்பா பாட்டி'ன் கீழ்க் கண்டவரிகளை என் வாய் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

'துன்பம் நெருங்கிவந்தபோதும்—நாம்
சோர்ந்துவிடலாகாது பாப்பா
அன்புமிகுந்ததெய்வமுண்டு—துன்பம்
அத்தனையும்போக்கிவிடும் பாப்பா.'

இதைச் சொல்லுவதால் என் மனதிற்கு ஒரு ஆறுதலும் அமைதியும் ஏற்படுகிறது.

'தமிழ்திருநாடுதனைப்பெற்ற—எங்கள்
தாயென்றுகும்பிடடி பாப்பா
அமிழ்தில்இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள்தேசமடி பாப்பா.'

இந்தப்பாட்டில் தேசபக்தியைப் பற்றிச் சொல்லும்போது, நாம் உணர்ச்சி மேலீட்டால் பரவசமாகிப் போய்விடுகிறோம். நம் மனக் கண்முன் எப்படிப்பட்ட காட்சி தோன்றுகிறது? பால்மணம் மாறாத குழந்தை, தன் அழகிய சிறு கைகளை எடுத்து, பாரதத்தாயின் பவித்ர மான உருவத்தை வணங்குவதுபோன்ற ப்ரமை ஏற்படுகிறது. இல்லையா?

இன்னும் கொஞ்சம் மேலே போனால், பூகோள சாஸ்திரத்தை யும், ஹிந்துஸ்தானத்தின் உயர்வைப்பற்றியும் நாலே வரிகளில் விளக்குகிறார்.

'வடக்கில்இமயமலை பாப்பா—தெற்கில்
வாழுங்குமரிமுனை பாப்பா
கிடக்கும்பெரியகடல்கண்டாய்—இதன்
கிழக்கிலும்,மேற்கிலும் பாப்பா.'

இதன் பின்னர், தத்துவ உபதேசமும், சாதிவேற்றுமைகளைப்பற்றிய உண்மைகளும் அழகாக அமைந்திருக்கின்றன. கடைசியாக வாழ வேண்டிய முறையைப் பற்றிச் சொல்லும்போது, எல்லா உயிர்க ளிடத்தும் அன்புசெலுத்தி, தெய்வத்தை உண்மையுணர்வோடு பணிந்து, உறுதியான நெஞ்சத்துடன் வாழவேண்டுமென்பதாக முடித்திருக்கிறார். இந்த முடிவை வாசிக்கும்போது, நாமும் அப்ப டியே நடக்கவேண்டுமென்ற உறுதியோடு,பகவானைஸ்மரிக்கிறோம். இப்படி எல்லா விஷயமும் அடங்கி, நம் அனுபவத்திற்கும் ஒத்ததாக

ஸ்ரீமதி. ஜெயலக்ஷ்மீ R. ஸ்ரீனிவாஸன்

# பொறுமை

"பொறுத்தோர் பூமி ஆள்வார்" என்ற மூதுரைப்படி மானிடர்களுக்கு 'பொறுமை' மிக அவசியம். அதிலும் பெண்களுக்குத்தான் சிறந்த பூஷணம்.

தனக்கு ஏதோ தொந்திரவு ஏற்பட்டுவிட்டதென்ற எண்ணங்கொண்டு பதருமல் அமைதியுடனிருப்பதுதான் பொறுமை எனப்படும். பொறுமையுடனிருப்பதற்கு உள்ளம் உறுதியுடனிருக்கவேண்டும், உள்ளம் நெகிழ்வுற்ருல் அதிக திகில் ஏற்படும். சிற்சில சமயங்களில் நாம் செய்கிற காரியங்களின் பலன் ஏற்படுவதற்கு வெகு காலம் வரையிலும் பொறுமையுடன் காத்திருக்கவேண்டிவரும். தென்னம்பிள்ளையை நட்டு எத்தனையோ வருடங்கள் பராமரித்து வந்தபிறகுதானே காய் காய்க்கிறது. அதை நட்டுப் பராமரிக்கும் தோட்டக்காரனின் பொறுமையைப் பாருங்கள்.

யாரும் எப்பேர்ப்பட்ட கஷ்டகாலத்திலும் பதறலாகாது. ஐஸக் நியூடன் என்பவர் எத்தனையோ வருடங்கள் சிரமப்பட்டு அரிய நூல் ஒன்றை எழுதினாராம். அதை அவர் நண்பர் ஒருவர் படிப்பதற்கென்று கொண்டுபோனவர் எதிர்பாராவிதமாய் போக்கடித்துவிட்டாராம். அச்சமயம் ஐஸக் நியூடன் கொஞ்சமும் பதருமல் மறுபடியும் ஆதியோடந்தமாய் அந்நூலை எழுதி முடித்தாராம். என்னே அவர் பொறுமை!

பொறுமையிருந்தளவு காரியத்தில் ஆர்வமும் (சிரத்தை) அதிகரிக்கின்றது. பொறுமையுடன்கூட கம்பீர குணமும் அவசியம் இருக்கவேண்டும். இல்லாவிடில் தொணதொணப்பது முதலிய அருவருக்கத்தக்க குணங்கள் உதிக்கநேரிடும். நாம் நம் மாமி, நாத்தி, கணவர், மக்கள், ஆட்கள் அனைவரிடத்தும் பொறுமையுடன் நடப்பதுதான் பெருந்தன்மை, பெண்மை. எதற்கெடுத்தாலும் சின்னஞ்சிறு விஷயத்துக்கும்கூட சினந்துகொள்வது, எப்பொழுது பார்த்தாலும் கடுகடுப்புடன் முகத்தை தூக்கிக்கொள்வது, இதரரை விரட்டுவது இதனைவதும் பொறுமைக்கு நேர்மாருன செய்கைகள். இவைகளினுல் நம் சுபாவத்திற்கே களங்கமேற்படலாம். அதி

---

வருவதால் இந்தப் பாட்டு தனிப்பட்ட பெருமையும், சிறப்பும் உடையதாகத்தானிருக்கிறது. ரோஜா, மல்லி, முல்லை முதலிய புஷ்பங்கள் தனித்தனியாக இருக்கும்பொழுது அது ஒருவிதமான அழகாகத்தானிருக்கிறது. ஆனுல் எல்லாவற்றையும் சேர்த்துக் கதம்பமாகக் கட்டினுல், அப்புஷ்பங்கள் இன்னும் அதிகமான அழகோடு சோபிக்கின்றன. பாரதியின் மற்றக் கவிதைகளை ரோஜா, மல்லி முதலிய மலர்களுக்கொப்பிட்டால், இந்த 'பாப்பா பாட்டை' அம்மலர்களால் தொடுக்கப்பட்ட கதம்பத்துக்கு ஈடாகத்தான் கொள்ள வேண்டும்.

அற்ப விஷயத்துக்குங்கூட சினந்துகொண்டு நம்மைவிட எளியோர்களை நாம் தொந்திரவு செய்வது கோரமல்லவா? கடவுள் நமக்கு செல்வமும், சக்தியும் அருளியிருப்பது எதற்காக? நம்மைக்காட்டிலும் எளியவர்களுக்கு உதவுவதற்காகவன்றோ? கிழம், கைய்யாலாகாதவர்கள், நோயாளிகள் போன்ற இத்தகையவர்கள் முணகுவதோ, கூக்குரலிடுவதோ செய்தால் நாம் அருவருப்பு கொள்ளாமல் பொறுமையுடன் பணிவிடை செய்வதில் ஈடுபடுவதுதான் பெண்மைக்குகந்தது. அல்லாமல் நாம் ஒருகால் நோயுண்டு படுத்தாலும், இதர விதங்களில் கஷ்டங்கள் ஏற்படினும், உற்றார் உறவினர் இருப்பினும், இத்தகைய சமயங்களிலும் நாம் பொறுமையிழக்காமலிருப்பதுதான் அழகு.

அப்பொப்பொழுது நமக்கு ஏற்படக்கூடிய இத்தகைய எண்ணிறந்த கஷ்ட நஷ்டங்களினால் பற்பல சமயங்களில் நன்மை ஏற்படுவதுமுண்டு. கடவுள் சகல கஷ்டங்களையும் நமக்கு தீமைக்காகவே அளிப்பதில்லை. இவை மூலம் நமக்கு தைரியம், தெய்வபக்தி, தயாதாக்ஷிண்யம், பாபபீதி முதலிய நற்குணங்கள் செழிப்புறுவதற்கும் காரணமேற்படுகிறது. ஆதலால் உள்ளம் உடையாமல் பொறுமையுடன் சகல கஷ்டநஷ்டங்களையும் சகித்து வருவதால் இகத்திலும்—பரத்திலுங்கூட நற்கதி கிட்டும்.

அதிக சந்தோஷமேற்படினுங்கூட நாம் பொறுமையுடனிருப்பதே அழகு. எவனோ ஒரு பரம ஏழைக்கு புதையல் கிடைக்கையில், அவன் ஆனந்தமேலீட்டால் உயிர் நீத்தான் என்று கேள்விப்பட்டதில்லையா? ஆதலால் நன்மை, தீமை இருதரத்திலுங்கூட ஒரே மாதிரி பொறுமையுடனிருப்பது நலம்.

பொறுமையின்றி எக்காரியமும் முடிவுறாது. ஏதாவதொரு அசம்பவம் நடைபெற்றுவிட்டாலுங்கூட அதை நினைந்து நினைந்து உள்ளம் கசிவதில் என்ன பயன்? நடந்தது நடந்துவிட்டது, இனி நாம் எவ்வளவு வருந்திதான் என்ன பயன்? அத்தகைய சமயங்களில் நாம் பொறுமை இழப்பதால் நமக்கன்றி, நம் சுற்றத்தவர்களுக்கும் நம்மால் தொந்திரவே தவிர பயனொன்றுமில்லை. ஆகையால், பொறுமையைக் கடைப்பிடித்து நடப்பவர்களுக்கு எக்காரியமும் அசாத்தியமில்லை.

---

## சகோதரிகளுக்கு பரிசு

பக்தி, மௌனம், பொறுமை-மூன்றும் எவ்வளவு முக்கியமானவை! இவைகளைப்பற்றி இவ்விதழில் உங்களது சகோதரிகள் எழுதியிருப்பதைப் படித்து இன்பமுற்றீர்கள். அடுத்த இதழில் திருப்தி என்பதைக் குறித்து கட்டுரைகள் வெளியிடப்போவதுபற்றி IV-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? மோகினியிடத்தில் அபார அன்புள்ள ஸ்த்ரீ எழுத்தாளர்களுக்கென்றே இந்தக் கட்டுரைப் போட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மிகச்சிறந்ததெனத் தீர்மானிக்கப்பட்டு, பிரசுரிக்கப்படும் கட்டுரைகளுக்கு ரூ. 5/-வீதம் சன்மானமளிக்கப்படும். மோகினியில் 2 பக்கங்களுக்குமேல் வளரக்கூடாது

# ஸ்த்ரீகளும் யுத்த சேவையும்

ஸ்திரீகளின் உதவிப் படை (W. A. C.) நாளுக்கு நாள் பெருகி வருவதிலிருந்து, ஸ்திரீகள் எவ்விதம் யுத்த சேவை செய்யமுடியுமென்பது தெளிவாகிறது. சாதாரணமாக ஆண்கள் செய்துவந்த பல வேலைகளுக்குத் தற்போது ஸ்திரீகளே (பல பாகங்களிலிருந்தும், ஜாதிகளிலிருந்தும்) வந்து சேர்வதால், பல முக்கிய யுத்த அரங்க சேவைகளுக்கு அந்த ஆண்களை அனுப்பமுடிகிறது.

ரஷ்யாவிலும், சைனாவிலும், நாஜிகள் வசமுள்ள சில நாடுகளிலும் ஸ்திரீகள் போர்க்களத்திலேயே முன்னணியில் சேவைபுரிகின்றனர். இங்கிலாந்தில் பாதுகாப்புப் படையிலும், முக்கிய தொழில்களிலும் ஸ்த்ரீகள் பெருவாரியாக ஈடுபடுகிறார்கள். இங்கு இந்தியாவில் அத்தகைய நிலைமை ஏற்படாவிடினும், பல முக்கிய ஸ்தானங்களிலிருந்துகொண்டு ஸ்த்ரீகள் பெரிதும் உதவி புரிகிறார்கள்—உதவிபுரியமுடியும்—என்பது சென்ற 2 ஆண்டுகளில் நன்கு விளங்கியிருக்கிறது. எதிர் பார்த்த அளவு அதிகம் சேரவில்லையெனினும், சுமார் 7000 பேருக்கு மேலாகச் சேர்ந்திருப்பதே ஆச்சரியமல்லவா! தெற்குப்படை அரங்கத்தில்மட்டும் சுமார் 2500 ஸ்த்ரீகள் பல ஸ்தானங்களை வகித்து செவ்வனே—திறமையுடனும், சுத்தமாகவும்—தொண்டாற்றி வருகின்றனர். (தரைப்படையுடன் 1600 பேரும், விமானப்படையுடன் 700 பேரும், கப்பற்படையுடன் 200 பேரும்.) டைபிஸ்டுகளாகவும்; சாதாரண குமாஸ்தா, கணக்கு குமாஸ்தா, கிடங்கு குமாஸ்தா; துருப்புகளுக்கு ரேஷன்கள் கொடுக்கும் உத்தியோகஸ்தர்கள்; விமானப்படைக்கும் கப்பற்படைக்கும் போடோவேலைமுதல், எலக்ட்ரிக், ரேடியோ, ஸிக்னல் முதலிய பல வேலைகள் செய்து உதவுபவர்களாகவும் இதுவரை ஆண்கள் உழைத்துவந்த இடங்களில் இப்போது ஸ்த்ரீகள் அமர்ந்து நன்றாக உழைத்துவருவது ஆச்சரியமாயில்லையா? இந்த 7000 நபர்களில் சுமார் பாதிக்குமேல் இந்தியஸ்த்ரீகள். மீதி ஐரோப்பிய, ஆங்கிலோ இந்தியஸ்த்ரீகள்.

# ஸ்த்ரீகள் அளிக்கும் சிகிச்சை

அடிபட்ட சிப்பாய்களுக்கு ஒரு பெரிய மிலிடெரி ஆஸ்பத்திரியில் கண்ணியம் வாய்ந்த சில சகோதரிகள் சிகிச்சை செய்து குணமடையச் செய்கிறார்களென்ற செய்தி வெளியிடப்பட்டுள்ளது. பலூசி ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு கர்னலின் மனைவி ஸ்ரீமதி. ஜி: ஏ. ஷெர்வுட் ஒரு நூதன சிகிச்சையை நடத்தி வருகிறார். கட்டைமாதிரி விரைத்துப்போன கால்களை மடக்கவும், செத்துப்போன நரம்புகளை உயிர்ப்பிக்கவும் சிகிச்சை செய்ய ஒரு அறையில் ஏற்பாடு செய்திருக்கிறார். அவ்வறையின் சுவற்றில் பல பாஷைகளில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது. "நாங்கள் உங்களைக் குணப்படுத்த முடியாது. ஆனால் நீங்களே உங்களைக் குணப்படுத்திக்கொள்ளக் கற்பிக்க முடியும்" ஒரு பஞ்ஜாபி கர்னலின் ...வியும், ஒரு பாம்பே வியாபாரியின் மனைவியும் ஸ்ரீமதி. ஷெர்வுட்டிற்கு ...பெரும் உதவி புரிகிறார்கள், கேட்பதற்குப் பயங்கரமாக உள்ள பல சிகிச்

சைகள் செய்யப்படுகின்றன. மணல் மூட்டைகளும், ரப்பர் பந்துகளும் கூட இந்த சிகிச்சையில் பெரும் பங்கெடுத்துக் கொள்கின்றனவாம்.

சுமார் 40 ஸ்த்ரீகள் (பாதிபேர் இந்தியர்கள்) இந்த ஆஸ்பத்திரியில் பல ரஸமான வேலைகளை தினமும் செய்துவருகின்றனர். சிலர் சமையல் வேலைகளைப் பரிசீலனை செய்கின்றனர். சிலர் யார் யாருக்கு என்ன புத்தகங்கள் தேவை என்பதைக் கவனிக்கின்றனர். தையல் வேலையைக் கற்றுக்கொடுப்பதிலும், அடிப்பட்டவர்கள் சார்பாக கடிதங்களெழுதுவதிலும், அவர்களுக்கு கிராமபோன், ரேடியோ முதலியவைகளை வைத்து சந்தோஷப்படுத்துவதிலும்,யுத்த அரங்கப்படங்களை வைத்து நிகழ்ச்சிகளை குறிப்பிடுவதிலும், இதுபோன்ற இன்னும் பல வேலைகளை அன்புடனும் சலிப்பின்றியும் செய்வதில் ஈடுபட்டுள்ளனர் பலர். வாரத்திற்கு ஒருமுறை பாடகர்கள், நடிகர்கள், மாய வித்தைக்காரர்கள் முதலியவர்களைக் கொண்டு விசேஷ நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்கின்றனர். இவ்விதமாக வெல்லாம் உத்ஸாகப்படுத்தப்பட்டவர்களுக்கு, தானே குணமேற்படுவது சகஜந்தானே !

# யுத்த அரங்கத்தில்

## பேப்பரும், குண்டும்.

தினமும் நாம் "உபயோகமற்றது" என்று வீசி எறியும் காகிதம் யுத்தகளத்தில் பலவிதமாகத் தொண்டுபுரிந்து வருவது உங்களுக்குத் தெரியுமா? அல்லது 2000 வருடங்களுக்கு முன்பு பேப்பர் செய்யும் விதத்தைக் கண்டுபிடித்த சீன அறிஞர் ட்ஸ்லி-லுன் அவர்களுக்குத்தான் பிற்காலத்தில் யுத்த தடவாளங்களுக்குப் பேப்பரும் ஒரு முக்கிய அம்சமாக விளங்குமென்றுதான் தெரிந்திருக்குமா? பித்தளைக் கூட்டிலடைக்கப்பட்டுள்ளவெடிமருந்துக்கும்பித்தளைக்கும்நடுவே பேப்பர் இருக்கிறது!ஒவ்வொரு வெடியிலும் ஏதாவது முறையில் பேப்பர் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. லங்காஸ்டர் பாம்பரில் சுமார் 1000 உருப்படிகள் பேப்பரைக்கொண்டு செய்யப்பட்டவை. ஏரோப்ளேனிலுள்ள ரேடியோ செட்டில்கூட கண்டென்சர்களில் மைகாவிற்குப் பதில் காகிதமே உபயோகிக்கப்படுகிறது. நாம் படித்துவிட்டுப் போட்டுவிடும் பழைய தினசரிகளிலிருந்து செய்யப்பட்ட உரைகளில்தான் பலவித குண்டுகள் வைக்கப்பட்டு யுத்த அரங்கங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இராப்பகலாக உழைக்கும் ஒரு தொழிற்சாலை எல்லா பேப்பர் குப்பைகளையும் விழுதாக அறைத்து சுத்தப்படுத்தி மேற்குறிப்பிட்ட பல தினுசு உபயோகங்களுக்கு லாயக்காக்குகின்றது. ஆகையால் "வீண் பேப்பர்" என்பதே யுத்தகாலத்தில் கிடையாது.

* * * *

## ஒரு நாளைக்கு 1500 போட்டோ பிரதிகள்

வேவு பார்க்கச் செல்லும் விமானங்கள் விரோதிகளின் யுத்த முஸ்தீபுகளையும் நிலையங்களையும் படம்பிடித்து வருகின்றனவல்லவா? அவ்வாறு படங்களைப் பிடித்துக்கொண்டு திரும்பியதும் விமானி மறு நிமிடமே காத்திருக்கும் ஆட்களிடம் போடோ பிலிமை அளிக்க, அவர்களும் சில நிமிடங்களுள் தங்கள் வேலையைத் திறமையுடன் செய்து முடிக்கிறார்கள். எடுத்துள்ள படங்களுள் எவை முக்கியமெனக் கருதப்படுகின்றனவோ அவற்றை உடனே பல பிரதிகள் எடுத்து தரைப்படை, விமானப்படை,தலைமைஸ்தாபனம் முதலியஇடங்களுக்கு அனுப்புகிறார்கள்.

எந்த விதத்திலும் தாமதமே ஆகக்கூடாதல்லவா? ஒரு நிலயத்தி லுள்ள நிபுணர்கள்மட்டும் ஒரு நாளைக்கு சுமார் 1500 காப்பிகள் எடுத்து பல இடங்களுக்கும் உடனே அனுப்பியிருக்கிறார்களாம்.

* * * *

## நவ நாகரீக சிப்பாய்

தற்காலத்து சிப்பாயை என்னவென்று நினைத்தீர்கள்! மிக நாஸுக் கானவர்கள் அவர்கள்! சாதாரண நாட்டுபீடியும், வாசனைகலந்த தேங்கா யெண்ணெயும் போதாதாம் அவர்களுக்கு! "வுட்பைன்ஸ்," "ப்ரைல்க்ரீம்" முதலியவைதான் வேண்டுமாம். தங்களுக்குப் பழக்கமான சங்கித வாத்யங் களும் கேட்கிறார்களாம்.

# கேட்டீர்களா அதிசயத்தை!

குருடனா?

கண்டிப்பாக அவனால் பார்க்கமுடியும்.

செவிடனா!

கட்டாயம் அவனுக்குக் காது கேட்கும்.

ஊமையா?

அவன் பேசாவிட்டால் என்னைக் கேளுங்கள்!

இப்படியாகச் சொல்லிக்கொண்டு யுத்த அரங்கத்தில் திரிகிறார்கள் சிலர். சொல்லிக்கொள்வதோடு நிற்காமல் செய்தும்காட்டியிருக்கிறார்கள்! அது வும் மருந்து இல்லாத வைத்தியம். தந்திரம், மந்திரம், மனோசக்தி இவை களே கையாளப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டு வெற்றியும் பெற்றிருப்ப தால் இக் கோஷ்டியினர் எப்போதும் சேனையுடன்கூடவே இருக்கிறார் களாம். ஒரு பெரிய குண்டு வெடிக்கும்போது ஏற்பட்ட மின்னல்போன்ற வெளிச்சத்தைக்கண்டு கண்ணை இழந்த 14-ம் படை ஆபீஸர் ஒருவர் இந்த சிகிச்சையின் மூலம் பழையபடி பார்வைபெற்றுத் திரும்பவும் யுத்த சேவைக்குச் சென்றுவிட்டாராம். அதேபோல் ஒரு கூர்க்காவுக்குச் செவி டும், மற்றொருவருக்கு ஊமையும் செவிடும் போக்கப்பட்டதாம். இந்த நிபுணர்கள் இம்மாதிரி வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல், வேலை களுக்குத் தகுந்தபடி ஆள்களையும் சரியே தேர்ந்தெடுக்கிறார்களாம். கடந்த மூன்று மாதங்களில் அவர்கள் தேர்ந்தெடுத்தவர்களில் 100க்கு 95 பேர் யுத்த முன்னணிக்கும், மீதி 5 பேர் மற்ற வேலைகளுக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

* * * *

---

## "நல்லகாலம் பிறக்குது"

"நல்லகாலம் பிறக்குது! சந்தோசச் சேதி வருகுது" என்றெல்லாம் அதிகாலையில் குடுகுடுப்பைக்காரன் கூறுவதுபோல் இன்று நான் உங்க ளுக்குச் சந்தோஷச் சமாசாரம் சொல்ல முன் வந்திருக்கிறேன். உங்களது கதைகள்; கட்டுரைகள் முதலியவைகளுக்கு இதுகாறும் நீங்கள் கோரிய படி இடமளிக்க முடியாதிருந்த நிலைமை மாறி இவ்விதழ் முதல் உங்களை ஓரளவு திருப்தி செய்ய முடியும்படி சர்க்கார் கிருபை கூர்ந்து தமிழ் ஸ்திரீ களின் ஒரே செல்வியான எனக்குத் தகுந்தபடி பேப்பர் அளித்ததற்கு என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்—"மோகினி"

# 19

விருந்துக்குமேல் விருந்தும்,போட்டிக்குமேல் போட்டியுமாய் நடக்கும் ச்ரமத்தால் மாயாதேவிக்கு உடல்நலம் குறையத்தொடங்கியதால், இனி விருந்தோ பேட்டியோ போதும் என்று நிறுத்திவிட்டுப் படுக்கையிலேயே கிடந்து பரிபூர்ண ஓய்வு எடுத்துக்கொண்டாள். புண்ணியமூர்த்தியிடம் காப்டன் காந்தன் மருந்து வாங்கிக்கொடுத்தான்.

இரண்டுநாட்கள் மத்தியில் எவ்விதமான கலவரங்களோ, சம்பவங்களோ இன்றிக்கடந்தன. மூன்றுவதுநாள் காலையில் முன்புதெரிவித்தபடியே வடக்கு தேசத்திலிருந்து அனுராதாவை அழைத்துக்கொண்டு வருவதாக தந்தி வந்தது. புண்ணியமூர்த்தியே நேரில்சென்று ஸ்டேஷனிலிருந்து அழைத்துவந்தார். தமது வீடு இருக்கும் தடபுடலில் மிகவும் மெலிந்து நோய்வாய்ப்பட்டுக்கிடக்கும் அனுராதாவுக்கு வீட்டில்வந்தால் நிம்மதியாகாதென்று எண்ணி அவளைத் தமது ஆஸ்பத்திரியிலேயே தனித்த விடுதியில் சவுகரியமாக விட்டுவந்து வீட்டில் தெரிவித்தார்.

கீர்வாணி வெகு ஆவலுடன் ஆஸ்பத்திரிக்கு அப்போதே கிளம்பினாள். நிருபமாவும் கூட வருவதாக ஆசைப்பட்டதால் அவளை அழைத்துக் கொண்டுபோனாள்.

ஆஸ்பத்திரியில் படுக்கையோடு படுக்கையாகப் படுத்திருக்கும் அனுராதாவுக்கு அவளையறியாது துக்கம் எங்கிருந்தோ பொத்திக்கொண்டு வருகிறதை அவளால் தடுக்கவே முடியவில்லை. கீர்வாணியைப் பார்த்ததும் 'மாமீ !' என்று ஒரு பெரிய குரலில் வீறிடுவதுபோல் கத்திவிட்டாள்.

"அடாடா ! என்ன அழகு! என்ன வசீகரம்! இத்தனை அவஸ்தைப் பட்டும் துக்கப்பட்டும் கலங்கியிருக்கையில்கூட அந்த அத்புதவடிவின் அழகு ஒரு மயிரிழையாவது குறைந்ததா? நிருபமாவுக்கு மிஞ்சிய அழகு உலகிலேயே இல்லை என்று எண்ணிய எனக்கு அவளுக்கும் மிஞ்சிவிடக் கூடிய சுந்தராங்கியாகவன்றோ இருக்கிறாள்" என்று கீர்வாணி ஆச்சரியத்தால் தம்பித்துப்போனாள்.

சில வினாடிகள் சென்றபிறகே அனுராதாவைச் சேர்த்து அணைத்துக் கொண்டு "செல்வீ ! அழாதேம்மா ! உடம்பு அலண்டுபோகும். கடவுள் முதலில் உன்னை சோதனைசெய்தபோதிலும் சரியானபடி ஆதரவையும் காட்டிவிட்டார். இனி வருந்தாதே. விதி யாரையம்மா விட்டது? எல்லாம் அவன் செயல். அவனை நம்பினால் பயமோ, கவலையோ ஏதம்மா?" என்று சமாதானம் செய்தாள்.

ஆனால் அதே சமயம் அவள் மனத்தடாகத்தில் தன் வழியில் ஒரு நாட்டுப்பெண்ணும், தன் கணவன் வழியில் ஒரு நாட்டுப்பெண்ணும் கிடைத்துவிட்ட அதிசயத்தை - ஆனந்தத்தை - தாங்கமுடியாது புஷ்பம் போல் உணர்ச்சிகள் பரிணமித்தன. 'லலிதகுமாரியைக்கூட எப்படியாவது திருத்தி நல்வழிக்குத் திருப்பிவிட்டால் இவளுடன் ஈடு ஜோடாகிவிடுவாள். என் அதிர்ஷ்டந்தான் அழகு தெய்வங்களை பகவான் அளித்துவிட்டார்' என்று பலவிதமாக எண்ணினாள்.

நிருபமாவும் அனுராதாவின் அத்புதவடிவழகில் மயங்கிப்போய் இமை கொட்டாது பார்த்துப் பூரித்தாள்; எனினும் எக்காரணத்தினாலோ அவளையறியாது அவள் இதயத்தில் ஏதோ சங்கடம் செய்வதோடு கண்ணிலும் நீர் துளிர்த்தது. தன்னை கீர்வாணி இன்னிலைமையில் எங்கே பார்த்து விடுகிறாளோ ! என்கிற அச்சமும் கூடவே போராடியது.

அனுராதாவும் நிருபமாவை இமை இசைக்காது பார்ப்பதை அறிந்த புண்யமூர்த்தி அவள் கருத்தையறிந்து அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ‘பரதநாட்டியமாடி பண உதவிசெய்ததாகப் பத்திரிகையில் எப்போதோ பார்த்திருக்கிறேன். அந்த நிருபமாவா இவள்! ஆஹா! எனக்கு மிக்க சந்தோஷமாயிருக்கிறது. மாமா! ‘உன்னைப்போல் ஒரு பரதேசி உனக்குத் துணை இருக்கிருள்’ என்கிறீர்களே! அது யாரு!” என்ருள்.

நிருபமாவின் வரலாற்றைக்கூறி ‘இவள்தான்’ என்ருர். அனுராதா தனது பரிபூர்ண சந்தோஷத்தைத் தெரிவித்து நிருபமாவின் கைகளைச் சேர்த்துப்பிடித்துக்கொண்டு “எனக்கும் பரதநாட்டியமென்ருல் உயிர். ஏதோ சுமாராக ஆடவும்செய்வேன், அந்த அல்பஆட்டத்தை எத்தனையோ தரம் என்பிதா பொதுசங்கங்களில் வைத்து நிதிதிரட்டி உதவியிருக்கிருர். உன் கூடவிருந்து உனது நாட்டியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் எனக்கு உடம்பு குணமாகிவிடும். மாமா! நானும் வீட்டிலேயே இருக்கிறேனே! இங்கு தனியாக ஏன் இருக்கவேண்டும்? மாமீ! நான் வரட்டுமா! அழைத்துப்போகிறீர்களா!” என்று கெஞ்சிக்கேட்டாள்.

கீர்வாணியின் கண்களில் முத்துமுத்தாய் நீர் உருண்டோடியது. அதைச்சமாளித்துக்கொண்டு “அனுராதா! உனக்கு முதலில் உடம்பு நன்ருகக் குணமாகிவிட்டால்போதும். அதற்காகத்தான் உன் மாமா உன்னை இங்கு கொண்டுவிட்டிருக்கிருர். இன்று பூராவும் உன்னிடமே நிருபமாவை விட்டுச்செல்கிறேன். நானும் அடிக்கடி வந்து பார்த்துக்கொள்கிறேன். வீட்டிலிருந்தால் இத்தனை நிம்மதியாக இருக்கமுடியாது. அதனுல்தான் உன்னை இங்கு விட்டிருக்கிருர். நீ கவலேயே படாதேம்மா! இதுவும் நம்மசொந்தவீடுபோன்றுதான்; வித்யாசப்படாதே. வீட்டில் விருந்தாளிகள் வேறு வந்திருப்பதால் ஒரே சந்தடியாகவிருக்கிறது. அவர்கள் போனதும் உன்னைவந்தழைத்துக்கொண்டு போகிறேன். என்ன சரிதானே!...நிருபமா! இன்று நீ இங்கேயே இருக்கிருயாம்மா!” என்ருள்.

நிருபமா வெகு சந்தோஷத்துடன் “ஆகா! இவளைக்கண்டால் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இங்கும் தனியறையாகவே இருப்பதால் நான் இங்கிருக்கிறேன்.” என்ருள். கீர்வாணியும் அனுராதாவுடன் சொல்லிக்கொண்டு நிருபமாவைப்பார்த்து, “நிருபமா! நான் உங்களிருவருக்கும் சாப்பாடு அனுப்புகிறேன். அக்காவுக்குப்போட்டு நீயும் சாப்பிடு. நான் பகல் வருகிறேன்.” என்று கூறிச்சென்ருள்.

அனுராதா நிருபமாவைக் கையைப்பிடித்து இழுத்துத் தன் பக்கலில் உட்காரவைத்துக்கொண்டு, நிருபமாவின் அழகை அப்படியே ப்ரமித்துப் பார்த்தவாறு ஆனந்தநிலேயிலிருந்தாள். நிருபமாவும் அப்படியே அனுராதாவின் புருவவளைவுகளின் அழகையும் முகத்தின் கம்பீரத்தையும் பார்த்துப் பூரித்தாள். இருவரும் முற்றிலும் புதியவர்களாயினும் பரஸ்பரம் அவர்களையறியாது ஒரு அன்புவிதை இதயநிலத்தில் விழுந்து ஊன்றியது.

அனைதை என்கிற வழியில் இருவருக்கும் கடவுள் எத்தகைய ஒற்றுமையைக் கொடுத்திருக்கிருரோ, அதேபோல் மனஒற்றுமையையும் கொடுத்துவிட்டார்போலும். அனுராதா நிருபமாவை இழுத்துத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு “நிருபமா! எத்தனை அழகான பெயரை உனக்குச் சூட்டியிருக்கிருர்கள்? வாயாரக்கூப்பிடக்கூப்பிட இனிக்கிறது. அடாடா! நான் நோயாளியாயிற்றே என்பக்கத்தில் உட்கார அருவருக்கிருயா? நோய் தொத்திக்கொள்ளுமல்லவா?” என்று திடீரென்றுகேட்டாள்.

இதைக்கேட்ட நிருபமா இன்னும் அருகில் உட்கார்ந்து அனுராதாவை இருகைகளாலும் அணைத்துக்கொண்டு..."சே!...என்ன அக்கா இப்படி சொல்லுகிறாய்? என் மனத்திற்குப்பிடித்தவர்களுக்கு கொடிய தொத்து வ்யாதியிருந்தால்கூட நான் வெறுக்கவேமாட்டேன். என்னை வளர்த்த தாயார் ஒவ்வொரு அமாவாசையன்றும் 25 பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவார்கள். அவர்களில் பெரியவ்யாதிக்காரன்கூட இருப்பான். சற்றும் முகங்கோணுமலும் வெறுப்பில்லாமலும் வீட்டுக்குள் அழைத்து அன்னம்படைத்து உபசரித்து அவனைத்திருப்திசெய்வோம். அவரவர் தலை விதியினால் இவைகளெல்லாம் வருகின்றனவேயன்றி ஒட்டவாவது தொத்த வாவது, பகவானின் திருவடிகளை நம்பினால் அந்த ஒரு தனிசக்தி மற்ற எல்லாவற்றையும் அடித்துவிடும் என்பதுதான் எனது நம்பிக்கை. இதற் கெல்லாம் நீ வித்யாஸமாகப் பேசாதே அக்கா!" என்று ஆணித்திறமாகப் பேசியதைக்கேட்டு அனுராதாவின் உள்ளம் பூரித்தது.


பெரிய டாக்டரே ஸ்பெஷலாகக்கொண்டு ப்ரத்யேகமாக விட்டிருக் கும் பேஷண்டாகையினால் நர்ஸ்களும் டாக்டர்களும் நிமிடத்திற்கு நிமிடம் வந்துபார்த்து விசாரிக்கவாரம்பித்தார்கள். வருகிறவர்களெல்லாம் இரண்டுபேரும் போட்டாபோட்டி அழகுடன் காண்போர் உள்ளம் ப்ரமிக் கும்படியாக இருப்பதைக்கண்டு தம்மையறியாது சற்று நின்றுபார்த்து ஆனந்தமடைந்து சென்றார்கள்.

அனுராதா தற்செயலாக நிருபமாவின் கன்னத்தை உற்று கவனித் துத் திடுக்கிட்டவளாய், "இதென்ன நிருபமா! விரல்விரலாய் எழும்பியிருக் கிறதே!" என்று தடவியும்பார்த்தாள். நிருபமாவுக்கு என்னபதில் சொல்வ தென்றேதெரியாது ஒருவினாடி தவித்துப்போனாள். உடனே கடகடவென்று ஒரு சிரிப்பு சிரித்தபடியே "ஐயோ ராமா! அது உன் கண்ணுக்குப்பட்டு விட்டதா! சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது. சொன்னாலும் நம்ப மாட்டாய். நேற்றிரவு சொப்பனத்தில் ப்ரம்மாண்டமான ஆஞ்சநேயர் வந்து என்னைமிரட்டினார். நான் பயந்துபோய் "ஸ்வாமீ! என்னை ஒன்றும் செய்யாதேயும். உம்மை நமஸ்கரிக்கின்றேன்" என்று வேண்டி "ஆஞ்ச நேயம் மதிபாடலாஞ்சனம்" என்கிற ச்லோகத்தைப்பெரிதாகப்பாடி தாடை யில் பளீர் பளீர் என்று போட்டுக்கொண்டேன். சொப்பனத்தில நிகழும் சம்பவமாகவே இல்லாது நிஜமாகவே தாடையில்போட்டுக்கொண்டு பாடியு மிருக்கிறேன்போலிருக்கிறது. காலையில் எழுந்துபார்த்தால் எனக்கே சிரிப்பு தாங்கமுடியவில்லை. வலியும் தாங்கமுடியவில்லை. கனவில்கூட இப்படி உண்மை நடக்குமா?" என்று முன்கூட்டியே மறுபடியும் கடகட வென்று சிரித்தாள்.

அனுராதாவும்கூட நகைத்தபடியே, 'பேஷ்! நீ சொல்லும்போது உண் மையான ஏதோ ஒரு சம்பவத்தைக்கூறுவதாகவன்றோ நினைத்தேன். பேஷ்! கனவுதான் நினைவு, நினைவுதான்கனவு...அதிருக்கட்டும். எனக்கு பரதநாட்டியம் என்றால் உயிர்...உன் அபூர்வநாட்டியத்தை உலகமே கொண்டாடுகிறது. எங்கே! ஒரே ஒரு பதத்திற்குமட்டும் அபிநயம்செய்து காட்டுவாயா! நிருபமா! உண்மையில் எனக்கு இனி வ்யாதியே இல்லை, மருந்தேவேண்டாம். இன்று எனக்குள்ள தெம்பும் சந்தோஷமும் ஒரு யானையின் பலத்தையே கொடுத்திருக்கிறது, என் தாயாரின் மறைவுகூட எனக்கு மறந்துவிட்டதுபோலவே தோன்றுகிறது.எங்கே ஒரு அபினயம்?" என்று நிருபாவின் மோவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு கெஞ் சினாள். அதற்குமேல் நிருபமாவால் தட்டமுடியாது ஒப்புக்கொண்டாள்.

இதய ஒலி

அனுராதாவும் அழகு வெள்ளம் தேங்குவதுபோல் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். தேகம்மட்டும் மெலிந்திருந்ததேயன்றி முகத்தின் சோபை ப்ரமிக்கச்செய்தது. நிருபமா அழகான ஒரு பதத்தைப் பாடிக்கொண்டே வெகு அத்புதமாக அபிநயம் செய்வதைக் கண்டு அப்படியே அனுராதா மெய்மறந்து போய்விட்டாள் என்றால் மிகையாகாது.



அனுராதாவின் நிலைமையை மீறி அவளுடைய வாயும் இதே பதத்தைப்பாடத் தொடங்கியது. அதே சமயம் அவ்வறைக் கதவு திறக்கப்பட்டு லலிதகுமாரியும் அவளுடன் மாயாதேவி, ஸ்ரீகாந்தன், சுகுமாரன் இன்னும் இரண்டுபேர்கள் வெகு பழக்கப்பட்டவர்கள்போல் உள்ளே வந்தார்கள்.

காந்தாமணி படுத்தபிறகு நிருபமா நாட்டியமாடவே இல்லை. இன்றே முதல் முதல் நாட்டியமாடியதால் அவளுக்கு மீறி ஒரு ஆனந்தம் உண்டாகியது. தன்னை மறந்து ஆடிக்கொண்டிருந்தாள். அவ்வறையில் நாதம் வெகு அருமையாகக் கட்டுடன் ஒலித்ததால் கும்மென்ற சப்தம் ரீங்காரம் செய்தது. "ஐயன் பதமே சதமாம் மற்றனவெல்லாம், அற்பப்புழுகிற் சமமாம்" என்ற பாகத்தைப்பாடி விதவிதமான பாவத்தைக்காட்டும் சமயம் கதவு திறக்கப்பட்டதையும் பலபேர்கள் நுழைவதையும் அதிலும் லலிதகுமாரியும் சுகுமாரனும் வருவதைக்கண்டதும் சிங்கத்தைக்கண்ட மான்போல் ஒரேமிரளாக மிரண்டு நடுங்கிப்போய் நிருபமா சடக்கென்று இன்னொருபுறத்துக் கதவின் வழியாக ஓடியே போய்விட்டாள்.

அனுராதா, சரியான சமயத்தில் இவர்கள் யாரோ வந்துவிட்டார்களே என்று வெறுப்பும் அச்சமுமே தோன்றியதால் முகத்தைக் கடுத்தவாறு படுத்தாள். சுகுமாரன் கட்டிலருகில் வந்து அவளைப் பார்த்ததும் ப்ரமித்தேபோய்விட்டான். பிறகு தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்டு மற்றவர்களையும் அறிமுகப்படுத்தினான்.

மாயாவுடன்கூட வந்தவர்கள் சினிமாக் கம்பெனிக்காரர்கள். மாயாவதியும் அனுராதாவின் அழகைக்கண்டு மோகித்தே போய்விட்டாள். குஜராதி பாஷையில் சினிமாக்காரனிடம் அனுராதாவைக் காட்டி ஏதேதோ பேசினாள். நிருபமாவைத் தேடிக்கொண்டு லலிதகுமாரி வெளியில் சென்றாள். அப்போதுதான் புண்யமூர்த்தி ஒவ்வொரு வார்டாகப் பார்த்துக் கொண்டு இங்கு வரும்போது நிருபமா ஓடுவதைக்கண்டு அவளைப் பிடித்துக் கொண்டு "என்னம்மா இப்படி மிரண்டு ஓடுகிறாய்! அனுராதா என்ன செய்கிறாள்? வாம்மா குழந்தாய்!" என்று அன்பொழுக அழைத்தார்.

நிருபமாவின் முகம் வெட்கத்தாலும் துக்கத்தாலும் சுண்டி சிவந்தது. "அப்பா! நான் உள்ளே வரவில்லை. அங்கு யார் யாரோ வந்திருக்கிறார்கள், தாங்கள்மட்டும் தயவுசெய்து போங்கள். நான் அதோ, அந்த மரத்தடியிலேயே நிற்கிறேன்" என்று கூறியவாறு அவரையும் திமிறிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள்.

கம்பீரமான தோற்றத்துடன் புண்யமூர்த்தி உள்ளே வந்து இங்குள்ள கும்பலைப் பார்த்ததும் வியப்புற்றார். "ஓ! இங்கு பேஷண்டு படுத்திருக்கையில் இத்தனைபேர் கூட்டம்போட்டு பேசக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா! ஸ்ரீகாந்தா! வெளியே ஹாலில்போய் பேசுங்கள்...என்று சற்று அழுத்தமான குரலிலேயே சொன்னார்.

இதைக்கேட்ட சுகுமாரனின் முகம் சிவந்தது. "ஆமாம். பேஷண்டு எதிரில் பேசினால் ஜன்னிவந்துவிடும். தேவடியாள் சிறுக்கி கூத்தாடினால் ஒன்றுமே வராது; இல்லையா?" என்று தன்பாட்டில் சொல்லியதை மகா யூகசாலியாகிய புண்ணியமூர்த்தி கவனிக்காமலில்லை.

பலபேர் முன்னிலையில் அவனை அவமானப்படுத்திவிடவே மனது தூண்டியது, எனினும் அவன் விருத்திக்கு வரக்கூடியவன் என்கிற காரணத்தோடும், அவன் மணக்கப்போகும் பெண்ணெதிரிலேயும், அவள் பிதாவின் எதிரிலேயும் அவமானப்படுத்துவது ஆபத்தாக முடியும் என்பதாலும் அவர் தனது கோபாக்கினியைச் சற்று அடக்கிக்கொண்டார்.

நிருபமாவை வெளியில் காணாததால் லலிதகுமாரியும் உள்ளேயே வந்து நின்றாள். சினிமாக்காரனும் மாயாவதியும், அனுராதாவும் நிருபமாவும் அனாதைகளாகையால் அவர்களை வெகுசுலபமாகத் தம்வலையில் வீழ்த்தி, சீமை ப்ரயாணத்தைச் சற்று தாமதமாகத் தள்ளிப்போட்டுப் பின் இவ்விருவரையும்கூட அழைத்துப்போவது என்று முடிவுகட்டி குஜராத்தியிலேயே பேசுவதைக் கேட்ட அனுராதாவின் இதயம் துணுக்குற்றது. அவளுக்கு ஹிந்தி, குஜராத்தி, பெங்காலி, ஆங்கிலம் முதலிய சகல பாஷைகளும் தெரியும் என்பதை யாரறிவார்கள்? யாரோ அனாமதேயம் என்கிற இளப்பத்துடன் பேசும் அகம்பாவம் பிடித்தவர்களின் திமிரும் யோக்யதையும் நிமிடத்தில் அந்தப் பெண்மணி அறிந்துகொண்டதால் அவள் இதயத்தில் கூறத்திறமற்ற சங்கடம் உண்டாகியது,

## 20

ஊருக்குப் போவதாகச் சொல்லிச்சென்ற சுகுமாரன் எவ்வாறு திரும்பிவிட்டான் என்கிற சந்தேகம் கீர்வாணிக்கு பலமாக எழுந்ததால் அதை அறியவே சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். அனாவச்யமாக ஒரு அனாதைப் பெண்ணை அடித்து இம்சித்துவிட்டுச் சென்றதால் ஆத்திரம் பின்னும் மூண்டது.

தன்மடியில் முகத்தைப் பதித்துக்கொண்டு கேவிக்கேவி அழும் நிருபமாவைச் சமாதானம் செய்து தலையை நிமிர்த்தியபோது அவள் கண்

னத்தில் முரட்டு விரல்கள் சூடு போட்டதுபோல் பதிந்து கிடப்பதைக் கண்டு துடித்தாள். உடனே தேங்காய் எண்ணெயைத் தடவினாள். உதிரும் கண்ணீரைத் துடைத்த படியே தடதடவென்று மாடிக்கு ஓடினாள்.

வெகு உருக்கத்துடன் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு ஓடிய சுகுமாரன் லலிதாவை ஒரு சோபாவில் தபாரென்று உட்காரவைத்தான். இதையே பொறுக்காத லலிதா முகத்தை வெகு கடுமையாகச் சுளித்துக்கொண்டு, ‘என்ன அத்தான்! இத்தனை முரட்டுத்தனமாக இழுத்துவந்து தள்ளுகிறாயே! நாகரீகம் என்பது கொஞ்சங்கூட இல்லாது மிருகத்தனமாக இருப்பது பேஷ்! வெகு அழகு’’...என்று சீறி விழுந்தாள்.

சுகு:—உன் நாகரீகத்தின் தலையில் எரிமலை புரண்டால்கூட போதாது. நாகரீகமாம்...நாகரீகம். மனிதப் பிறவியையே பாழ்படுத்தும் சண்டாள நாகரீகத்தில் மூழ்கி குடும்பமே அழிந்துபோகிறது. உன்னுடைய பொட்டைத்தலையும் இந்த ஆண்பிள்ளை உடையும் காணச் சகிக்கவே இல்லை...உன்னைப்பற்றி நேற்று அந்த ஊழல் சபாவில் பேசிக்கொண்டதையெல்லாம் கேட்கும்போது நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போல்தோன்றியது. என்ன அக்ரமவாழ்க்கை! மாமா தான் கெட்டதுமின்றி உன்னையும் குட்டிச்சுவரடித்துவிட்டார். நீ இனிமேல் இம்மாதிரி எல்லாம் இருந்தால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது...இந்தா. இந்த நல்ல பட்டுப்புடவைகள் வெகு நாசூக்காக வாங்கிவந்திருக்கிறேன். இதை நமது இந்துக்களின் வழக்கப்படி அழகு ஜ்வலிக்க உடுத்திக்கொள்ளு. உம்...எழுந்திரு’’ என்று கூறியபடியே ஒருதோல் பெட்டியைத் திறந்து விலையுயர்ந்த சரிகை வேலைப்பாடுடன் கூடிய ஸில்குப் புடவைகளை எடுத்துக்கொடுத்தான்.

லலிதகுமாரியின் முகத்தில் கோபத்தின் சாயல் ஜ்வலிக்கிறது. “ஓகோ கோ! விவாகம் செய்துகொள்வதற்கு முன்பே கணவன் முறையில் அதிகாரம் செய்ய ஆரம்பித்துவிட்டாயா?...அத்தான்! இதை எல்லாம் பிறகு வைத்துக்கொள்ளு. அந்த பரதேசிப் பெண்ணை அடித்ததுபோல் என்னையும் மிரட்டி அடிக்கலாமென்று பார்க்கிறாயா!...நானும் அவளைப் போல் திக்கற்ற தேவடியாள் இல்லை. தெரியுமா! காப்டனின் புதல்வியாக்கும். இந்த பூச்சாண்டி வேஷப் புடவைகள் எனக்கு வேண்டாம். என்னிடம் புடவைகள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. அதன் காலில் இதைக் கட்டியடிக்கவேண்டும். உனக்கு வாழ்க்கைப்பட்ட பிறகு உன்னிஷ்டம்போலவே நடக்கிறேன். இப்போது சுதந்தரப் பறவை. என்னைக் கூண்டிலடைக்க முடியாது.’’ என்று கூறிக்கொண்டே அவன் முகத்தில் சாணியை அறைவதுபோல் அலக்ஷ்யத்துடன் போய்விட்டாள்.

மிக்கவும் ஏமாற்றமும் வருத்தமும் அடைந்து சிறு பிள்ளைபோல் விக்கிவிக்கி அழுதவாறு படுத்திருக்கையில் கீர்வாணி வெகு ஆக்ரோஷத்துடன் அங்குவந்து பார்த்தாள். இவன் புலம்புவதைக் கண்டதும் ஏதோ நடந்திருப்பதை யறிந்துகொண்டு “சுகுமார்! ஏன்? அழுகை என்ன வேண்டியிருக்கு? அனாதைச் சிறுமியை அடித்ததற்குக் கைம்மேல் பலன் கிடைத்துவிட்டதோ?’’ என்று இளப்பமாகக் கேட்டவாறு அவன் முகத்தைத் திருப்பினாள். அவனுக்கு கோபம் ஒருபுறம், வெட்கம் ஒருபுறம் பாதிக்க பேசாதிருந்தான். தாயுள்ளத்தின் சக்தி சாமான்யமானதா! ஆத்திரந்தீர மகனைத் திட்டுவதற்காகவே வந்தவளாயினும் அவன் கண்ணீர் விட உள்ளம் சகிக்குமா! பெண் தன்மையில் பிறவிக்குணமாகிய சாந்தம் உடனே உதயமாகிவிட்டது. “சுகுமார்! ஏனிந்த அழுகை? எங்கே லலித

குமாரி ?''...என்று அன்பொழுகக் கேட்டபடியே அவன் முகத்தைத் தனது முந்தாணையினால் துடைத்தாள்.

சற்று சமாளித்துக்கொண்ட சுகுமாரன் "அம்மா! இனி லலித குமாரியைப்பற்றிய பேச்சையே எடுக்காதே! என் மனங் கொதிக்கிறது"... என்று படபடத்துக் கூறி முடிப்பதற்குள், கீர்வாணி அலறியவாறு "ஆ ஆ!...என்ன முரட்டுவார்த்தையப்பா...குழந்தை, அதிலும் அடக்கி ஒடுக்கி அருமையாய் வளர்ப்பவர்களற்றுவிட்டதால் தனிக்காட்டு ராஜா வாக வளர்ந்துவிட்டது பாவம். அதனால் அவளுக்கு வ்யவகாரமே தெரிய வில்லை. அதோடு அந்த சினிமாக்காரப்பாவி யொருத்தியும் சேர்ந்துவிட்ட தால் குழந்தை பாழாகிறது. இதை ஒரு நிமிடத்தில் திருத்தி மாற்றிவிட லாம். வீணாகப் பதட்டமாய் பேசிவிடாதே...அதிருக்கட்டும். நீ ஊருக்குப் போனவன் எப்படி வந்துவிட்டாய் ?'' என்றாள்.

சுகு:—ஆமாம்...திருத்தவேண்டியதுதான். அரிவாள்மணையும் கத்தி யும் தீட்டிக்கொண்டு திருத்தும் பண்டமில்லை. அம்மா! நான் ஒரே பேச்சு சொல்கிறேன். லலிதகுமாரி எனக்கு வேண்டாம்...

கீர்:—(பதறியவாறு)...ஐயையோ! குடியைக் கெடுக்காதேடா! சுகுமார்! நான் உன் தாய் என்பதையும் உன் மாமிக்கு மரணத்தருவாயில் நான் உன்னையும் அருகில் வைத்துக்கொண்டு சபதம் செய்துகொடுத்த வாக்கையும் மறந்து பேசுகிறாயா! நீ வரவர முன்கோபமும் அனாவ்சய மான ஆத்திரமும்கொண்டு தலைகால் தெரியாமல் நடக்கிறாய். அந்த முறை யில் அவளிடமும் நீ உன் வெட்டி அதிகாரத்தைக் காட்டினால் அது பலிக் குமா! முள்மீது சீலைவிழுந்துவிட்டால் அதை மெல்ல மெல்லத்தானே எடுக்கவேண்டும். பிடித்து இழுத்தால் சுக்கல் நூறாகவன்றோ கிழிந்துவிடும். இத்தனை வயதாகியும் அது தெரியவேண்டாமா!

மாமியின் ப்ராணன் போகும்போது அவள் கூறிய பரிதாபகரமான வார்த்தைகளும் அதற்குப் பதில் நாம் உரைத்த உறுதிமொழியும் சதா என்னிதய ஒலியாக ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அதை பங்கம்செய்து கொடுத்த வாக்கைமறந்தும் செய்த ப்ரமாணத்தை நிராகரித்தும் கொடிய நரகத்திற்குச் செல்ல வழிகாட்டுகிறாயா!

சுகுமார்! இந்த அனாவச்யமான கோபத்தை அடியோடு மறந்து சாந்தத்தை அடை. மாமியின் பூத உடலை வேண்டுமானால் எரித்தாயிற்று. அவளது ஆவி தனது ஆவல் தணியும்வரையில் இங்குதான் சுற்றிச் சுற்றி அலைந்துகொண்டிருக்கும் என்பதை கனவிலும் மறக்காதே.

சுகுமார்! நீ இளங்காளை. பாபத்திற்குள்ள மகத்தான சக்தியை அறியாமல் பேசுகிறாய். கொடுத்தவாக்கைத் தவறுவதும், செய்த ப்ரமா ணத்தை மீறுவதும், முக்யமான சமயத்தில் பலரறியக் கொடுத்த தானத்தை இல்லை என்று கூறி தாமே ஸ்வீகரித்துக்கொள்ளுவதும், சத்தி யத்திற்கு அஞ்சாது நடப்பதும், பரஸ்த்ரீயை இச்சிப்பதும் எத்தகைய கொடிய சண்டாளத்வம் என்பதை நீ அறிந்தால் நடுநடுங்கிப்போய் விடுவ தோடு, கனவிலும் இத்தகைய துராக்ருதத்தை நினைக்கமாட்டாய்! இன்னும் பார்க்கப்போனால் நானே மகத்தான பாதகத்தைச் செய்துவிட்டதாக நினைக்கிறேன். இக்குழந்தையை நானே முதலிலிருந்து வளர்த்திருக்க வேண்டும். ஏதோ அறியாமையினால் உண்மையல்லாததை உண்மை என்று எண்ணி ஏமாந்தேன். மனைவியைப் பறிகொடுத்தவனின் கையி லிருந்து குழந்தையையும் பிரித்துவிட்டால் அவன் ஏங்கிப்போய்விடுவானே அவனும் அக் குழந்தைக்காக மறு விவாகம் செய்துகொள்ளாது த்யாகம் செய்கிறானே! அவனுக்கு இந்த சந்தோஷமாவது இருக்கட்டும் என்று

கம்மி குழந்தையை அவனிடமே விட்டேன். என்னுடைய அந்த மடத்தனத்தின்பலன் இத்தனை விபரீதமாகிவிட்டது; எனினும் நீ இப்படி அனுவசியமாய் என்னை நரகக்குழியில் தள்ளிவிடாதே.

ஒரு ஆத்மா கரை சேருவதற்கும் அதோகதியாகிவிடுவதற்கும் நாம் செய்யும்செய்கைதான் ப்ரதானம். ஆகையால் அனுவச்யமாக நீ வீண் பிடிவாதமோ, மனத்தில் வெறுப்போகொண்டு த்வேஷத்தை வளரவிடாதே. பரதேசிக்குழந்தையைக் கைவிட்டுவிட்டால் அந்த பாதகத்தை ஏழு தலைமுறையானாலும் கழிக்கமுடியாது மாமியின் மரணத்தறுவாயின் பரிதாபத்தை மறக்காதே. பன்றிக்குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டியும் நரகலைத்தின்னும் என்கிற பழமொழிப்படிக்கு இந்த பெண்ணின் கதியாகிவிட்டது.

சுகுமார்! நான் சொல்வது ஒன்றுமே உன் காதில் விழவில்லையா! என் வார்த்தைகளுக்கு நீ செவிகொடுப்பதாகவே தெரியவில்லையே! உன் மாமாவின் புத்தி இத்தனை கேவலமாகிவிடும். பாதாளப்படுகுழியில் விழுந்துவிடும் என்பதை அறிந்திருந்தால் மாமி இறந்த உடனே மறு விவாகத்தை நானே செய்துவைத்திருப்பேன். அவன் மனம் அப்போதிருந்த வைராக்யச் சுடரின் ஜ்வாலைக்குமுன் போக பயமாகவன்றோ இருந்தது. அத்தகைய உறுதிகூடக் குலைந்து இத்தகைய கேவலத்திற்கு வந்துவிடும் என்று நான் சொப்பனங்கூடக் காணவில்லையேப்பா...

இப்போதும் ஒன்றும் முழுகிப்போகவில்லை. இந்த சினிமாக் கூட்டங்கள் துலைந்துபோகட்டும். மனுஷ்யத்தன்மை இன்னதென்பதைக் கற்பித்து நான் அவளை சிறந்த முறையில் பழக்கிவிடுகிறேன். கூடப் பழகுவதற்குத் துணையாக உன் அத்தைமகள் அனுராதாவும் ஒரு பரதேசி வரப்போகிருள். நிருபமாதான் வெகு புத்திசாலி...மகாமேதை பரிசுத்தவதி...

என்று மேலேசொல்லிக்கொண்டு போவதற்குள், சுகுமாரன் நாகப்பாம்புபோல் சீறிவிழுந்தவாறு, "போதும் நீ துணைதேடியுள்ள அழகு. உனக்காக நான் லலிதாவைவெறுக்காது மறுபடியும் பொறுமையை வரவழைத்துக்கொள்கிறேன். நீ எனது பெற்றதாயாயிற்றே என்ற அன்பினல் நான் உன்னிடமே கேட்கிறேன், நீ என்னதான் சப்பைக்கட்டு கட்டினுலும் அந்த நிருபமா தேவடியாள் சிறுக்கி சிறுக்கிதான். காந்தாமணி வேண்டுமென்று ஒரு பொய்க்கதையைக்கட்டி அப்பாவின் தலையைத் தடவிவிட்டாள். ஊரெல்லாம் எப்படித்தான் பரிகசித்து ஏசுகிறதுதெரியுமா! அப்பா, தான் ஏமாந்ததுமன்றி உன்னையும் நன்ருக ஏய்த்துவிட்டார். வீண் இளப்பத்திற்கு இடமின்றி அந்த பெண்ணை எங்காவது அனுப்பிவிடு. அல்லது லலிதாவைப் பிரித்துவிடு. அதிருக்கட்டும். யாரோ அத்தை மகள் என்ருயே! அதாரு! புதிய நபர்கள் எல்லாம் பரதேசிப் பீடைகளாகவே திக்கற்றத் தரித்திரங்களாகவே வருகின்றதே.

சீர்:—(இடைமறுத்து)...சேச்சே...இந்த பதட்டமும் துராங்காரமுந் தான் வேண்டாமென்று நான் சொல்கிறேன். பசியால் தவிக்கும் ஆத்மாவுக்கு ஆகாரம் போட்டால் அது உயர்வா! உன் மாமனைப்போல் கொழுத்த கடாக்களுக்குப் போட்டால் உயர்வா! சுகுமார்! நெருப்பு என்ருலே வாய் சுட்டுவிடாது. நீ என்ன இன்னமும் சிறிய பாப்பா என்று எண்ணிக் கொண்டிருக்கிருயா! மனிதப் பிறவியின் மகிமையை...அதிலும் நம் இந்து தர்மத்தின் கடமையை ஒரு கடுகளவாவது உணர்ந்து நடக்கவேண்டாமா! நமது காலம் இதே மாதிரி ஒருவித நன்மையுமின்றி மிருகங்களைப்போல் கழிந்துவிட்டால் அந்த பயங்கர நரகத்தை எப்படியப்பா ஜெயிப்பது?

ஏதோ, கொஞ்சத்திற்குக் கொஞ்சம் தெய்வபக்தி, பெரியாரிடத்தில் விச்வாசம், பெரியவர்களின் பெயர் கெடாத வழியில் நடந்து அவர்களுக்கு உயர்ந்த மதிப்புக்கொடுப்பது, கூடுமானவரையில் தானதருமம் செய்து சித்த சுத்தியாயிருப்பது. ஏழைகளிடத்தில், அதிலும் திக்கற்றப் பரதேசிகளிடத்தில் தயா தாக்ஷிண்யம் காட்டி ஆதரிப்பது இதுபோன்ற உத்தம குணங்கள் இந்த இளமையிலேமுதல் சிறிதாவது இருந்தால்தானே நாம் உயர்ந்த மனிதப்பிறவி பிறந்ததன் லக்ஷியத்தை அடையமுடியும்? நாட்கள் கழியக் கழிய நாம் அணு அணுவாய் செத்துக்கொண்டு வருகிறோம் என்கிற தத்துவமே உலகில் மக்களுக்கு மறந்துவிடுகிறதுபோலும். ஒரு நிமிடம் கழிந்தாலும் அதை மறுபடியும் நாம் காணமுடியுமா! உனக்குக் குழந்தைத்தன்மை இனி வரவேண்டுமென்றால் அது வருமா! அது எப்படி மறைந்துவிட்டதோ அதேபோல்தான் நமது வாழ்வின் சகலமும்...


சுகுமாரன் இடைமறுத்து "அம்மா! இதென்ன ப்ரஸங்கமேடை என்று நினைத்தாயா? அல்லது பள்ளிக்கூடம் என்று எண்ணி உபாத்தியாயர்போல்...கீர்வாணிக்குச் சற்று கோபமே வந்தது. "சட்...சுகுமார்! நிறுத்து. நீ சொல்வதுபோல் நானே ப்ரஸங்கி. நானே உபாத்தியாயினி... பெத்த மகனுக்கும், கொண்ட கணவனுக்கும், தாயாயும், மனைவியாயும், சகலவிதத்திலும்தான் ப்ரகாசிக்கவேண்டும்.

இம்மாதிரியான போதனைகள் நீங்கள் படித்த பள்ளிக்கூடங்களில் இருந்திருந்தால் கேவலம் நீ இப்படி ஆகியிருக்கமாட்டாய். அதோடு இது போன்ற ப்ரஸங்கங்களை விடாது கேட்டிருந்தாலும் நீ தறிதலையைப்போல் பேசமாட்டாய். பாவம் அந்த அனாதைக் குழந்தையின் கன்னத்தைப் பார்த்தால் என் வயிறு எரிகிறது. சூடுபோட்டதுபோல் வீங்கித் தடித்துத் தழும்பு விழுந்துவிட்டது. எக்காரணத்தைப்பற்றி நீ அந்தப் பேதையை அனாவச்யமாக மூர்க்கத்தனத்தால் அடிக்கவேண்டும்! அவளுக்கென்ன மனிதகிக்கு இல்லையேயன்றி பணம் ஏராளமாகக் கையிலிருப்பதோடு அவளுடைய அத்புத நாட்டியத்தின் சக்தி அத்தனையும் பணமாகிக் கிடக்கிறது. மனித திக்கிற்காக நம்மிடம் அண்டியிருக்கும் பரதேசியை நான் சத்தியமாக இனிக் கைவிடமாட்டேன். இதனால் என்ன நேர்ந்தாலும் சரி. அவள் தேவதாசிப் பெண்ணேயில்லை. அப்படியே தேவதாசிப்பெண்ணாக இருப்பினும்கூட அவளை நாங்கள் கைவிடமாட்டோம். இனி இதைப் பற்றி நீ எந்தவிதமான பேச்சும் எடுக்கவேண்டாம். அவளைப்பற்றி நீ இனி ப்ரவேசிக்காதே. இந்த மூர்க்கத்தனத்தை இதோடு விடு. பாவம். த்ரௌபதை துர்யோதனனைக்கண்டு நகைத்ததற்காக அவன் என்ன அக்ரமங்களைச்செய்து எக்கதியானான்? அந்த நினைவேதான் எனக்கு வந்தது. உனக்கு ஒரு தீங்கும் நேராதிருக்கவேண்டுமே என்று பகவானை உனக்காக வேண்டினேன். நீ அத்தனை த்ரோகம் செய்தும் அந்த உத்தமச் சிறுமி அதைக் காட்டிக்கொடுத்தாளா பார்த்தாயா! இந்த ஒருகுணத்திற்கே கோடிவராகன் கொடுக்கலாமே...

சுகு:—அம்மா! எனக்குத் தலைநோவு எடுக்கிறது. அந்த மகாஉத்தமப் பெண் த்ரௌபதிதான் என்று உன் வாயினாலேயே வந்துவிட்டது. த்ரௌபதிக்கு 5 புருஷன்கள் என்றால் இந்த நவயுக த்ரௌபதிக்கு 50 புருஷன்கள்போலும். இவளுக்கு ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா ப்ரத்யக்ஷமாகி என்னைச் சபித்துவிடுவாராக்கும்......போயேன்...கதை சொல்லி...என்று இழுப்பதற்குள் ஒருநாளும் அடித்தறியாத கீர்வாணியும் சுகுமாரன் முதுகில் ஒரு அறைவிட்டபடியே, "சுகுமார்! துள்ளாதே. பெத்ததாயின் மனத்தைப்

புண்படச்செய்யாதே. உன் க்ஷேமத்தையும் நலத்தையுங் கோரும் ஆத்மாக்கள் உனது தாயும் தந்தையுந்தான் என்று தேறு. அவர்களுடைய மனம் நொந்தால் உனக்கு க்ஷேமமில்லை. ஏதோ ஒரு ஆங்கிலத்தை எ. பி. ஸி. டி. என்று ஆரம்பித்துப்படித்துவிட்டுத் தலைகீழாக. பி. எ. எம். மே...என்கிற பட்டத்தைப்பெற்றுவிட்டதனாலேயே நீ நமது மதத்தின் ஸாரத்தையும் ஆதர்சப்பெண்களின் புனிதத்தன்மையையும் அறிந்துவிட்டதாகத் துள்ளிக்குதிக்காதே. நாக்கை உள்ளடக்கிப்பேசு. பாஞ்சாலிக்கு 5 புருஷன் என்கிறதை இளப்பமாகப்பேசுகிறவன் அந்தப்பாஞ்சாலியின் அனங்யபாவமான பக்திக்கு சாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா கட்டுண்டு காத்திருந்த மகிமையையும் துகில்வளர்ந்த ஆச்சரியத்தையும், அக்ஷயபாத்திரம் பெருகிய அதிசயத்தையும் மறந்தாயா... துராத்மாக்களைப்போல் பேசாதே செவிடன்காதில் ஊதிய சங்கம்போலத்தான் உன்னிடம் நல்ல விஷயத்தைக் கூறுகிறது. சுகுமார்! ஒரேவார்த்தை. நிருபமாவின்ஜோலிக்கு இனி வந்தால் நீ கட்டாயம் எங்களைப்பிரியத்தான் நேரும். நான் உன் மாமிக்குக்கொடுத்த மரணவாக்கின் ப்ரமாணத்தைத் திரஸ்கரிக்காமல் அந்தப்பேதை லலிதாவைக் காப்பாற்று. அன்புசெலுத்து. எப்படி இருப்பினும் அவள் உன் மனைவி என்பது நினைவிருக்கட்டும்'' என்று கடுமையான தொனியில் கூறிக்கொண்டே வெளியேவந்தாள்.

கதவின் பக்கத்திலேயே நின்றிருந்த புண்யமூர்த்தி கீர்வாணியை அப்படியே தழுவிக்கொண்டு சிறுயௌவன யுவன்போல் ஆனந்தமேலீட்டால் மகிழ்ந்து, ''பேஷ்! கீர்வாணீ! சதி என்றால் நீதான் சதி...என் மனம் பூரிக்கும் ஆனந்தத்தை அளவிடவே முடியவில்லை. நிருபமாவின் கன்னத்தைச் சிங்காரித்தவன் உன்மகன்தான் என்பதை, முதலில் பயந்து நடுங்கிய லலிதாவே என்னிடம் தைரியமாக வந்துகூறினாள். அதைக் கண்டிக்கவே கோபத்துடன் வந்தேன். வந்த இடத்தில் ஸ்ரீலக்ஷ்மியின் அம்சமாகிய நீயே முன்வந்து கண்டிப்பதை அறிந்து வெளியிலேயே நின்றேன். உம்...நாம் செய்தபாவந்தான் இத்தகைய மகன் உருவத்தில் வந்திருக்கிறது'' என்றார்.



கீர்வாணி அவர் காலில்விழுந்து வணங்கி, "டாக்டர்! இந்த, விஷயத்தை நானே உங்களிடம் சொல்லநினைத்தேன். அதற்குள் லலிதாவே சொல்லி விட்டதுபற்றி மிக்க சந்தோஷம். எது எப்படியிருப்பினும் இந்த விஷயத்தை இதோடு நிறுத்திவிடுங்கள். எனக்காக சுகுமாரை ஏதும் கோபிக்க வேண்டாம். இந்த துள்ளலெல்லாம் இளம்பிராயத்தின் துடுக்காகும். இதையே திருத்தி அவனை அன்பால் மாற்றிவிடலாம். க்ருபைபுரிய வேண்டும்." என்று கெஞ்சினள்.

என்னே தாயுள்ளத்தின் மகிமை! தான் கண்டித்து அடித்தாலும் பிறர் திட்டுவதற்கு அந்த உள்ளம் சம்மதிக்காதன்றோ! இந்த அத்புத சக்தியை புண்ணியமூர்த்தியா அறியாதவர்! உள்ளுக்குள் மகிழ்ந்தவாறு, "கீர்வாணீ! கவலைப்படாதே. என்வேலையை நீயே செய்தபிறகு இனி எனக்குக் கவலை ஏது?" என்று அன்பாகக் கூறினர். கீர்வாணியின் குழம்பிய மனத்திலும் ஒரு அணுப்ரமாணம் சாந்தி நிலவியது.

## 21

வெகு முடுக்காக எழுந்து சென்ற லலிதாவின் மனதும் குழம்பியது. எந்த ஆவேசத்தினலேயோ தடதடவென்று புண்ணியமூர்த்தியிடம் தானே சென்று சுகுமாரன் நிருபமாவை அடித்துவிட்டான் என்பதை குழந்தைத்தனமாகக் கூறிவிட்டதனல், அவர் என்ன செய்வாரோ! என்பதைப் பற்றி முதலில் யோசிக்கவே தோன்ருது ஆத்திரந்தான் தலைதூக்கியது.

சொல்லிவிட்டு வந்த பிறகு புண்ணியமூர்த்தியும் உடனே கோபத்துடன் எழுந்து சுகுமாரன் விடுதிக்குப்போவதைப் பார்த்ததும் பயந்து, "என்ன செய்வாரோ! திட்டுவாரோ! சண்டை உண்டாகுமோ!" என்றெல்லாம் யோசனைகள் உண்டாயின. மிகவும் பயந்தாங்கொள்ளி சுபாவமுடையவளாதலால் தன்னறையில் போய் நடுக்கலுடன் படுத்தாள்.

அதேபோல் சுகுமாரனும் தனது தாயாரின் வார்த்தைகளைக் கேட்டதும் மாமியின் மரணப் படுக்கையில் அவள் கண்ணீர்வழியச் சொல்லிய வார்த்தைகளும் அந்தப் பரிதாபச் சம்பவங்களும் ஒரு க்ஷணநேரம் கண் முன்பு தோன்றி அவனுடைய முரட்டு உள்ளத்தையும் ஒருநொடியில் உலுக்கின. அப்போது மிகவும் சிறுமியாக இருந்த லலிதகுமாரியைத் தானே அணைத்து ஆதரித்துத் தேற்றியதும் நினைவிற்கு வந்தது.

மகா செல்லமாக வளரும் லலிதகுமாரியைக் காட்டுமுராண்டித்தனமாகக் கடிந்துகொண்டுவிட்டதால் அவள் என்ன நிலைமையிலிருக்கிருளோ! என்ன நினைக்கிருளோ! என்றெல்லாம் தோன்றி மனத்தை வாட்டியது. "அமோகமான ப்ரேமையை நான் அவள்மீது வைக்கவேண்டுமென்று நினைக்க நினைக்க அவளுடைய செய்கையும் நடத்தையும் என்னை முறியடிக்கின்றதே, என்னசெய்வேன்? என் தாயாருடைய ப்ரமாணத்திற்குக் கட்டுப்படுவதா! எனது மனப்போக்கின்படி நடப்பதா?"......

இத்யாதி குழப்பத்தினல், அன்று சாப்பிட்டுப்படுத்தவன் லலிதாவைப் பார்க்கவே இல்லை. லலிதாவும் வந்து பார்க்கவில்லை. இருவரும் மற்றவர் கோபங்கொண்டிருப்பதாகவே தனித்தனியாக நினைத்தார்கள், சுகுமாருக்கு இருக்கைகொள்ளவில்லை.

லலிதகுமாரிக்கு இந்த ஊருக்கு வரும்போது இருந்த சந்தோஷமும் உத்ஸாகமும் இந்த சம்பவத்திற்குப் பிறகு அடியோடு மாறிப்போனதால் "இனி இந்த சிடுமூஞ்சிகளிடமும், அநாகரீகக் குடுக்கைகளிடமும் ஒரு நிமிஷங்கூட சரிப்படாது. நாமும் அப்பாவுடன் சீமைக்குப் போய் மேனடுகளை ஆனந்தமாகப் பார்த்துவிட்டு வரலாம். படித்த படிப்புபோதும், இன்னும் படித்து என்னசெய்யவேண்டும்? அப்பாவின் செல்வாக்கில்

நாம்போனால்தானே உண்டு, பிறகு நம்மை யார் அழைத்துப் போவார்கள்? ஏன் இனி தயங்கவேண்டும்?'' என்று தோன்றிவிட்டதால் இரவு தடதடவென்று தன் பிதாவிடம் ஓடினாள்.

ஸ்ரீகாந்தன் ஏதோ பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். லலிதகுமாரி வெகு சஞ்சலமுகத் தோற்றத்துடன் தந்தையின் பக்கலில் உட்கார்ந்துகொண்டு, அழவாரம்பித்தாள்.

திடீரென்று அழுவதைக்கண்டு ஸ்ரீகாந்தன் நடுங்கி லலிதாவை அணைத்தபடியே! "கண்ணூ! ஏனம்மா அழுகிறாய்? என்ன சமாச்சாரம்? இந்த அநாகரீக வீட்டார் ஏதாவது உன் மனம் நோகும்படி நடந்துகொண்டார்களா! ஏன் இப்படி அழுகிறாய்?'' என்று அன்பு ததும்பக் கேட்டார்.

லலி:—அப்பா! எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லையப்பா! என்னைப் பார்த்துப் பார்த்து ஏதோ காட்டுமிராண்டியைப் பார்ப்பது போல் சிரிக்கிறார்கள். அதோடு நீங்களில்லாது இந்த இடத்தில் நான் எப்படியிருப்பது என்கிற பயம் உண்டாகிவிட்டது. அதோடு அந்த சுகுமாரன் மகா சிடுமூஞ்சி. முன்கோபி...அவன் முகத்தை

ஸ்ரீகாந்தன் இடைமறுத்து..."ஆ ஆ!...அப்படியெல்லாம் சொல்லாதேம்மா! அவன் என்ன முட்டாளா! மகா புத்திசாலி. படித்த விவேகி. ஏதோ வீட்டில் நடக்கும் கோளாறுகள் பிடிக்காது ஏதாவது சொல்லி இருக்கலாமேயன்றி அவனை நீ ஏளனமாகச் சொல்லக்கூடாது. என் தாயாரின் மரணவாக்கை நீ மறக்கக்கூடாது. அவன் உன் கணவன். அவனை நீ எப்படியும் மேன்மையாகவே பாவிக்கவேண்டும். கண்ணூ! நான்கூட ஒரு யோசனை செய்துகொண்டே இருக்கிறேன். அதாவது உன்னையும் சுகுமாரனையுங்கூட சீமைக்கு அழைத்துக்கொண்டுபோய்விடலாம் என்று உத்தேசிக்கிறேன். அவனுக்கு 4 மாதத்திற்கு லீவு இருக்கிறதாம். அதை வாங்கிக்கொண்டுபோனால் உலகத்தையும் சுற்றிப்பார்த்தாற்போலிருக்கும் உங்களிடையே அன்பும் ஒற்றுமையும் வளரும். எத்தனையோ நன்மை உண்டாகும் என்று தோன்றுகிறது. நானே உன்னை அழைத்துக் கேட்க விருந்தேன். ஹாலிவுட்டெல்லாம் பார்த்துவிட்டு வரலாம். மாயாதேவிக்கும் ஒத்தாசையாக இருக்கும். உன்னபிப்ராயமும் இப்படியேதானிருக்குமென்று நம்புகிறேன்'' என்றான்.

லலிதகுமாரிக்கு மிக்க சந்தோஷமாயிற்று. தன் மனக்குதூகலத்தைத் தெரிவித்துக் குதித்தாள். "அப்பா! நானும் உங்களோடு வரலாமா என்று கேட்பதற்காகவேதான் இப்போது வந்தேன். உங்களிஷ்டமும் என் முடிவும் ஒன்றாகிவிட்டதால் நானே நேரில் அத்தானிடம் சென்று அவரையும் வரும்படிக்குச் செய்கிறேன்'' என்று கூறியவாறு சென்றாள்.

தானாகவே சுகுமாரனிடம் செல்வதா! அவன் என்ன நினைப்பானோ? என்றும் தோன்றியதால் வெளி வராண்டாவில் அப்படியும் இப்படியுமாக உலாவிக்கொண்டிருந்தாள். தூக்கம் பிடிக்காது திண்டாடும் சுகுமாரனும் உஸ்ஸூ உஸ்ஸூ என்று பெருமூச்சுடன் அங்கே உலாவவந்தபோது பைஜாமாவும் விரித்த தலையுமாக அவள் உலாவுவதைக்கண்டு திடுக்கிட்டான்.

"என்னவிருப்பினும் அவள் சிறிய பெண்தானே, மனத்தை முறிய விட்டுவிட்டால் பிறகு கூடுவதே கஷ்டமாயிற்றே! அவளும் என்னைப்போலத்தான் மனங்கலங்கித் தவிப்பதாகத் தெரிகிறது. ஏன் நாமே போய் சமாதானப்படுத்தக்கூடாது'' என்று எண்ணியபடியே பக்கத்தில் சென்று சற்று தயங்கியபடியே, "லலிதா!'...என்று மெல்ல அழைத்தான்.

உண்மையில் லலிதகுமாரி ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு நின்ருள். அச்சமயம் தன்னைக் கூப்பிட்டதைக் கண்டு திடுக்கிட்டவளாய்த் திரும்பி, "அத்தான!... இன்னும் தூங்கவில்லையா?" என்ருள்.

சுகு.—இல்லை லலிதா! உனக்கு என்மீது கோபமில்லையே!—என்று சற்று இரங்கிய குரலில் கேட்டான்.

லலி:—அத்தான்! அந்த சம்பவத்தை அப்படியே மறந்துவிடுங்கள். முக்யமான ஒரு விஷயத்தைப் பேசவேண்டும். அப்பா நம்மிருவரையும் சீமைக்கு அழைத்துச்செல்ல தீர்மானித்துவிட்டார். அதை உங்களிடம் என்னை சொல்லச்சொன்னர்; அவரும் சொல்கிருராம். உங்களுக்கிருக்கும் நான்குமாதலீவை வாங்கிக்கொண்டால் போதும். பிறகு பார்த்துக்கொள்ளலாம். என்ன சொல்கிறீர்கள்? என்ருள்.

சுகுமாரனுக்குத் திகைப்பாயும் ஆச்சரியமாயுமிருந்தது. "சீமைக்கு என்னையும் அழைத்துப் போகிருரா?" என்று வியப்புடன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். அவனும் வெகு நாகரீகப் பேர்வழியாகையால் மேல் நாட்டுப்ரயாணம் செய்ய உள்ளூற ஆசைதான். ஆனல் அதற்கு அவன் பெற்ருேர்கள் சம்மதிப்பார்களா! என்பதுதான் பெருத்த யோசனை...... "லலிதா! எதற்கும் நாளைக்காலையில் யோசிக்கலாம். போய் படுத்துக்கொள்ளு. அப்பா இரவு காலத்தில் போலீஸ்காரனைப்போல் பாராகொடுத்துக்கொண்டே இருப்பார். இன்னும் தூங்கவில்லை என்ருல் உடல் நலம் குறையுமென்று திட்டுவார். ஒரே ஒரு வார்த்தை. நீ அந்த தேவடியாள் சிறுக்கியிடம் சேராதே...பேசாதே. என் தாயார் வார்த்தையைக்கூட நீ இதுவிஷயத்தில் லக்ஷியம் செய்யவேண்டாம். இதுதான் என் வேண்டுகோள். நீ போய் தூங்கு" என்று கூறியனுப்பி, வந்து படுத்தான்.

லலிதாவின் கோபம் சாந்தியாயிற்று என்கிற சந்தோஷம் ஒருபுறமும் திடீரென்று சீமையாத்திரை கிடைக்கவிருக்கும் அதிர்ச்சியான சமாச்சாரத்தின் கொந்தளிப்பு ஒருபுறமும் இதயத்தில் அலைபோல்மோதுகிறது. சீமைக்குப் போகவேண்டுமென்கிற ஆசை ப்ரமாதமாகப் பொங்குகிறது. தன் பிதா உத்திரவு கொடுக்கவேண்டுமே என்கிற ஏக்கமும் ஊடே புகுந்துகொண்டது. இதே எண்ணத்தில் தூக்கமின்றி புரண்டுகொண்டிருந்தான். இரவும் ஓடிக்கொண்டேயிருந்தது.

## 22

மறுதினம் காலையில் பெற்ருேரிடம் சமயம்பார்த்து உத்திரவுகேட்கத் தயாராகக் காத்திருந்தான். அனுராதா. வரும்விஷயமாக புண்யமூர்த்தி சென்றதனலும் கீர்வாணியும் நிருபமாவுடன் அங்கேயே சென்றதாலும் அவர்களைத் தனியாகப் பார்க்கமுடியவில்லை. மாமா வருகைக்காக ஒரு வாரம் லீவு வாங்கியிருப்பதால் பிறகு பார்த்துக்கொள்ளலாம், அநுராதாவைத் தானும் லலிதகுமாரியுடன் சென்று பார்த்துவிட்டு வரலாம் என்று கிளம்பினன். மாயாதேவி ஸ்ரீகாந்தன் முதலியோரும் புண்யமூர்த்தியின் புகழ்மிக்க ஆஸ்பத்திரியைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டதால் முன்பொரு அத்யாயத்தில் தெரிவித்தபடியே எல்லோருமாக அங்கு வந்தார்கள்.

புண்யமூர்த்தி வைத்தியமுறையில் சொல்லியும் அவர்கள் கேளாமல் அங்குள்ள ஆசனத்தில் உட்கார்ந்தார்கள். இந்த செய்கை அவருக்குச் சற்று வெறுப்பாகவே இருந்தது. மாயா இவர் முகத்தை மிகவும் புன்சிரிப்பு தவழ்ந்தவாறு பார்த்தபடியே, "ஓ டாக்டர்! இந்த பேஷண்டுக்குப் பேச்சு சப்தத்தினல் ஒன்றும் பலஹீனமாகாது, இத்தனை நேரம் அவள் ஆனந்தமாக நாட்டியம் பார்த்துக்கொண்டிருந்தாள். அதனல் அவளுக்கு மனச்

சந்துஷ்டியே உண்டாகியிருப்பதை நான் நேரிலேயே அறிந்தேன். மன்னிக்கவேண்டும்'' என்று ஆங்கிலத்தில் பொழிந்து தள்ளினுள்.

புண்ணியமூர்த்திக்கு பதில்சொல்லவே பிடிக்கவில்லையாதலால் பேசாமல் அனுராதாவிடம் சென்று அவள் முகம் மாறியிருப்பதைநோக்கி "குழந்தாய்! இந்த கும்பலின் ஆரவாரத்திற்குப் பயந்துதான் நான் உன்னை இங்கு வைத்தேன். அதே இறைச்சல் இங்கும் தேடிக்கொண்டு வந்துவிட்டதே. உனக்குத் தலைநோயாக இருக்கிறதா?'' என்று அன்புடன் கேட்டார்.

இதைக்கேட்ட அனுராதா "மாமா! என் நோயிக்கு நிருபமா பரம அவுடதமே கொடுப்பதுபோல் நாட்டியமாடி ஆனந்தத்தை யளித்தாள். இவர்கள் கூச்சலைவிட இவர்கள் பேச்சு என்னையே கொன்றுவிடும்போலிருக்கிறது. மாமா! தயவுசெய்து அதை கவனிக்காதுபோல் சற்று கவனியுங்களேன். விஷயம் புரியும், என் வாழ்நாளின் துன்பம் இன்றோடு துலைந்து உங்கள் வயிற்றில் மீண்டும் புனர்ஜென்மம் எடுத்ததாக நான் சந்தோஷப்படுவதற்குள் பெரிய பாறையைப் புரட்டுவதுபோல் பேசுகிறுர்களே, எனக்குப் பயமாயிருக்கிறதே'' என்று கண்ணீர்விட்டாள்.

இதைக்கேட்ட புண்யமூர்த்தி ஆச்சரியமும் அருவருப்பும்கொண்டு அவர்களைக் கவனித்தார். டாக்டராகையால் பல ஜாதிக்காரர்களுடன் பேசி சிகிச்சை செய்யவேண்டியவராதலால் அவருக்கு அனேக பாஷைகள் தெரியும். அந்த மர்மமறியாத மாயாதேவி வந்ததுமுதல் அவரிடம் ஆங்கிலமே பேசி வந்தாள்.

மாயாதேவியின் சூழ்ச்சியும் எண்ணமும் தெரிந்துவிட்டதாகையால் அவருக்குக் கோபம் அபாரமாகப் பொங்கியது. உடனே அவர் அநுராதாவின் முகத்தைத் தடவி, தட்டிக்கொடுத்து "குழந்தாய்! நீ எதற்கும் பயப்படாதே! என் ஆதீனத்தில் கடவுள் உன்னையும் நிருபமாவையும் ஒப்புவித்துவிட்ட பிறகு இனி எவ்விதமான குறைவும் உங்களுக்குநேராமல் பார்த்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நீ பயப்படாதே...

என்று சமாதானம் கூறிப்பின் மாயாதேவியிடம் தான் ஒன்றும் அறியாதவர்போல் வந்து வெகு நிதானத்துடன், "மேடம்! சங்கீதத்துடன் கூடிய நாட்டியமும், மதுரகானத்திற்கு ஒப்பான சங்கீதமும் நோயாளிகளுக்கு பரம அவுடதமாகப் பலனளிக்கும் விஷயத்தைப் பலர் அறிந்திருக்கலாம். பலர் அறியாமலும் இருக்கலாம்.

இந்த மகத்தான ரகஸியத்தை அனேகவிதமான ஆதாரங்களுடன் டாக்டர் ஆத்மநாதன் விளக்கிக் காட்டியிருப்பதை நீங்கள் பத்திரிகையில் பார்த்திருக்கலாம் (கஸ்தூரி திலகத்தைப் படித்தால் இந்த அத்புதமான விஷயத்தை நீங்களும் அறியலாம்) ஆகையால் நீங்கள் பேசுவதும், நிருபமா உன்னதமான நாட்டியம் ஆடியதும் ஒன்ருகிவிடாது. பேஷண்டுக்கு உங்கள் பேச்சினுல் தலைவலியும் இதயத்துடிப்பும் உண்டாகியதை இப்போதே நான் பரீக்ஷித்துவிட்டுவருகிறேன். ஆகையால் தயவுசெய்து அந்த ஹாலில்போய் பேசுங்கள், வித்யாஸமாக நினைக்கக்கூடாது. இம்மாதிரி சொல்வது ஒரு டாக்டரின் கடமை'' என்று நைஸாக இருபொருள் படும்படிக்குக் கூறினர்.

அதற்குமேல் அவர்கள் அடுத்த ஹாலுக்குச் சென்றுர்களேயன்றி வார்த்தை என்னவோ அதேதான் துடர்ச்சியாக்க் கிளம்பியது. மரத்தடியில் தன்போக்காக நிற்கும் நிருபமாவை மாயாதேவி சுட்டிக்காட்டிப் பேசுவதையும் கவனியாதுபோல் கவனித்தார் புண்யமூர்த்தி. அவருக்கு மிகவும்

வெறுப்பும் ஆத்திரமும் உண்டாகியது, லலிதகுமாரி அநுராதா பக்கலில் வந்து உட்கார்ந்தாள்.

இவளுடைய வேஷத்தைக் கண்டு ப்ரமிப்புடன் அநுராதா பார்த்த வாறு என்ன பேசுவது என்று தெரியாது திகைத்தாள். லலிதாவே பேச்சை யாரம்பித்து "எத்தனை நாட்களாக உடம்பு? நீ ரங்கூனில் குண்டு விழும்போது நேராகப் பார்த்தயா! உனக்குப் பயம் இல்லாம லிருந்ததா......என்று கேட்டாள்.

அநு:—ஓ! எத்தனையோதரம் குண்டுகளின் ஓசையைக் கேட்டிருக் கிறேன். பார்க்கும் ஆசையால்தான் சிலர் அனியாயமாய் மடிந்தார்கள். எங்கள்வீட்டு வேலைக்காரன்கூட நாங்கள் எத்தனைதரம் தடுத்தும் ஷெல் டரில் புகுந்துகொள்ளாமல் வீதியில் ஓடிப்போய் பார்த்ததில் பலமான அடிபட்டு நொண்டியாகி விட்டான்.

லலி:—சங்குகள் ஊதும்போது உங்களுக்கெல்லாம் பயமாயிருக்க வில்லையா!

அநு:—முதல்தரம் சற்று பயமாகத்தான் இருந்தது. பழகிவிட்டால் சகஜமாகிவிடுகிறதல்லவா? பாவம். உயிரையே த்ருணமாகக் கருதி எத்தனையோ வீரர்கள் த்யாகச்சுடராக மாறிப்போய் பெண்டு பிள்ளைகள், ஊரு, வீடுவாசல் முதலியவற்றை உதறித் தள்ளிவிட்டு பட்டாளத்தில் சேர்ந்து சண்டைக்கு உழைக்கத் தயாராயிருக்கும்போது இந்த ஊதலுக் கும்,வெடிச்சத்தத்திற்குமே பயந்துவிட்டால் பின்னல் என்ன இருக்கிறது!... நிருபமா...நிருபமா!...என்று கூப்பிட்டாள்.

லலி:—அடாடா! பார்த்த நிமிஷத்திற்குள் ஸினேகமாகிவிட்டாளா! அவள் யாரென்று உனக்குத் தெரிந்தால் நீ அவளுடன் பேசவேமாட்டாய். அவள் தேவடியாள்ஜாதிப் பெண்ணையிற்றே!...

அநு:—என்ன! என்ன! தேவடியாள் ஜாதியா... நிருபமாவா... நிச்சயமாகவா!...அவளைப் பார்த்தால் அப்படி இல்லவே இல்லையே.

லலி:—நான்கூட அப்படித்தான் ஏமாந்தேன். எங்க அத்தான்தான் உண்மையைக்கூறி அவளுடன் சேரக்கூடவேண்டாம் என்று தடுத்து விட்டார். நாம் எத்தனை உயர்ந்த குடும்பப் பெண்கள்! அவள் கேவலம் தாசிப்பெண். நமக்கும் அவளுக்கும் எத்தனை தூரமிருக்கிறது?

இந்த வார்த்தை அநுராதாவின் மனத்தை ஏதோ செய்தது. முகமும் சுண்டிச் சுருங்கியது. அச்சமயம் அநுராதாவைப் பார்க்கவந்த சிவகுமா ரன் லலிதகுமாரியின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டே வந்தான். ஏற்கெனவே லலிதாவைப் பிடிக்காத சிவகுமாருக்கு இந்த விஷம ப்ர சாரத்தைக் கேட்டதும் பின்னும் கோபம் மூண்டது. என்னதான் நடக்கிற தென்று சில விநாடிகள் மவுனமாக நின்றான். 'வனமோகினியோ! தேவ மாதோ! ஜகன்மோகன ஸௌந்தர்ய தேவதையோ!' என்று சிவகுமாரன் அநுராதாவைக் கண்டு ப்ரமித்து நின்றான்.

நல்ல அழகும் கம்பீரமும் உள்ள எவரையும் யார் பார்த்தாலும் சற்று வியப்புடன் இமை இசைக்கும் நேரம் பார்ப்பது இயற்கைதானே. சில விநாடிகள் சென்றதும் லலிதாவின் வார்த்தையால் அநுராதாவின் முகம் சுண்டுவதைக் கண்டதும் பெரிதாக கனைத்துக்கொண்டே எதிரே வந்தான்.லலிதாவை ஏளனமாகப் பார்த்தவாறு "ஓ! இந்த விஷம புத்திகூட உனக்கு இருக்கிறதா! பேஷ்! உன் அருமையான சிற்றன்னையைப்போல் சினிமா நக்ஷத்திரமாக இல்லையே என்று குறைபடுகிறாயா! வீணாக ஒரு பரதேசிப்பெண்மீது அபாண்டத்தைக் கூறி நீ அதிகப்ரஸங்கி ப்ரசாரம் செய்யவேண்டாம். மரியாதையாக நடந்துகொள்ளு...அநுராதா! நான்

இதய ஒலி

யாரென்று தெரிந்திருக்கலாம். நான் உன் மாமனின் இளைய குமாரன்தான். அன்னியனில்லை... என்று முடிப்பதற்குள் லலிதா விற்றென்று போய்விட்டாள்.

அனுராதா வியப்பே வடிவாக...“ஹா !...சிவகுமாரா!... வாருங்கள். உட்காருங்கள். எனக்கு பகவான் எத்தனைவிதமான கஷ்டங்களை ஒரே நொடியில் கொடுத்துச் சோதித்தபோதிலும் அதற்கு நேர்மாருக ஒரேயடியான சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்துவிட்டதால் பேசக்கூடத் தெரியவில்லை” என்ருள்.

சிவ:—அதனுல்தான் அப்பா உன்னை வீட்டிற்கு அழைத்துவரல்லை. இந்த ஸினிமாக்கூட்டம் துலைந்துவிட்டால் போதும்போலவிருக்கிறது. அநுராதா! நாகரீக நங்கையின் அனியாய வார்த்தையை நீ நம்பாதே. அந்தப் பரதேசிப் பெண்ணும், நம்மைப்போன்ற உயர்ந்த குலத்துப் பெண்தான். பிறகு விவரத்தை நீயே அறிவாய். அப்பாவே உனக்குச் சொல்வார்.

இதற்குள் புண்ணியமூர்த்தி அங்குவந்தார். “சிவகுமார்! இந்த சினிமாக்காரி லேசுபட்டவளல்ல. அவள் வார்த்தையாகிற பாணத்தினலேயே இப் பேதையின் உள்ளத்தை நோகவடித்துவிட்டாள். அவளுடைய் சகவாஸமே எனக்குப் பிடிக்கவில்லை. உன் தாயாருக்காக பார்க்கிறேன். இல்லாவிட்டால் எனக்கிருக்கும் கோபத்தில் கெடௌட் என்று தாக்ஷிண்யம் பாராமல் கூறியிருப்பேன். அநுராதாவையும் நிருபமாவையும் தங்களுடன் சிமையாத்திரைக்கு அழைத்துப்போவதாயும் அவர்களையும் பக்கா நக்ஷத்திரமாக்கிவிடவேண்டுமென்றும், நாதியற்ற அனதைகளாகையால் கேட்பாரில்லை என்றும் பெரிதாகப்பேச்சு நடக்கிறது. இந்த அக்ரமத்தை உன் தாயாரிடத்தில் நைஸாகச்சொல்லி இந்த சினிமாக்கூட்டத்தைக் கிளப்பவழிசெய்யவேண்டும். பாவம்! அவளும் மனத்தை நொந்துகொள்ளுகிருள் என்ன செய்வது? கிணறுவெட்டப் பூதம் கிளம்பியதுபோலல்லவா விவகாரம் முடிந்திருக்கிறது” என்று விசனத்துடன் கூறினர்.

இதைக்கேட்கும் அநுராதாவுக்கு இவர்கள் பேசியது ஒன்றுமே புரியவில்லை எனினும் அதைக்கேட்கவும் அவள் துணியவில்லை, ஏதோ குசமுச மர்மம் இருப்பதை ஒருநொடியில் உணர்ந்தாள். அவள் மனம் நிருபமாவின் வரவையே எதிர்பார்த்தது. கண்களும் அவளையே தேடின. அந்தக்குறிப்பறிந்த புண்யமூர்த்தி “செல்வி! நீ தேடும் சகி வந்துவிடுவாள்; கவலைப்படாதே. உன் சினேகமும் அன்பும் அப்பரதேசிப்பெண்ணுக்கு ஒருபுதையல் கிடைத்ததுபோலும், மலடிக்கு ஒரு மகன்பிறந்ததுபோலும் இருக்கிறது. உங்களன்பு இங்ஙனமே வளரவேண்டும்” என்றுவாழ்த்தினர்.

அச்சமயம் மிகவும் பயந்தபடியே நிருபமா கதவருகில் எட்டிப் பார்த்தாள். புண்யமூர்த்திமட்டும் நிற்பதைக்கண்டு, “அப்பா! பெரிய அண்ணு போய்விட்டார்களா” என்று மிக்க நடுக்கத்துடன் கேட்டாள். இதைக் கேட்ட அவர் பரிதாபமும் அன்பும் நிறைந்த பார்வையுடன், சென்று நிருபமாவை வாஞ்சையுடன் நோக்கி, “உம். பெரிய அண்ணுவாம்! பெரிய அண்ணு பவிஷைப்பாரு” என்று தனக்குள் முணுமுணுத்தவாறு அவளை அழைத்துவந்து அனுராதாவின் பக்கலில் உட்காரவைத்தார். தோழிகள் இருவரும் அன்பு ததும்ப ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

இதற்குள் லலிதா எழுந்து சுகுமாரனைத் தேடிக்கொண்டு சென்று ஏதேதோ கலகமூட்டிய ரகஸியம், சுகுமாரன் சற்றுதூரத்திலிருந்து சிவகுமாரனையும் புண்ணியமூர்த்தியையும் கடுகடுவென்று வெடிக்கும் முகத்துடன் பார்ப்பதிலிருந்து நன்கு தெரிந்தது. ஆனல் புண்யமூர்த்தியா அதை லக்ஷியம்செய்பவர்! அவன் முறைப்பிற்கு ப்ரதியாக ஒரு புன்முறுவல் அவரது சாந்தம் நிறைந்த முகத்தில் லேசாகத்தவழ்ந்தது.

## மோகினி அன்பர்களுக்கு விசேஷச் செய்தி.

யுத்தத்தின் தாண்டவத்தினால் ஏற்பட்ட காகிதப் பஞ்சத்தின் காரணமாக மோகினி வெளியீடுகள் பல உங்களுக்குக் கிடைக்காமலிருக்கின்றன. சென்ற சில மாதங்களில்மாத்திரம் நமது நாவல்கள் சுமார் 20,000 பிரதிகள்வரை நம் துருப்புகளுக்காக ஆர்டர் செய்யப்பட்டிருக்கின்றன. நம் நாட்டிலுள்ள அன்பர்களுக்கும், உயிரையே த்ருணமாகக் கருதி யுத்த சேவை புரிய வெளிநாடு சென்றுள்ள நம் தமிழர்களுக்கும்—எல்லோருக்கும், வேண்டிய பிரதிகளைத் தந்து மகிழ்விக்க காகிதப் பஞ்சம் குறுக்கே நிற்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சமீபத்தில் காகித நிலைமை சிறிது மாறுதலடைந்திருப்பதால் பல தினுசு பேப்பர்களை வாங்கி புதிய பதிப்புகளைத் தயாரித்து வருகிறோம். பேப்பரின் விலைக்குத் தகுந்தமாதிரியும், பக்கங்களுக்குத் தகுந்தமாதிரியும் ஒவ்வொரு புத்தகத்தின் விலையையும் நிர்ணயித்திருக்கிறோம். அன்பர்களின் ஆதரவு எப்போதும்போல் பரிபூர்ணமாயிருக்குமென்றே திடமாய் நம்புகிறோம். கீழ்க்கண்ட மூன்று நவீனங்களும் தயாராகிவிட்டன—மூன்று தினுசு பேப்பரில்; ஆனால் மூன்றும் ஒரே விலைதான்.

| | | |
|---|---|---|
| 62. பிரார்த்தனை— | (Calcutta glazed)— | ரூ. 1/- |
| 46. வத்ஸகுமார்— | (Mysore white)— | 1/- |
| 11. வீரவஸந்தா— | (Punalur unbleached)— | 1/- |

உங்களுக்குத் தேவையான புத்தகங்களுக்கு முன் பணம் அனுப்பவும். தபால் செலவு இனம். ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் வேண்டுமாயின் 3 அணா சேர்த்து அனுப்பவும். ரூ. 3/- அனுப்புவோருக்கு ஷை 3 பிரசுரங்களும் ரிஜிஸ்டர் போஸ்ட்மூலம் அனுப்பப்படும். V. P. கிடையாது. —மானேஜர்.

---

# நாரீமணிகளின் நவரஸ விருந்து

- சிறு கதைகள்
- கட்டுரைகள்
- நாடகம்
- யாத்திரை
- வாழ்க்கைக் குறிப்பு
- சரித்திரம்
- ஹாஸ்யம்
- சங்கீதம்
- சித்திரங்கள்

யாவும் நிறைந்த அரிய வெளியீடு

# நந்தவனம்

வஸந்தருது மலர்.

---

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL.

ஜகன்மோகினி

Jaganmohini – Regd. No. M. 2210

## ஸ்த்ரீகளின் பிரத்தியேக வெளியீடு

# நந்தவனம் வஸந்தருது மலர்





**ரூ. 1—8—0**

ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் 1—11—0

**முற்றிலும் புத்தப்புதிய மலர்களைத் தாங்கி**

வைகாசி கடைசி வாரத்தில் வெளிவருகிறது.

**உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்தாயிற்றா?**

---

**"ரெட் கிராஸ்" & "ஸென்ட் ஜான்"**

# வேண்டுகோள்

**நிதி வசூல் ஆரம்பமாகிவிட்டது!**

குறிக்கப்பட்டுள்ள தொகை 30 லக்ஷம்!

## இந்திய யுத்த வீரர்கள்

**நோயுடனோ, காயம்பட்டோ**

**யுத்தக் கைதியாகவோ உள்ளபோது**

அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யளிக்க

**நம்மை எதிர்பார்க்கிறார்கள்**

**தாராளமாக நன்கொடையளித்து**

அவர்களுக்கு உதவி செய்ய முன்வாருங்கள்